Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16+24 | விலை 40 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :273 ஆவணி 13 ஆம் நாள் சனிக்கிழமை 29 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"அப்ப இண்டைக்கு வவுனியாவில இடியுடன் கூடிய புயல் மழைதான் பாருங்கோ!"

# சிங்களவர்களை மதிக்காவிடின் விக்கியும் சுட்டுக்கொல்லப்படுவார்



## நாடாளுமன்றில் பொன்சேகா நேற்றுப் பகிரங்க எச்சரிக்கை

**கொழும்பு, ஓகஸ்ட் 29**

சிங்களவர்களைக் குறைத்து மதிப்பிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்படுவார் என்ற தொனியில் நாடாளுமன்றில் வைத்து பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா. 15 >

## கணக்கறிக்கை ஏகமனதாக நிறைவேற்றம்

கொழும்பு, ஓக. 29

2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்கான 1.3 ரில்லியன் ரூபா இடைக்காலக் கணக்கறிக்கை நாடாளுமன்றத்தில் எதிர்ப்புகளின்றி நிறைவேற்றப்பட்டது. (ஓ.5)

## உண்மை பொய்யாகாது பொய் உண்மையாகாது

### ஆணைக்குழுவை அமைத்து உண்மையை கண்டறியுமாறு விக்னேஸ்வரன் சவால்



கொழும்பு, ஓக. 29

எனது கருத்துத் தொடர்பில் வீணாக குழப்பம் அடையாமல் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வரலாற்று ஆய்வாளர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவை 15 >

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்த இதுவே சரியான தருணம்

### விக்கி முழக்கம்

கொழும்பு, ஓக. 29

தமிழ் மக்கள் அரசியல் இலக்குகளில் ஆர்வத்தை இழந்துவிட்டார்கள் என்றும் பொருளாதார சலுகைகளையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றும் தேர்தல் முடிவடைந்த பின்னர் சிலர் கூற விழைந்துள்ளார்கள். அது உண்மையானால், வடக்கு -கிழக்கில் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பது தொடர்பில் சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பை 15 >

## தமிழ் மொழிதான் முதல் மொழி உங்களால் முடிந்ததை செய்யுங்கள்

### செல்வம் எம்.பி. சவால்

கொழும்பு, ஓக.29

தமிழ் மக்கள் எதிர்த்த 'மொட்டு' அணியினர் கூட அமைதியாக இருக்கும்போது, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் கௌரவத்தைப் பாதுகாத்த தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் எதிராக 15 >

## பௌத்தத்துக்கான முதலிடத்தை சவாலுக்கு உட்படுத்த முடியாது

### நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவிப்பு

கொழும்பு, ஓக: 29

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதாக அரசமைப்பின் 9 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு சவால் விடவோ எதிர்க்கவோ முடியாது. இவ்வாறு நீதி அமைச்சர் 10 >

## வவுனியாவில் இன்று கூடுகின்றது தமிழரசு

யாழ்ப்பாணம், ஓக. 29

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

வவுனியா குருமன்காடு ஹோட்டல் பிறின்ஸஸ் ரோஸ் விடுதியில் 'கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நியமன விவகாரம், நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு உள்ளிட்ட பல்வேறு 11 >




## வசந்த் அன்ட் கோ உரிமையாளர் கொரோனாவால் நேற்று மறைவு!

இந்தியாவின் பெரும் வர்த்தக நிறுவனமான வசந்த் அன்ட் கோவின் அதிபரும் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்தகுமார் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்தார். (ம)

## பாலத் திருத்தத்தின்போது மண் சரிவில் சிக்கிச் சாவு

### கிளிநொச்சியில் துயரம்



15 >

## மணியை கட்சியிலிருந்தே தற்காலிகமாக நீக்க முடிவு?

யாழ்ப்பாணம், ஓக. 29

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியிலிருந்து வி. மணிவண்ணனைத் தற்காலிகமாக நீக்கமுடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. 10 >

## மக்களே அவதானம்!!!

### 'உதயனின்' பெயரை பயன்படுத்தி மோசடி

யாழ்ப்பாணம், ஓக. 29

'உதயன்' பத்திரிகையின் பெயரைப் பயன்படுத்தி சில கும்பல் 11 >

## சாதாரணதர பரீட்சை ஜனவரி 18 இல்

கொழும்பு, ஓக.29

இந்த ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார். இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளதாவது: 10 >

உள்ளே...

திட்டமிட்டே தவறிழைத்தார் தமிழரசு செயலாளர்!



சஞ்சீவி

# கூட்டுறவுத்துறையாலேயே பொருளாதாரம் மேம்படும்!

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

வடமாகாண உற்பத்திகள் மற்றும் தேவைகள் தொடர்பிலான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுவதோடு வெளிமாவட்ட கொள்வனவுகளைத் தவிர்ப்பதன் மூலமாகவே கூட்டுறவுத்துறையை மேம்படுத்த முடியும் என்று வடக்கு ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.



வட மாகாணக் கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் முகாமையாளர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலொன்று வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மாகாணத்திலுள்ள பெரும்பாலான கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் வளர்ச்சியடையாமலும் சில சங்கங்கள் இயங்காமலும் உள்ளதாக எனக்களிக்கப்பட்ட அறிக்கையினூடாக அறிந்து கொண்டேன். அப்படிப் பார்க்கும் போது கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகள் எனக்குத் திருப்தியாக இல்லை.

இலங்கை மட்டுமல்ல உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியென்பது கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது. சீனாவிலுள்ள பெரும்பாலான வங்கிகள் விவசாய வங்கிகளே. இத்தாலி நாட்டிலுள்ள பெரும்பாலான பல் பொருள் அங்காடிகள் கூட்டுறவுத்துறையினரதே. அங்கிருக்கும் இறைச்சி, பற்பசை உட்பட அனைத்தும் கூட்டுறவுத்துறையின் தாயாரிப்புக்களாகவே காணப்படுகின்றன.

எனவே, கூட்டுறவுத்துறையென்பது ஒரு நாட்டின் முதுகெலும்பாக அமைகின்றது. ஆனால், எமது மாகாணத்தில் அத்துறை ஒரு தோல்வியின் துறையாக மாறிக்கொண்டிருக்கின்றது. மாகாண அரசு எவ்வளவு முயன்றும் முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. அதற்கு கூட்டு உறவாக இல்லாமல் தனிமனித சிந்தனையு ள்ளவர்களாக நாமிருப்பதுதான் காரணமாக இருக்குமோவெனநான்நினைக்கின்றேன். மக்களோடு இணைந்திருக்கும் ஒரு திணைக்களம்தான் இந்தக் கூட்டுறவுத் திணைக்களம். அதற்குப் பரந்த செயற்பாடுகளும் அதிகாரங்களும் இருக்கின்றன. அதனூடாகப் பல கடமைகள் இருக்கின்றன. எமது பொருளாதாரத்தையும் தங்களின் வர்த்தக செயற்பாடுகளையும் வளர்த்தெடுப்பதற்கான பொறுப்புக்கள் கூட்டுறவுத்துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், அப்படிப்பட்ட ஒரு துறையின் செயற்பாடுகள் சீரான முன்னேற்றப் பாதையில் இல்லையென்பதே கவலையளிக்கின்ற விடயமாகவுள்ளது. சீரழிந்துபோயிருக்கின்ற எமது மாகாணத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் மக்களோடு மக்களாகவிருக்கும் கூட்டுறவுத்துறையின் செயற்பாட்டில்தான் உள்ளது.

தனிமனித செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் தவிர்த்துப் பொது நலனில் அக்கறை கொண்டவர்களாக கூட்டுறவுத்துறையைச் சார்ந்தவர்கள் செயற்படவேண்டும். அப்போதுதான் மாகாணசபையின் ஒத்துழைப்பை தொடர்ந்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க முடியும். கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியின்மை தொடர்பான தெளிவானதும் துல்லியமானதுமான அறிக்கையை கூட்டுறவுத்திணைக்கள ஆணையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் எனக்குச் சமர்ப்பிக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சியிலும் செயற்பாடுகளிலும் ஒத்துழைக்காத அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம)

# சிறீதரன் பதவி விலகினால் உடன் பதவிவிலகத் தயார்!

## *தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி உப செயலாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 29

அண்மையில் சாவகச்சேரியில் அந்தத் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் நடந்த பரப்புரைக் கூட்டம் ஒன்றில், புங்குடுதீவைச் சேர்ந்த குணாளன் என்பவரை கட்சியிலிருந்து நீக்கினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, நடைபெறுகின்ற பொதுத்தேர்தலில் தோல்வியுற்றாலும் அவருக்கு எனது நாடாளுமன்ற ஆசனத்தை வழங்குவேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்திருந்தார். அவ்வாறு செய்வதாக ஊடகங்கள் முன்னிலையில் சி.சிறீதரன் தெரிவிப்பாராயின் எனது பதவிவிலகல் கடிதத்தை கையளிக்கத் தயாராக உள்ளேன். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணியின் உப செயலாளர் க.குணாளன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது

உண்மையிலேயே எனக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் இடையில் எந்தவிதமான தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளோ அல்லது ஏதேனும் தனிப்பட்ட பிரச்சினைகளோ இருக்கவில்லை. நானும் சில இளைஞர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் போன்றவர்களும், எமது உயிரைப் பணயம் வைத்து ஈ.பி.டி.பியின் கோட்டையாகக் கருதப்பட்டிருந்த தீவகத்தை பெருமளவில் மீட்டிருந்தோம். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் மேற்படி சிவஞானம் சிறீதரன் கட்சியின் மூலக்கிளைகள், வாலிப முன்னணி போன்றவற்றின் தீர்மானங்களைப் புறக்கணித்து கட்சி உறுப்பினர்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி தன்னிச்சையாகவே தீவகத்தில் பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பதவி விலகினால் விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த நிலையில் உள்ள சசிகலா ரவிராஜ் அல்லது ஈ.சரவணபவன் அந்தப் பதவியைக் கைப்பற்றக் கூடுமென சிலர் கூறக்கூடும். அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள மாவை சேனாதிராசாவுக்கே மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சென்றடையும் எனும் உத்தரவாதத்தை அவர்களிடமிருந்து நான் பெற்றுத்தரத் தயாராகவே இருக்கின்றேன் என்றுள்ளது. (எ)

# தமிழ்மொழி விருத்திக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 29

தமிழ்ப்பாட ஆசிரியர்களின் மொழித்திறனை விருத்திசெய்து அவர்களுக்கு பட்டயக்கல்வி பட்டம் வழங்குதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத் தலைவருமானவை.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்க செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

# மன்னாரில் கரையொதுங்கியது இந்திய நாட்டுப் படகொன்று!




மன்னார், ஓக. 29

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை படகொன்று கரையொதுங்கியுள்ளது. இந்தப் படகில் 'ஜோசப் இம்மானுவேல்' என்னும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கரையொதுங்கிய படகு இந்தியாவைச் சேர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரை ஒதுங்கிய படகு தொடர்பில் தாழ்வுபாடு கடற்படையினருக்கும் கடற்றொழில் திணைக்களத்திற்கும் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் நேற்றுப் படகை பார்வையிட்டனர்.

படகின் பாதுகாப்புக் கருதி அது தாழ்வுபாடு கடற்படையினரின் முகாம் எல்லைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம56)

# தொழில் முயற்சியாளர் விவரம் கணினி மயப்படுத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 29

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்களின் விவரங்களைக் கணமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக அனைத்து விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகணத்திலுள்ள விவசாய தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை தரமுயர்த்தவும், பெறுமதிசேர் பொருட்களை மெருகூட்டவும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சந்தைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் இந்தத் தரவுதளம் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே யாழ்ப்பணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் விவசாய அமைச்சில் நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற்றோ அல்லது minagrinpformShgmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலமோ பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் தகவல்களை வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பலதரப்பட்ட கருத்துக்களை உள்வாங்கி பல்கலையில் முடிவுகள் எடுக்கப்படும்!

## புதிய துணைவேந்தர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக 29**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு முடிவுகளும் தனிப்பட்ட நபர்களுக்காக அல்லாமல் பல்கலைக்கழகத்தை நிலைநிறுத்தி அனைவருடனும் கலந்தாலோசித்து எடுக்கப்படும். வேறுபட்ட சிந்தனைகள், பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்வாங்கப்படும் என யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2ஆயிரம் ஊழியர்களும் 11 ஆயிரம் மாணவர்களும் காணப்படுகின்றனர். நாம் அனைவரும் ஒரு குழுவாக இயங்க வேண்டும்.
ஆதி காலத்தில் இருந்து தமிழர்களின் சொத்தாக கல்வி காணப்படுகின்றது. கல்விப் பாரம்பரியமிக்க கலைக் கோவிலாக யாழ் பல்கலைக்கழகம் விளங்குகின்றது. இந்தப் பல்கலைக்கழகத்தினுள் மாணவனாக 1979ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்தேன். அது 31 வருடங்களுக்கு பின் துணைவேந்தராக என்னை நிலைநிறுத்தியிருக்கிறது. பொதுமக்கள், ஆர்வலர்கள், ஊடக நண்பர்களின் ஆதரவுடன் பணியினை திறம்பட மேற்கொள்ள ஆர்வமாக உள்ளேன். பல்கலைக்கழகத்தில் வேறுபட்ட சிந்தனைகள், பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்வாங்கப்படும்.என்றார். (ம - 20)

## தென்மராட்சி பிறீமியர் லீக் இன்று கோலாகல ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 29
உதயன் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் 12 அணிகளின் பங்குபற்றலுடன் தென்மராட்சி பிறீமியர் லீக் இன்று கோலாகலமான முறையில் ஆரம்பமாகின்றது.
மட்டுவில் கண்ணகை விளையாட்டு மைதானத்தில் இன்று காலை 8.30 மணியளவில் இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.
தொடரில் சின்னம் வெல்லும் அணிக்கு 2 லட்சம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளது. இரண்டாவது இடம் பெறும் அணிக்கு ஒரு லட்சம் ரூபா பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விறகெடுத்த மூதாட்டியை தீண்டியது விஷப் பாம்பு!!

### *தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர்*

சாவகச்சேரி, ஓக. 29
விஷப் பாம்பால் தீண்டப்பட்ட மூதாட்டி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். தாவளை இயற்றாலைப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
காலை உணவு தயாரிப்பதற்காக கற்களின் மீது வைக்கப்பட்டிருந்த விறகை எடுத்தபோதே மூதாட்டி விஷப் பாம்பால் தீண்டப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் சாவகச்சேரி மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம9)



## கடமையை ஏற்றார் சிறிசற்குணராஜா!

யாழ்ப்பாணம், ஓக.29
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 9ஆவது துணைவேந்தராக எஸ்.சிறிசற்குணராஜா நேற்றுக் காலை 8 மணிக்குத் தனது கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, அவருக்கு மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது. அதன்பின்னர் அவர் தனது அலுவலகத்தில் சுபவேளையில் கட்மைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் துணைவேந்தர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.
துணைவேந்தர் பதவிக்காக மே 15 ஆம் திகதி பதிவாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.
பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவால் மூத்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகத் தெரிவுசெய்யப்பட்டார். (ம-எ-111,20)

## 3ஆம் தவணை விடுமுறை 11 நாள்களே

கொழும்பு, ஓக.29
2020ஆம் ஆண்டுக்கான பாடசாலை மூன்றாம் தவணை விடுமுறை 11 நாள்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
மூன்றாம் தவணை விடுமுறையை டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
புதிய பாடசாலை தவணை ஜனவரி மாதம் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
கொரோனா வைரஸ் பரவல் நிலைமை காரணமாகவே விடுமுறை தினங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## 21 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஓக.29
நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட 21 உயர் பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதில் உப பொலிஸ்மா அதிபரும் அடங்குவார்.
பிரதிப் பொலிஸ் அத்தியேட்சகர் ஒருவர், 10 உப பொலிஸ் அத்தியேட்சகர்கள், 6 பொலிஸ் பரிசோதகர்கள் ஆகியோரே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சேவைத் தேவைகளின் அடிப்படையில் பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு யாழ். இந்தியத் துணைத்தூதுவர் களப் பயணம்

கிளிநொச்சி, ஓக. 29
கிளிநொச்சி இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு நேற்று யாழ் இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் களப்பயணம் மேற்கொண்டார்.
நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு களப்பயணம் மேற்கொண்டிருந்த இந்தியத் துணைத்தூதுவரை ஆராய்ச்சி உதவி ஆணையாளர் கலாநிதி அரகேசரி வரவேற்றார். தொடர்ந்து அங்கு ஆராய்ச்சிக்காக உருவாக்கப்பட்ட விவசாய உற்பத்திகளைப் பார்வையிட்ட அவர், விசேடமாக பல்வேறு நாடுகளிற்கு சொந்தமான திராட்சைச் செடிகள் பயிரிட்டுள்ளமையையும் பார்வையிட்டார். (ம6)



## வீட்டின் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஓக.29
யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் பகுதியில் உள்ள வீடொன்றின்மீது வாள்களுடன் வந்த இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.
3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பல் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், வீட்டுக் கேற் என்பன இந்தக் கும்பலின் தாக்குதலில் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

# மக்கள் ஒத்துழைப்பு இன்றி டெங்கை ஒழிக்க முடியாது

## மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக. 29**

**யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்றை கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினருக்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அண்மைய நாள்களில் 7 பேர் டெங்கு தாக்கத்துக்கு உள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரத்து 690 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்கள்.

இந்தவருடம் இன்றைய தினம் வரை 900 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இனிவரும் காலங்களில் மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகமாக காணப்படும்.

அடிக்கடி மழை பொழிகின்ற போது டெங்கு நோய்க்கிருமி நுளம்பு மூலம் தொற்றலாம். குறிப்பாக காலை வேளைகளிலும் சூரியன் அஸ்தமிக்கும் வேளைகளிலும் நோய்க்கிருமி பிள்ளைகளை கடிக்கும். பொதுவாக பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் போன்ற இடங்களில் நுளம்பு கடிப்பதன் மூலம் நோய்க்கிருமி பரவக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நுளம்பு கடிக்காத வண்ணம் தமது சுற்றுச்சூழலைப் பேணிப்பாதுகாக்க வேண்டும்.



டெங்கு நோய் அறிகுறியாக காய்ச்சல் காணப்படும். இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் காணப்படுமேயானால் மருத்துவமனைக்கு சென்று குருதிப் பரிசோதனை மேற்கொள்ளுங்கள். தொற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளின்போது பொது சுகாதார அதிகாரிகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். என்றார்.

(த-111)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# நுண்கலை மாணவர் வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 29

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்கள் நேற்று வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தங்களுக்கு இராமநாதன் நுண்கலைகழக பீடத்தில். அடிப்படை வசிதிகள், கற்றல் செயற்பாடுகளுக்குரிய வசதிகள் மற்றும் இசைக்கருவிகள் போன்றனவற்றில் குறைபாடுகள் நீடிக்கின்றன. தமது பரீட்சைப் பெறுபேறுகள் உரிய முறையில் வெளியிடப்படுவதில்லை என்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததோடு அவற்றை நிவர்த்தி செய்யுமாறு கோரியும் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தமது பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் உரிய இடத்துக்குத் தெரியப்படுத்தியும் எங்களுக்குரிய வசதி வாய்ப்புகள் செய்துகொடுக்கப்படவில்லை. கல்வி கற்பதற்குரிய அடிப்படை உரிமை தொடர்பில் உயர் அதிகாரிகள் பேசிக்கொள்கின்றார்கள். அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட வில்லை. தொழில்நுட்ப பிரிவு நீண்ட காலமாக பூட்டப்பட்டுள்ளது. அதனைத் திறந்து மாணவர்கள் பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்தவித பயனும் கிட்டவில்லை என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

துறைத் தலைவர் பரீட்சை புள்ளிகளை அவர் வெளியிடுவதிலும் காலம் தாழ்த்தி வருகின்றார். குறிப்பாக முதலாவது ஆண்டில் ஒரு மாணவர் பரீட்சை எழுதும்போது அவருக்கு இரண்டு பாடங்களில் சித்தி பெறவில்லை என்றால் அதற்குரிய பரீட்சை எழுத அதற்குரிய காலம் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரே தெரியப்படுத்தப்படுகின்றது. இது ஒரு குறைபாடாக காணப்படுகின்றது. இசைத் துறைத் தலைவர் தன்னிச்சையான போக்கையும் கடைப்பிடிக்கின்றார். பரீட்சை புள்ளிகள் உடனுக்குடன் வெளியிடப்பட வேண்டும்.

இறுதி ஆண்டு பரீட்சை புள்ளி இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரே தெரியப்படுத்தப்படுகின்றது. இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று கோரினார்.

(த)

# பண்பாட்டு நூலுக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக. 29

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்படும் வடந்தை பண்பாட்டு நூலுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வருடாந்தம் வெளியிடப்பட்டு வருகின்ற இந் நூல் இந்த வருடம் "வடக்கின் பண்பாட்டுச் சுவடுகள் " என்னும் பரப்பினை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படவுள்ளது.

இந் நூலில் கலை, பண்பாடு,தொல்லியல், சமூகவியல், மானிடவியல்,ஆன்மிகம்,வரலாறு போன்ற துறைகள் உள்ளடக்கப்படலாம். ஆக்கள்கள் யாவும் நாளை 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்படவேண்டும். தபால் மூலமாக அனுப்புவோர் உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாணம் செம்மணி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும், மின்னஞ்சலில் அனுப்புவோர் npc.culture@yahoo.com என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# புதுக்குடியிருப்புக்கு புதிய தவிசாளர்

## நேற்று பதவியேற்றார்

புதுக்குடியிருப்பு, ஒக. 29

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் புதிய தவிசாளராக அ.தவகுமாரன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் அரசுக் கட்சியின் ஆமுகையின் கீழ் உள்ள புதுக்குடி யிருப்புப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவின்.போது இருவர் தவிசாளர் பதவி நிலையினை வகிப்பதாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்துக்கு அமைவாக ஏற்கனவே இருந்த தவிசாளர் செ.பிறேமகாந் கடந்த 14.08.2020 அன்று பதவி விலகினார். தொடர்ந்து புதிய தவிசாளராக கடந்த 22.08.2020 அன்று வெளியான வர்த்தகமானியில் அ.தவகுமாரன் பெயர் பிரிசுரிக்க ப்பட்டிந்தது. அதன்படி புதிய தவிசாளர் நேற்று தனது கடமைகளைப் பெறுப்பேற்றார்.

(ஐ-19)

# 25 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,ஒக. 29

தொடருந்து வருகைக்காக அபாய ஒலி எழுப்பப்பட்டு மூடப்பட்டிருந்த கடவையைக் கடக்க முயன்ற நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.

(ஐ-9)

## விதிகளை மீறிய சாரத்தியம்

# 7 பேரிடம் 2 55,000 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஒக. 29

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்திய ஏழு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

போதையில் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன வரிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கும், போதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கும், மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கும் எதிராக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவை நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.



குற்றத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அதன்படி, போதையில் சாரதி அனுமதிப்பத்திரம் வாகன வரிப்பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 52 ஆயிரத்து 500 ரூபா வீதமும் மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது.

(த-9)

# பாகுபாடு பார்க்காது நியமனம் வழங்கவும்

## அரசிம் அடைக்கலம் எம்.பி. வலியுறுத்து

மன்னார், ஒக. 29

இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை விரைவாக வழங்குமாறு புதிய அரசிடம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடைக்கால கணக்கறிக்கை விவாதத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செயற்றிட்ட உதவியாளர்கள் வேலைக்குப் போய் அந்தப் பணியை தொடங்குகின்றபோது தேர்தல் காலம் என்றபடியால் அந்த பணி இடைநிறுத்தப்பட்டது. அந்த வேலைத்திட்டத்தை முன்னைய அரசு ஆரம்பித்தது என்று பாகுபாடு பார்க்காமல் மீண்டும் பணிநியமனம் வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்

(த-213)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆக்கிரமிப்பு ஏன்?

கோத்தாபய அரசு ஆட்சியைப் பொறுப்பெடுப்பதற்காக வைக்கப்பட்ட கையொப்பங்களின் பேனா மை ஈரம் காய்வதற்குள், அதன் அடாவடித்தனமும், இனவாதப் போக்கும், தமிழர் விரோதக் கருத்துக்களும் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. இதன் ஆகப்பிந்திய நடவடிக்கைதான் மண்டைதீவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட காணி அபகரிப்பு நடவடிக்கை. மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தில் சுமார் 62 பரப்புக்காணி நேற்றுக் கடற்படையால் அபகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சி அந்தப் பகுதி மக்களினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் இன்னும் பல தமிழ்த் தேசியக் கட்சியினராலும், சிவில் அமைப்புக்களாலும் வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பை அடுத்துக் கைவிடப்பட்டது.

வடக்கில் பொதுமக்களின் காணியை அடாத்தாக அபகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. இந்தப் பட்டியல் மிக நீளமானது. வலிகாமம் வடக்கு, கேப்பாபிலவு, நந்திக்கடல் என்று பல பகுதிகளில் இந்தக் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் அரச இயந்திரத்தால் முன்னெடுக்கப்பட்டு அவை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன என்பது பதிவுகள். நல்லாட்சி அரசின் ஆட்சியில் இந்த ஆக்கிரமிப்பு மனோபாவம் சற்றுத் தணிந்திருந்தது. இதை ஏற்கத்தான் வேண்டும். எனினும் கோத்தாபய ஆட்சியில் அந்த ஆக்கிரமிப்பு மனோபாவம் பல மடங்கு உக்கிரம்பெறும் என்பது வெள்ளிடைமலை.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் மிகமிக அதிகமாக உள்ளது. இங்கிருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் காலாகாலமாகக் குரல்கொடுத்து வருகின்றன. அதிகரித்த இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராக தமிழ்த் தேசியத்தில் குரல் எழுப்பப்படும்போது, போராட்டங்கள் நடத்தப்படும்போது அரச தரப்பால் வழங்கப்படும் பதில் 'இராணுவம் வடக்கில் இருந்து இயலுமான வரை குறைக்கப்பட்டுள்ளது' என்பதாகத்தான் அமைந்துள்ளது. வடக்கில் இருந்து இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட்டுள்ளது என்றால் எதற்காக இந்தக் காணி அபகரிப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை இந்த அரசு இலங்கை வாழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

சர்வதேசத்தின் எதிர்ப்பலையைச் சமாளிப்பதற்காகவும், சப்பைக்கட்டுக் கட்டுவதற்காகவும் ஒரு முனையால் சில துண்டுக் காணிகளை விடுவித்துவிட்டு மறுமுனையால் காணி அபகரிப்பை மேற்கொள்வதன் கபடப்போக்கு தமிழர்களுக்கு நன்றாகவே புலப்படுகின்றது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று தமிழர்களுக்குத் துர்க்கனவாக இருக்கும் கோத்தாபய அரசு, காணி அபகரிப்புக்களை நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றி வர்த்தமானிப் படுத்தினாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

தமிழர்களுக்குத் தீர்வை வழங்குவோம், அனைவரையும் சமமாக நடத்துவோம் என்று அடிக்கடி கூறிக்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச வெறும் வாய்ச்சவடால் விடாமல் இதய சுத்தியுடன் செயற்பட்டு தமிழர் விரோதப் போக்கைக் கைவிட இனியாவது முன்வர வேண்டும். அதுவே தமிழர்களின் எதிர்பார்ப்புமாகும்.

# தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு சேவை

## ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் அறிவிப்பு

கொழும்பு, ஓக.29

**தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு தொடர்ச்சியாக விமான சேவைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.**



கொரோனாத் தொற்று நிலைமையை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இத்தாலி-மிலன், பிரிட்டன்-லண்டன், ஜப்பான்-டோக்கியோ, மாலைதீவு, ஜேர்மன்-பிராங்போர்ட், பிரான்ஸ்-பரிஸ், ஆஸ்திரேலியா-சிட்னி ஆகிய இடங்களுக்கு விமான சேவைகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இடங்களுக்கு பயணிக்க விரும்பும் பயணிகள் கொழும்பு, காலி அல்லது கண்டியில் உள்ள விமான அலுவலகங்களை அல்லது இணையத்தளம் ஊடாக தொடர்பு கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)



## முதலாவது பொப்பி மலர் ஜனாதிபதிக்கு அணிவிப்பு

கொழும்பு,ஓக.29

பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு, முதலாவது பொப்பி மலர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அணிவிக்கப்பட்டது.

முன்னாள் படை வீரர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உப்புல் பெரேரா மலரை அணிவித்தார்.

உலகப் போரில் உயிரிழந்த படை வீரர்களை நினைவுகூர்ந்து இலங்கை முன்னாள் படை வீரர்களின் சங்கம் 1944 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும், பொப்பி மலர் தினத்தை ஏற்பாடு செய்து வருகின்றது.

இதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் போரில் இறந்த படை வீரர்களின் குடும்பங்களுக்கும், அங்கவீனமுற்ற படை வீரர்களின் நலன் பேணலுக்காகவும் செலவிடப்படுகின்றது. (க-இ)

## அதிகாரத்தைப் பெற ஒற்றுமை அவசியம்!

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.29

தமிழ் மக்கள் தமது இலக்கை அடைய நாங்கள் அனைவரும் தொடர்ந்து ஒற்றுமையாகப் பயணித்து எங்களை நாங்களே ஆளுகின்ற அதிகாரம் கிடைக்க உழைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் சுதுமலையில் அவருக்கான வரவேற்பு நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைச் சிதைக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அதைத் தேர்தல் காலத்தில் நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம். ஆனால் மக்கள் அதை முழுமையாகச் செவிமடுக்கவில்லை. தற்போது கூட்டமைப்புக்குச் சிறு பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும், தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்துள்ளனர். எமக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவில் இருந்து நாங்கள் மீண்டு வர வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு என்பது தற்காலிகமானதுதான்.

நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகப் பயணித்து எங்களை நாங்களே ஆளுகின்ற அதிகாரம் கிடைக்க உழைக்க வேண்டும். அவ்வாறு அதிகாரம் கிடைக்கும்போதுதான் எமது மக்கள் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ முடியும் - என்றார். (எ-20)

## பிரதேச செயலகங்களில்

# நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ளலாம்

கிளிநொச்சி, ஓக. 29

கிளிநொச்சி மாவட்ட நிர்வாக எல்லைப் பரப்புக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் தமது நியமனக் கடிதங்களை தமக்குரிய பிரதேச செயலகங்களுக்குச் சென்று பெற்றுக் கொள்ள முடியும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

50 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதற்கான வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பட்டதாரிகளின் பெயர்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. எதிர்வரும் 2ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிக்குள் அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவேண்டும். பட்டதாரிகளுக்குரிய நியமனக் கடிதங்கள் பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்களிலிருந்து நியமனக் கடிதங்களை பட்டதாரிகள் நேற்று (வெள்ளி) முதல் பெற்றுக்கொள்ள முடியும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 133 பட்டதாரிகளும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 35 பட்டதாரிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 47 பட்டதாரிகளும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 52 பட்டதாரிகளும் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். (இ.5)

## பாடசாலைகள் அனைத்தும் முதலாம் திகதி முதல் வழமைக்கு

கரணவாய், ஓக. 29

வடமராட்சி வலயப் பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வழமை போன்று நடைபெறும் என்று வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.பார்த்தீபன் அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் தரம் 10, 11 மற்றும் 12 ஆகிய வகுப்புகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெற்று வந்தன.

இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையை அடுத்து அனைத்து தரங்களையும் மீள ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அனைத்து பாடசாலைகளையும் காலை 7.30 மணிமுதல் 1.30 மணி வரை இயக்குவதற்கு நடவடிக்கைககளை மேற்கொள்ளுமாறு சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-108)

## இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 29

கல்விப் பொதுத் தராதர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு கொழும்பு அருள் கல்வி வட்டத்தால் இன்றுமுதல் எதிர்வரும் நான்கு நாள்களுக்கு நடத்தப்படவுள்ளது. சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் அனுசரணையில் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று 29ஆம் திகதியும், யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை, நாளைமறுதினம், எதிர்வரும் முதலாம் திகதியும் இந்தக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன. (ம)





முகமாலை வடக்கு புகுந்தோர் குடியிருப்பு பகுதியில் காணி துப்புரவு பணியின்போது குப்பைகளுக்கு வைக்கப்பட்ட தீ காற்றின் காரணமாக பரவியதால் அருகிலுள்ள பனைமரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. கிராமவாசிகளால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்பு பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இத் தீ விபத்தில் அருகிலுள்ள வீட்டு வேலிகளும் சேதமடைந்துள்ளன. (ந-6)

# எமக்கான உணவை நாமே உற்பத்தி செய்ய வேண்டும்

*வட மாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார் தெரிவிப்பு*



**முல்லைத்தீவு, ஓக.29**

**தங்கி நிற்கும் நிலையில் இருந்த நாங்கள்எங்களுக்கான உணவை நாங்களே உற்பத்தி செய்கின்ற நிலையை எட்டவேண்டும் என வட மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி பண்ணையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட வயல்விழா கண்காட்சி தொடக்க நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு காண்பிக்கும் நோக்கில் இந்த வயல் விழா அமைந்துள்ளது.

காலபோகம் ஆரம்பிக்க இருக்கின்ற நிலையில், நிலைபேறான விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதை இவ் வயல் விழாவில் காணக்கூடியதாக இருக்கின்றது. கொவிட்-19 காலகட்டத்தில் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியான நிலையில், நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை வடமாகாணத்திலும் எடுத்துள்ளோம். இந்தத் திட்டத்திற்கும் வயல்விழா உதவியாக அமைந்துள்ளது. புதிய தொழில்நுட்பங்களுடனான விவசாயமாக இஞ்சி மற்றும் மஞ்சள் பயிர்கள் காணப்படுகின்றன. தங்கி நிற்கும் நிலையில் இருந்த நாங்கள் எங்களுக்கான உணவினவ உற்பத்தி செய்கின்ற நிலையை எட்டவேண்டும்.

கொரோனா வைரஸ் காலத்தில் மஞ்சளுக்கான பெறுமதி அல்லது தேவை அதிகரித்துள்ள நிலையில் மஞ்சள் செய்கையையும் இங்கு காட்சிப்படுத்தியுள்ளதுடன், நஞ்சற்ற உணவை உட்கொள்ள வேண்டும் என சேதனைச் செய்கையையும் காட்டியுள்ளார்கள். இவை எல்லாம் எங்கள் விவசாயத்தில் நல்ல விடயமாக அமைந்துள்ளன - என்றார்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் உலகநாதன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார், வட மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் வீ.பிறேம்குமார் உள்ளிட்ட மாகாண பிரதி மாகண விவசாய பணிப்பாளர்கள், அரச அதிகாரிகள், படை அதிகாரிகள், பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (ந-19)





முல்லைத்தீவு மாவட்ட விவசாய திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்ட 'வயல் விழா' கண்காட்சியை பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலர் பார்வையிட்டு வருகின்றார்கள். இக் கண்காட்சியில் உள்நாட்டு மரக்கறிகள், மேல்நாட்டு மரக்கறிகள், கிழங்குப் பயிர்கள், இலை மரக்கறிகள், தானியங்கள், அவரைப்பயிர்கள், எண்ணெய் பயிர்கள், பழப்பயிர்கள் மற்றும் உயர்தர நாற்று உற்பத்தி, நகர்புற வீட்டுத்தோட்ட சேதனத் தோட்டம், விதிமுறை பயிர் செய்கை ஊடு பயிர்ச்செய்கை, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம் பெறுமதிசேர் விவசாய நடவடிக்கை, பண்ணை இயந்திரங்களின் பாவனையை மேம்படுத்துதல், பயிர்ப் பாதுகாப்பு, பாதுகாப்பு கூடாரத்துடன் கூடிய மரக்கறிச் செய்கை, விலங்கு வேளாண்மை உள்ளிட்ட அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பான விளக்கங்களும் விவசாய உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. (ந-19)

## கொரோனாவால் பாதிக்கப்பட்ட உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஓக.29

கொரோனாப் பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் சேவையாளர்களுக்கு நிதி ரீதியான ஊக்குவிப்புக்களை வழங்கி அவர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோர், தொழிலாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வரிசெலுத்துவோர் உள்ளிட்ட பொருளாதாரத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பொருத்தமான வகையில் பரந்துபட்ட ஒழுங்குவிதிகளைக் கொண்டதும் செயற்றிறன்மிக்கதுமான வரிக்கொள்கையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு கடந்த வருடம் டிசம்பர் 27 ஆம் திகதி அமைச்சரவை அனுமதியளித்திருந்தது. அதேவேளை உற்பத்தி மற்றும் சேவையில் ஈடுபடுவோர் கொரோனாப் பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் குறைந்த வருமானத்தைக் கொண்டவர்கள், சுற்றுலாத்துறைசார் தொழில் முயற்சியாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச்செய்யும் அனைத்துத் தரப்பினரையும் நிதி ரீதியில் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (வ-இ)

## ஒருவேளை உணவுக்கு எம்.பி. ஒருவருக்கு 296 ரூபா செலவு

கொழும்பு, ஓக. 29

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒரு வேளை உணவுக்கு 296 ரூபாய் செலவிடப்படுகிறது என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஒரு வேளை உணவுக்காக 3000 ரூபா செலவிடப்படுவதாக வெளியான தகவலையடுத்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளிக்கும்போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணவு தயாரிப்புக்கான அனைத்துச் செலவினங்களையும் ஒன்று திரட்டி அண்ணளவுத் தொகை வகுக்கப்பட்டுள்ளது. சரியான தொகை பின்னர் அறிவிக்கப்படும், எனினும், அண்ணளவாக ஒருவருக்கு ஒரு வேளை உணவுக்காக 296 ரூபா செலவிடப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-இ)

# அந்நியச் செலாவணியை குறைக்கத் திட்டமிடுங்கள்!

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஓக. 29

கடல்சார் உணவு இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் அந்நியச் செலாவணியைக் குறைக்கக்கூடிய பல்வேறு விடயங்களைத் திட்டமிட வேண்டுமென்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அழகு மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி, ஆழ்கடல் பல நாள் கடற்றொழில் அலுவலகள் மற்றும் மீன்கள் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மீன், கருவாடு, மாசிக்கருவாடு மற்றும் ரின்மீன் இறக்குமதிக்காக வருடாந்தம் அரசு சுமார் 500 மில்லியன் டொலர்கள் செலவிடுகின்றது. கடற்றொழில் கைத்தொழில் மொத்த தேசிய உற்பத்திக்கு ஒரு வீத பங்களிப்பையே இதுவரை காலமும் வழங்கியுள்ளது. நாட்டைச்சுற்றி கடலாலும் நாட்டினுள் உள்ள குளங்களினாலும் சரியான பயன்களைப் பெற்று அந்நியச் செலாவணியை அதிகரித்துக் கொள்ளக்கூடிய ஏற்றுமதிக்குள் கடற்றொழில் கைத்தொழில் உள்வாங்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நன்னீர் மீன்வளர்ப்பு மேம்பாட்டுக்கு 90 ஆயிரம் மீன் குஞ்சுகளை குளங்களில் இடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ரின் மீன்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமான மீன்களை உள்நாட்டிலிருந்தே பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இந்நாட்டு மீனவர்களுக்கு மற்றும் மீன்பிடி கைத்தொழிலுக்கு அவசியமான கப்பல்களை உள்நாட்டு நிறுவனங்களின் மூலம் தயாரித்தல் வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (த-இ)

## வேலைவாய்ப்புகள் மறுப்பு: பிரதமருக்கு மாவை கடிதம்



யாழ்ப்பாணம், ஓக. 29

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பட்டதாரிகளுக்கும் வேலையற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்தும் பின்னர் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு விரைவில் வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்தராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளார், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஓகஸ்ட் இரண்டாம் வாரத்தில் நாட்டின் ஏழு மாவட்டச்செயலகங்களுக்கும் அந்த வேலைவாய்ப்புக்களை வழங்க அரசு ஆணை வழங்கப்பட்டிருக்கும்போது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அந்த வேலை வாய்ப்பை வழங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது அநீதியானது. ஏற்கனவே 20 ஆயிரம் இளைஞர்கள் அடையாளம் காணப்பட்டு நம்பிக்கையுடனிருந்தவர்கள் இப்பொழுது பெரும் அதிருப்தியும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

தெற்குடன் ஒப்பிடுகையில் வடக்கு, கிழக்கில் வேலையற்ற எண்ணிக்கையில் குறைந்த வீதமான இளைஞர்களே உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புக்கள் தகைமையடிப்படையில் வழங்க வேண்டுமென வற்புறுத்துகிறோம். சென்ற மே நான்காம் திகதி தங்களைச் சந்தித்த போது இந்த நிலைமை பற்றியும் நாம் பேசியிருந்தோம்.

வடக்கு கிழக்குப் பகுதியில் விண்ணப்பித்த பட்டதாரிகள் வேலைவாய்ப்புப் பெறுவதில் பெரும் தடைகளைச் சந்திக்கின்றனர்.எம்மிடமும் முறையிட்டுள்ளனர். அவர்களுக்கு விரைவில் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

இந்த விடயத்தில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாமும் சந்தித்துப் பேசவும் சந்தர்ப்பம் வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம். என்றுள்ளது. (த)

## கூட்டமைப்புக்குள் பிரிவு வராது!

### கூறுகின்றார் சி.வீ.கே.

யாழ்ப்பாணம், ஓக. 29

கூட்டமைப்புக்குள் பிரிவினை ஏற்படாவண்ணம் தமிழ் அரசுக் கட்சி பங்காளிக் கட்சிகளோடு இணைந்து நட்புறவோடு பயணிக்கும் என்று வடக்கு மாகாண சபை அவைத் தலைவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த 15 ஆம் திகதி அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி வவுனியாவில் இன்று நடைபெறவுள்ளது.

பல ஊடகங்களும் நாளைய (இன்றைய) கூட்டத்தில் பிரளயங்கள், குளறுபடிகள் இடம்பெறும் முரண்பாடுகள் ஏற்படும் என சொல்கின்றன. ஆனால் அப்படி ஒன்றும் நடக்க வாய்ப்பில்லை.

தமிழ் அரசுக் கட்சி ஏனைய கட்சிகளை அரவணைத்து அவர்களோடு கலந்து பேசி கருத்துப் பகிர்வுடன் செயற்படவேண்டிய தேவை, பொறுப்பு உள்ளது.

பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் அமைப்பினருக்கு சில கருத்து முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனால், கூட்டமைப்பிலிருந்து அவர்கள் வெளியேறுவார்கள் என நான் நம்பவில்லை.

கட்சியின் மத்திய செயற்குழுவாக இருந்தாலும் சரி வேறு எந்தக் குழுவாக இருந்தாலும் சரி அது இணக்கப்பாட்டை நோக்கமாகக் கொண்டிருக்குமே தவிர பிளவுகளை நோக்கமாகக் கொண்டிருக்காது - என்றார். (த-20)

## 13ஐ மலினப்படுத்தாது மேலும் வலுப்படுத்துக!

### நிந்தவூர் பிரதேச சபை அமர்வில் தீர்மானம்

அம்பாறை, ஓக. 29

13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தை ஒழிக்கவோ, மலினப்படுத்தவோ முயற்சிக்காது அதனை வலுப்படுத்துவதுடன், 19 ஆவது திருத்தச் சட்டம் மாற்றி அமைக்கப்படும்போது சிறுபான்மை சமூகங்களுக்கு அநீதி ஏற்படாதவாறும் பாதுகாப்பான சரத்துகள் உள்வாங்கப்பட ஆவண செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று நிந்தவூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேச சபையின் நான்காவது சபையின் 29 ஆவது அமர்வு சபைத் தவிசாளர் எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிர் தலைமையில், சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

அமர்வில் தவிசாளர் அஷ்ரப் தாஹிர் மேற்படி தீர்மானம் தொடர்பான பிரேரணையை முன்மொழிந்ததுடன் சபை அமர்வில் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது. (த-30)

## ஹெரோய்னுடன் வைத்திருந்தாரென கைதானவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஓக. 29

4 கிராம் 200 மில்லிகிராம் போதைப் பவுடரான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் உடுவில் நபரை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் கைதுசெய்துள்ளனர்.

இந்த நபர் சுன்னாகம் கத்தரோடையில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது. (த-9)

### கொழும்பு மேல் நீதிமன்றத்தில்

## ராஜித, ரூமிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

சர்ச்சைக்குரிய வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் வரையறுக்கப்பட்ட அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கியான் குலதுங்க உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இவர்கள் இருவரும் வெளிநாடு செல்ல தடைவிதித்த நீதிபதி, கடவுச்சீட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபர்களை தலா 10 ஆயிரம் ரொக்கப் பிணை மற்றும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சரீரப் பிணை வழங்கும் இரண்டு நபர்களில் ஒருவர் நெருங்கிய உறவினராக இருக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

இவர்களின் கைவிரல் அடையாளங்கள் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுமாறும் நீதிபதி பணித்துள்ளார். இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-இ)

### பாலியல் குற்றச்சாட்டு:

## ஆசிரியருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 29

பாடசாலையில் இரண்டு மாணவிகளைத் துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்து அந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவக்க பிரதேசத்தில் தரம் 5 மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இரண்டு மாணவிகளை துஷ்பிரயோகம் செய்தார் என்ற முறைப்பாட்டின்படி அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (த)

# கால நீடிப்பை வழங்கி அரசை பாதுகாத்துள்ளதா சர்வதேசம்?

## நீதிக்காகப் போராடும் உறவுகள் கவலை

கிளிநொச்சி, ஓக. 29

**காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் தொடர்பில் சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில் இருந்தபோது சர்வதேசமும் இலங்கை அரசாங்கத்துக்கு கால நீடிப்பை வழங்கி அரசைப் பாதுகாக்க முற்பட்டுள்ளது என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவலை தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் தொடர்பில் சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில் இருந்தபோது சர்வதேசமும் இலங்கை அரசாங்கத்துக்குக் கால நீடிப்பை வழங்கி அரசைப் பாதுகாக்க முற்பட்டுள்ளது. நாங்கள் எவ்வளவு கூறியும் அதனை அவர்கள் பொருட்டாக எடுத்துக் கொள்ளாது இந்தக் கால நீடிப்பை வழங்கியுள்ளனர். இன்று உள்ள அரசாங்கத்தாலும் எமக்கான நீதி கிடைக்காத நிலையிலேயே சர்வதேசத்தை நீதி கேட்டு நிற்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி இன்று 11 வருடங்களாக வீதியில் நிற்கின்றோம். அதனை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த 2020 ஆம் ஆண்டிலாவது எமக்கான தீர்வைப் பெற்றுத்தர சர்வதேசம் முன்வர வேண்டும். நாளை இடம்பெறவுள்ள போராட்டத்தில் பங்குபற்றுவதற்காக கிளிநொச்சி அலுவலகத்தில் இருந்து காலை 8 மணிக்கு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே முன்னர் கிளிநொச்சியில் உள்ள அனைத்து அமைப்புக்களும் எவ்வாறு ஆதரவு வழங்கினார்களோ அதேபோல் நாளைய தினமும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் -என்றார். (ப-6)



# யாழில் முன்பள்ளிகளை ஆரம்பிக்கக் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை மீள ஆரம்பிப்பதற்கு ஆயத்தப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நேற்றுக்காலை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் உதவிப் பிரதேச செயலர், கிராம அலுவலர் நிர்வாகம், கிராம அலுவலர்கள், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பள்ளி ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். (ப)

## உடுவிலில் கே.கே.எஸ் வீதியில்

# கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை?

யாழ்ப்பாணம், ஓக. 29

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கே. கே.எஸ் வீதியில் பாடசாலைகளுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் சென்று வரும் நேரங்களில் கனரக வாகனங்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலக பிரிவில் நடைபெற்று வரும் வீதி விபத்துகளைத் தடுத்தல், அதற்கான பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைபிடித்தல் தொடர்பான பிரதேச மட்டக் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதன்படி கனரக வாகனங்களின் போக்குவரத்தை காலை 6.30 மணி முதல் காலை 8 மணி வரையும், பிற்பகல் 1.30 மணிமுதல் பி.ப 2 மணி வரையும் கட்டுப்படுத்துவது தொடர்பில் உரிய அனுமதி பெறப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. (ப-39)

# தமிழர்களே ஆதிக்குடிகள்

## வலியுறுத்தினார் ஐங்கரநேசன்



யாழ்ப்பாணம், ஓக. 29

இலங்கைத்தீவில் தமிழர்களே ஆதிக்குடிகள் என்பதும், அவர்களுக்குத் தனியான ஒரு தேசம் என்பதும் பேரினவாதிகளின் கூச்சல்களால் இல்லை என்றாகிவிடாது என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

புதிய நாடாளுமன்றின் கன்னி அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் ஆற்றிய உரைகள் தொடர்பாக தென் இலங்கை அரசியல்வாதிகள் கடுமையான கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். இவர்கள் நாடாளுமன்றில் பேசத் தகாத வார்த்தைகள் எதனையும் பேசவில்லை. இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் ஆதிக்குடிகள் என்பதையும், தனியான தொரு தேசம் என்பதையுமே வலியுறுத்தியிருந்தார்கள். இதற்கே தென்னிலங்கை அரசியல்வாதிகள் கொதித்துப்போயுள்ளார்கள். இலங்கைத் தீவில் தமிழர்களே ஆதிக்குடிகள் என்பதும் அவர்களுக்கு தனியான தொரு தேசம் என்பதும் வரலாற்று உண்மைகள். இவை பேரினவாதிகளின் கூச்சல்களால் ஒருபோதும் இல்லை என்றாகிவிடாது.

சிங்கள இலக்கியங்களும், பாளி இலக்கியங்களும் இலங்கையின் பூர்வீக மக்கள் சிங்கள மொழி பேசுகின்ற ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் வட இந்தியாவில் இருந்து வந்த ஆரிய இன மக்கள் என்றும் கூறுகின்றன. ஆனால், இவற்றுக்கு ஆதாரமாக எவ்விதத் தொல்லியல் சான்றுகளும் இலங்கையில் இருந்து கிடைக்கவில்லை. இலங்கையின் பூர்வீக மக்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பெருங்கற் பண்பாட்டுக்குரிய மக்கள் இனம் என்பது வரலாற்றாசிரியர்களாலும், தொல்லியலாளர்களாலும், மொழியியலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தென்னிந்தியாவின் நிலப்பரப்பில் இருந்து இயற்கைப் பேரிடர் காரணமாகப் பிரிந்த ஒரு நிலப்பரப்பே இலங்கைத் தீவு என்று புவியியலாளர்கள் நிரூபித்திருக்கும் நிலையில், இலங்கையின் பூர்வீக மக்கள் தமிழ் மொழி பேசுகின்ற திராவிடப் பண்பாட்டு மக்கள் என்பதை வரலாற்று அறிவில்லாத சாதாரண மக்களே ஏற்றுக் கொள்வார்கள் - என்றுள்ளது. (ப)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் பத்தாம் திருவிழாவான, பூங்காவனத் திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்புற இடம்பெற்றது. (க-26)

# ஆவணக் காப்பகத்தின் 73 ஆவது நிகழ்வு

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 73 ஆவது நிகழ்வு உணர்தல் மற்றும் பதிவுசெய்தல் எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்து ஓவியர்களில் ஒருவரான கோ.கைலாசநாதனின் படைப்புகள் பற்றிய 'உணர்தல் மற்றும் பதிவுசெய்தல்' எனும் உரை மற்றும் கலந்துரையாடலாகவே இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை இல.99, கோவில் வீதி, நல்லூரில் உள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன்பெறுமாறு ஆவணக் காப்பகத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீபன் கனகலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (ப)

# இடித்து அகற்றப்பட்டது சந்திரகுமாரின் கல்வெட்டு



கிளிநொச்சி, ஓக.29

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கிளிநொச்சியில் இடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை நாகேந்திரபுரம் கிராமத்தில் கடந்த 2013.10.04 அன்று வடக்கின் வசந்தம் திட்டத்தின் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டபோது அங்கு நிறுவப்பட்டிருந்த பெயர் கல்வெட்டே நேற்றுமுன்தினம் இரவு இடிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி, நாகேந்திரபுரம் பிரதான வீதியில் மின்மாற்றி காணப்படுகின்ற இடத்துக்கு அண்மையாக கரைச்சிப் பிரதேச சபையால் சிறிய பாலம் ஒன்று அமைக்கப்படுகிறது. பாலம் அமைக்கும் பணியின் போது அதற்கு இடையூறு ஏற்படாத வகையில் கல்வெட்டு உடைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பிரதேச சபையின் எந்தவொரு செயற்பாட்டாலும், குறித்த கல்வெட்டு இடிக்கப்படவில்லை. அது தொடர்பில் எமக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன. விசாரணை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது என்று கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார். (ப-214)

# நந்திக்கடலும் நாயாறும் எதிர்காலத்தில் பறிபோகும்

## எச்சரிக்கின்றார் ரவிகரன்

**முல்லைத்தீவு, ஓக. 29**
**முல்லைத்தீவில் அண்மைக்காலங்களாக, வனவளத் திணைக்களம், மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டிய வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன். எதிர்காலத்தில் நந்திக்கடல், நாயாறு மற்றும் அதனை அண்டிய பகுதிகளும் பறிபோகும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொக்கிளாய் கிராம அலுவலர் பிரிவில் உள்ள, பெரியவெளி, பனிச்சைமோட்டை, கண்ணாட்டி, அக்கரைவெளி ஆகிய பகுதிகளில் 82 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான 390ஏக்கர் விவசாய நிலங்களும், மாரியாமுனை என்னும் இடத்தில் 28 தமிழ்க் குடும்பங்களுக்குச் சொந்தமாக 113ஏக்கர் நிலங்களும் காணப்படுகின்றன. எனினும் அவர்கள் தங்களுடைய விவசாய நிலங்களில், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, தடுக்கப்பட்டதென்பது அராஜகத்தின் வெளிப்பாடாகவே பார்க்க முடிகின்றது.
வனஜீவராசிகள் திணைக்களத்தினுடைய செயற்பாடுகளைப் பார்க்கும் போது, மக்கள் மிகவும் வேதனையடைகின்றார்கள். எதிர்காலத்தில் வட்டுவாகல் நந்திக்கடல் வளாகம் மற்றும், நாயாறுப் பகுதிகளுக்குள்ளும் மக்கள் செல்வது தடுக்கப்படலாம் என்ற அச்சம் மக்களிடத்தே காணப்படுகின்றது. நந்திக்கடல் மற்றும் அதனைச் சூழவுள்ள இடங்களுக்குள்ளும் மக்கள் செல்வது தடுக்கப்பட்டால் சுமார் 9000 குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்படும் நிலைமை உருவாகும் - என்றார். (ப-246)

---

### ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு யோசனை எங்கே?

*பிரதமரிடம் அனுரகுமார கேள்வி*

கொழும்பு, ஓக. 29
பிரதமரால் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலக் கணக்கறிக்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா வேதன அதிகரிப்புக் குறித்த யோசனை ஏன் உள்ளடக்கபடவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.
அரசாங்க செலவீனங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கை மீதான இரண்டாம்நாள் விவாதம் நாடாளுமன்றில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
உறுதியளிக்கப்பட்டவாறு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா வேதனம் வழக்கப்படுமா? என கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி நிதி அமைச்சரிடம் கேள்வி ஒன்றைத் தொடுத்திருந்தேன். மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அந்த ஆயிரம் ரூபா வழங்கப்படுமென நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.
எனினும் இக்காலக் கணக்கறிக்கையில் அது தொடர்பில் எதுவும் இல்லை. எங்கே அந்தக் கொடுப்பனவு? உள்ளடக்கப்பட்டுள்ளதா?- என்றார். (ப-இ)

---

## நிலத்தைப் பறித்தால் சட்டம் பாயும்

*எச்சரிக்கிறது நிலமீட்புக் கழகம்*

கொழும்பு, ஓக. 29
சட்டவிரோதமான முறையில் நிலப்பரப்புக்களைக் கையகப்படுத்துபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டுக் கழகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இவ்விடயம் தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அதன் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம்.எஸ்.ஆர்.டபிள்யூ.டி.சொய்சா தெரிவித்துள்ளார்.
சட்டவிரோத நிலப்பரப்புகள், இலங்கைக்கு ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது எனவே எதிர்காலத்தில் பொலிஸாருடன் இணைந்து சட்டவிரோத நிலப்பரப்புகள் மற்றும் கட்டுமானங்கள் தொடர்பாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-இ)

---

## கார்களை இறக்குமதி செய்ய திட்டம் உருவாக்கப்படவேண்டும்

*வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, ஓக. 29
அடுத்த ஆறு மாதங்களில் நாட்டின் வாகனச் சந்தையில் வாகனங்கள் இருக்கமாட்டாது. எனவே ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கார்களை இறக்குமதி செய்யும் திட்டத்தை உருவாக்க வேண்டும் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலதுங்க தெரிவித்துள்ளார்.
அடுத்த ஆறு மாதங்களுக்கு விற்பனை செய்யும் அளவுக்குத் தேவையான கார்கள் மாத்திரமே விற்பனையாளர்களிடம் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கார் இறக்குமதியை நிறுத்த அரசாங்கம் தீர்மானித்த பின், பதிவு செய்யப்படாத கார் ஒன்றின் விலை சுமார் 10 லட்சம் ரூபாவால் அதிகரித்தது. இலங்கையின் வாகன இறக்குமதியாளர்களிடம் கையிருப்பாக 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் கார்கள் இருந்தன. எனினும் கடந்த மார்ச் மாதம் வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டதன் காரணமாக அடுத்த ஆறு மாதங்களில் நாட்டின் வாகனச் சந்தையில் வாகனங்கள் இருக்கமாட்டாது. எனவே ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கார்களை இறக்குமதி செய்யும் திட்டத்தை உருவாக்குவது முக்கியமானது - என்றார். (ப-இ)

---

## ஐ.தே.க. தலைமையை கருவே ஏற்கவேண்டும்

*கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, ஓக. 29
கட்சியில் இருந்து வெளியேறியவர்களை ஒன்றிணைக்கக்கூடிய முதிர்ச்சி வாய்ந்த நபரான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இந்தச் சங்கத்தின் செயலாளர் உபாலி அமரசிறி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;
சிக்கலான நிலைமையில் கட்சியை நிலைநிறுத்தி மீண்டும் புத்துணர்ச்சியூட்டக்கூடிய ஒரே நபராக அதனை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் பல்வேறு பதவிகளைப் பெற்றுக்கொள்ளப் போட்டிபோடும் எந்தவொரு நபருக்கும் தலைமைத்துவத்தை வகிக்கமுடியாது. ஏனெனில் அவர்கள் அனைவரும் தோல்வியடைந்தவர்கள், அவர்களுள் பலருக்கு ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன - என்றுள்ளது. (ப-இ)

---

## ஆஸி. அதிகாரி – தளபதி சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஓக. 29
இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர், குழு கெப்டன் சீன் அன்வின், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.
இந்தச் சந்திப்பு இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
தளபதி மற்றும் ஆஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகிய இருவரும் இருதரப்பு முக்கியத்துவம், பரஸ்பர ஆர்வம் மற்றும் கொவிட்-19 தொற்றுநோயானது இங்கு மற்றும் ஆஸ்திரேலியாவில் பரப்புவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்தனர். இந்த நல்லெண்ண வருகையின் அடையாளமாக பாதுகாப்பு ஆலோசகரும், இராணுவத் தளபதியும் நினைவுச்சின்னங்களைப் பரிமாறிக்கொண்டனர். (ப-இ)

---

## வரிக் கொள்கை சட்டங்களில் மாற்றம்

*அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 29
பொருளாதார மறுமலர்ச்சிக்காக வரிக் கொள்கைச் சட்டங்களில் சில மாற்றங்கள் செய்யப்படுமென அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் இலக்காகும். 2009ஆம் ஆண்டின் ஒன்பதாம் இலக்க வரிச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம், 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிச் சட்டம், 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச்சட்டம் ஆகிய சட்டங்களைத் திருத்துவதற்கான சட்டமூலத்தை வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது - என்றார். (ப-இ)

---

## விளையாட்டுக்களை மேம்படுத்த வேண்டும்

*அமைச்சர் நாமல் திட்டம்*



கொழும்பு, ஓக. 29
சர்வதேச அளவில் வெற்றிபெறும் விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு பாடசாலை விளையாட்டுக்களை மேம்படுத்த வேண்டுமென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறியுள்ளதாவது;
திறமையற்றவர்களிடையே திறமையானவர்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, திறமையானவர்களிடையே திறமையானவர்களை உருவாக்குவதற்கும், தேசிய மட்டத்தை மீறி சர்வதேச அளவில் வெற்றிபெறும் விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கும் பாடசாலை விளையாட்டை மேம்படுத்த வேண்டும். இந்த இலக்காக அடைவதற்காகத் தற்போதுள்ள வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்கும், ஒவ்வொரு பாடசாலையின் முதன்மைத் தேவைகளைக் கண்டறிவதன் ஊடாக அவற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இதே வேளை நடைமுறையிலுள்ள விளையாட்டுச் சட்டத்தை மாற்றுவதற்கு ஒரு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் -என்றார். (ப-இ)

## சாதாரணதர...

சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரையில் நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டதன் காரணமாக பரீட்சை பிற் போடப்பட்டிருந்தது. அதேவேளை, 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது- என்றார். (எ-இ)


### வீடு வாடகைக்கு

கந்தர் மடம், யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கருகில் 2 அறை, 2 குளியலறை, களஞ்சிய அறை, கராஜ் வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.

075 281 9020

### நாகபூஷணி திருமணசேவை இடமாற்றப்பட்டுள்ளது

இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (பேபி ஸ்ருடியோவுக்கு அருகில் உள்ளலேன்)

நீங்கள் விரும்பும் அரச, தனியார்துறை உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.

077 138 7596, 071 999 9306

### உயிரியல் (Biology)

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் தனி அல்லது குழு வகுப்புக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 076 8336612

### தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள மேசன் வேலை, சட்டரிங் வேலை, கம்பி வேலை செய்யக்கூடிய மேசன் ஒப்பந்தகாரர் தேவை.

077 592 5371, 077 985 1946

### தணிகா நுண்கலைக் கல்லூரி

சங்கீதம், நடனம், சித்திர வகுப்புக்கள் வழமை போன்று இடம் பெறுகின்றது. தரம் : 1 - தரம்: 5 வரையான குழு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் மற்றும் கராத்தே வகுப்பும் நடைபெறுகின்றது. கிளை நிறுவனமான சாந்த சிறுவர் விளையாட்டுக்கழகத்தின் மேசைப் பந்தாட்டம், கரம், யோகாசன வகுப்புக்களின் புதிய பிரிவு ஆரம்பம்.

தொடர்பு:
யோகா வகுப்பு : 077 413 1409
கராட்டி : 077 990 6308
மேசைப்பந்தாட்டம் : 077 239 5315

151/1(528), பலாலி வீதி
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
0777 624 475

### நவமங்கை நிவாசத்திற்கு தையல் ஆசிரியர் தேவை

உங்கள் அனுபவம், தராதரத்துடன் கூடிய சுய விபரங்களுடன் 15.09.2020 இற்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

இடம் : இராசவீதி,
கோப்பாய் மத்தி.
தொ.பே.: 021 223 0418
076 9800986


### சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
### கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**2018/2019 கல்வியாண்டின் நான்காம் வருட முதலாம் அரையாண்டுக்குரிய சங்கீத, நடன, நாடகமும் அரங்கியலும் மற்றும் கட்புலத் தொழில்நுட்பத்துறை மாணவர்களுக்கான அறிவித்தல்**

2018/2019 கல்வியாண்டின் நான்காம் வருட முதலாம் அரையாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் 02.09.2020 ஆரம்பமாகின்றன.

விடுதி வசதிக்குத் தகுதி பெற்ற மாணவர்கள் அனைவரும் 01.09.2020 காலை முதல் விடுதிகளுக்கு அனுமதிக்கப்படுவர் என்பதனை சகல மாணவர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**பிரதிப் பதிவாளர்**
**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**29.08.2020**


### நவமங்கை நிவாசத்தில் இலவச தையல் பயிற்சி

இடம் : நவமங்கை நிவாசம்
இராசவீதி,
கோப்பாய் மத்தி.
தொ.பே.: 021 223 0418,
076 9800986

விண்ணப்ப முடிவுத்திகதி : 15.09.2020

உங்கள் சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.


## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின்
பழைய மாணவர் சங்கத் தலைவர்

**பேராசிரியர்**
**சி.சிறீசற்குணராசா**

அவர்கள்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
9ஆவது துணைவேந்தராக
நியமனம் பெற்றமையையிட்டுப்
பெருமகிழ்ச்சி அடைவதோடு,
பேராசிரியர் அவர்களின் பணி
மேன்மேலும் சிறந்தோங்க
அவரை உளமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

**பழைய மாணவர் சங்கம்**
**யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.**

## தொண்டமானாறு பலத்தினூடான போக்குவரத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 29

வலிகாமம் கிழக்கு ஊடாக சந்நிதி ஆலயத்தை அடையும் பக்தர்களின் வசதி கருதி தொண்டமானாறு பாலம் ஊடான போக்குவரத்துக்கு நேற்று முதல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்; தெரிவித்தார்.

பாலத்தினூடாக மக்களை போக்குவரத்துக்கு அனுமதிக்கும் வழிபாடுகளுடன் கூடிய சம்பிரதாய நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பால நுழைவாயிலில் இடம்பெற்றது. (ஒ,5)

## மணியை...

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மத்தியகுழு கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது என அறிய வருகிறது. எனினும், கட்சி இதுவரை உத்தியோகபூர்வமாக இதனை அறிவிக்கவில்லை.

மணிவண்ணனை கட்சியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவி நிலைகளிலிருந்து நீக்குவதாக கட்சி முடிவெடுத்து அறிவித்திருந்தது. இருப்பினும் அந்த முறைமை தவறு என்றும் தானே கட்சியின் தேசிய அமைப்பாளர் ம்ற்றும் ஊடகப் பேச்சாளர் என்று மணிவண்ணன் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே உறுப்புரிமையிலிருந்து அவரை தற்காலிகமாக நீக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

மணிவண்ணனுக்கு ஆதரவான உள்ளூராட்சி மன்ற நியமன உறுப்பினர்களை பதவி விலகும்ாறு கட்சித் தலைமையால் ஏற்கனவே அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வரும் நிலையில், இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த விடயத்தை உறுதிப்படுத்த மணிவண்ணன் மற்றும் கட்சியின் செயலர் கஜேந்திரன் ஆகியோருக்கு அழைப்பு எடுத்தபோதும் அவர்கள் பதிலளிக்கவில்லை. (ஒ,5)

## பௌத்தத்துக்கான...

அலி சப்றி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையர் என்ற வகையில் அனைவரையும் ஒன்றிணைத்த நாடொன்றை உருவாக்க வேண்டும். அதற்காக நான் ஆரம்பம் முதல் குரல்கொடுத்து வருகிறேன். இனவாதத்தை புறக்கணித்து தேசியத்துவத்தைப் போசிக்க வேண்டும். அது தொடர்பில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை.

நாடாளுமன்றம் தெரிவான சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசமைப்பை பாதுகாப்பதாகவும் நாட்டை துண்டாட ஆதரவு வழங்குவதில்லை எனவும் உறுதியளிக்கின்றனர். இதனை பேச்சுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது செயலிலும் காட்டவேண்டும்.

இந்த நாட்டில் சகல இனத்தவருக்கும் எந்த மதத்தையும் பின்பற்றும் சுதந்திரம் இருக்கின்றது. சகலரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அதனால் நாட்டுக்கு எது உகந்தது என சிந்தித்து தலைவர்கள் செயற்பட வேண்டும். சரியான பாதையைப் பார்த்து நாட்டுக்குத் தலைமை வழங்க வேண்டும். அதன் மூலமே சகல மக்களும் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் வாழும் நிலை ஏற்படும். எமக்கிடையில் விரிசல் தேவையில்லை. நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை கட்டியெழுப்ப கைகோர்த்துக்கொள்ளவேண்டும், என்றார். (ஒ,5)




# மரண அறிவித்தல்



## திருமதி இரத்தினம் மேரிஜெயசீலி (ஜெயராணி)

பலாலி தெற்கு வயாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராணி என அன்பாக அழைக்கப்படும் இரத்தினம் மேரி ஜெயசீலி கடந்த (27.08.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை - அக்னஸ் (நேசம்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோசப் இரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான றஞ்சி, சறோஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விஜிதா மற்றும் பற்றீசியா (றெஜி-ஆசிரியை, யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி), ஜேக்கப் ஜெயரட்ணம் (சதீஸ்-உரிமையாளர், யாழ் சதீஸ் எலக்ரோனிக்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவா, உஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் பத்திநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமுதா, அனுஷா (ஜேர்மன்), அனுராஜ், யுவராஜ் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், துஷாரா, நிஷாரா, நிஷான், ஜெருஷன், ஜெருஷிகா, ஜெப்சிகா, அஸ்வின், கியூட்வின், பிளேவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெறும் வழிபாட்டைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.18, மார்ட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.
077 613 6007**

**தகவல் :
சதீஸ் (மகன்)
(யாழ் சதீஸ் எலக்ரோனிக்ஸ்)**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20 | | 28 |
| 02 | | 08 |
| 1946 | | 2020 |



## திருமதி கனகசபை விமலாதேவி (பாலா பரமேஸ்வரி)

காரைநகர் களபூமி பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் உக்கிளாங்குளம் வவுனியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை விமலாதேவி (பாலா பரமேஸ்வரி) நேற்று (28.08.2020) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கனகசபை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியம் ( பாலன் - கனடா ) கனகரூபா ( சுவிஸ் ) சிவரூபன் ( கனடா ) காலஞ்சென்ற செங்குட்டுவன் மற்றும் வாசுகி ( வவுனியா ) மஞ்சுளா ( இலண்டன் ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கௌரிதேவி ( கனடா ) தயாபரன் ( சுவிஸ் ) நவரஞ்சினி ( கனடா ) விவேகானந்தராசா ( வவுனியா ) மகேந்திரராசா ( இலண்டன் ) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் சரோஜினி தேவி ( உருத்திரபுரம் ), காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் வசந்தாதேவி காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகலிங்கம், காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் கமலேந்திரம், பொன்னம்மா. மனோகரராசா, ஆகியோரின் சகலியும் ஒவியா. துவ்யா. நாவின், செங்கவி, சாம்பவி. பானுஜா, தஸ்மிகா, கேதாரணி . கஜானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்
(விவேகானந்தராசா மருமகன் -வவுனியா**
0774669636)

# மக்கள் காணிகளை அபகரிக்கும் கடற்படையின் திட்டம் தோல்வி

யாழ்ப்பாணம், மண்டைதீவுப் பகுதியில் பொது மக்களின் காணிகளைக் கையகப் படுத்தக் கடற்படையினர் எடுத்த முயற்சி அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளின் முயற்சியாலும் இடைநிறுத்தப்பட்டது.

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தில் கடந்த 30 வருடங்களாக தனியாருக்குச் சொந்தமான 62 பரப்புக் காணியில், குறிப்பிட்ட பகுதியை இலங்கைக் கடற்படையினர் ஏற்கனவே ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ளனர். அதை அண்டிய பகுதியில் 4 குடும்பத்துக்குச் சொந்தமான 62 பரப்புக் காணியை நிரந்தரமாகச் சுவீகரிக்பதற்காக கடற்படையினர் வேலணை பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பித்தனர்.

அதன்படி யாழ்ப்பாண மாவட்ட நில அளவைத் திணைக்களத்தைக் கொண்டு காணிகளை அளவிடுவதற்கு நேற்று நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

காணி உரிமையாளர்கள் தீவுப்பகுதி சிவில் அமைப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், பா.கஜதீபன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் உப செயலர் குணாளன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த க.சுகாஸ், ந.காண்டீபன் ஆகியோர் இணைந்து சுவீகரிப்புக்கு எதிராக மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(ஒ.ஐ)

## வவுனியாவில...

விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

தேசியப்பட்டியல் விவகாரத்தில் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலர் கட்சியின் தலைவருக்கு அறிவிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்துச் செயற்பட்டதால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று முன்வைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,22)

## மக்களே...

கள் பண மோசடியில் ஈடுபடுவதாகத் தெரியவருகின்றது. பொதுமக்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும் என்று 'உதயன்' கேட்டுக் கொள்கின்றான்.

உதயனில் வெளியாகும் மரண அறிவித்தல்கள், நினைவு அஞ்சலிகள் போன்றவற்றை, அநாமதேய இணையத் தளங்களில் வெளியிட்டு அவற்றுக்குப்பணம் பறிக்கும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் பரவலாக இடம்பெறுவதாக 'உதயனின்' கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இணையத் தளங்களில் வெளியான விளம்பரங்களுக்குரிய கட்டணங்களை வீட்டாரிடம் அறவிடுபவர்கள், 'உதயனின்' பெயர் பொறிக்கப்பட்ட பற்றுச் சீட்டையே வழங்குகின்றனர். இவ்வாறு யாராவது கட்டணங்களை வசூலிக்க வந்தால், உடனடியாக உதயனுக்கு தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். உதயன் பத்திரிகையில் அல்லது உதயன் இணையத் தளத்தில் விளம்பரங்களை பிரசுரிப்பது தொடர்பான தகவல்களைஅறிய விரும்பினால் 021 493 0000 அல்லது 021 493 1111 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (ஆ-ர்)

**இரசாயனவியல் (Chemistry)**
பிரபல பாடசாலையின் விஞ்ஞான பட்டதாரி
ஆசிரியரினால் தனி அல்லது குழு வகுப்புக்கள்
தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 076 386 0592

# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியர் கழகத்தின் முன்னாள் செயலாளரான ஆசிரியை **திருமதி. பாலகுமார் றோசறி மதுரநாயகி** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அந்தோனி மரியம்மா**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்
யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி
இளவாலை.**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 01 | | 28 |
| 12 | | 08 |
| 1930 | | 2020 |



## திருமதி விசுவலிங்கம் சிவபாக்கியம் (அல்லியம்மா)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசுவலிங்கம் சிவபாக்கியம் (அல்லியம்மா) நேற்று (28.08.2020) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-செல்லம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, தங்கச்சிப்பிளை ஆகியோரின் சகோதரியும், தவமணிதேவி. காலஞ்சென்ற பத்மாதேவி மற்றும் சாரதாதேவி, மங்கையற்கரசி, குணசீலன் (கண்ணன்) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, ஸ்ரீஸ்கந்தராசா, அகிலராணி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், சுவிகரன், சுவிசினி, சபாபதி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற இராசேஸ்வரி, இராசேஸ்வரன், இராசகேசினி, ரமணி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2020) சனிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியை சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.**

**தகவல் : மகள்
இரத்தினசபாபதி தவமணிதேவி,**

german cooperation

cbm

இதம்

# இதம் - சிறுவர் பாதுகாப்பிற்கும் அபிவிருத்திக்குமான சமூக நிறுவனம் ( Itham – CACPD) யாழ்ப்பாணம்

## விலை மனுக்கோரல்

காரைநகர். வீதி. சித்தன்கேணி சந்தி. சித்தன்கேணி எனும் முகவரியில் அமைநதுள்ள இதம் - சிறுவர் பாதுகாப்பிற்கும் அபிவிருத்திக்குமான சமூக நிறுவனம் ( Itham – CACPD). சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் மற்றும் வளரும் பருவத்தினருடன் செயலாற்றும் ஒரு தொண்டு நிறுவனமாகும். மாற்றுதிறனாளிகள். ஏழைகள் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணி புரிவதை தனது இலக்காக கொண்ட அமைப்பாகும்.

1. Itham – CACPD யின் பெறுகை குழுவானது (Procurement Committee), தமது பயனொளிகளுக்கு வழங்குவதற்காக கீழ்வரும் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் சுகாதார பொருள்களுக்கான விலை மனுவினை கோர தகுதி வாய்ந்த வழங்குநர்களை அழைக்கின்றது. பொருள்களின் இறுதி உறுதிப்படுத்தலானது அதன் மாதிரிகளை ஆய்வுக்குட்படுவதன் மூலம் முடிவு செய்யப்படும்.

| இல | விபரம் | எடை/ எண்ணிக்கை | அளவு | தர அடையாளம் (Brand) | அலகு விலை |
|---|---|---|---|---|---|
| | குத்தரிசி | 5 Kg | 3000 Packs | | |
| | கடலை | 1Kg | 3000 Packs | | |
| | பாசிப்பயறு | 01 Kg | 3000 Packs | | |
| | பருப்பு | 01 Kg | 3000 Packs | | |
| | சோயா இறைச்சி | 02 Pckt | 3000 Packs | | |
| | சீனி | 01 Kg | 3000 Packs | | |
| | பால் மா | 01 Kg | 3000 Packs | | |
| | தேயிலை தூள் | 250 g | 3000 Packs | | |
| | உப்பு | 500 g | 3000 Packs | | |
| | சுகாதார பொருட்கள் | | | | |
| | சலவைத்தூள் | 01 Kg | 3000 Packs | | |
| | குளியல் சவர்க்காரம் | 05 Pcs | 3000 Packs | | |
| | பற்பசை | 160g – 01 Pcs | 3000 Packs | | |
| | துவைக்கக்கூடிய முகக் கவசம் (Mask) | 05 Pcs | 3000Packs | | |

விலை மனுக்களை மேலே உள்ள வடிவத்தில் தயார் செய்து பதிவு தபாலினூடாகவோ அல்லது ஒட்டப்பட்ட கடித உறையை நேரடியாகவோ பின்வரும் முகவரிக்கு செப்டம்பர் 08.2020 அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். முடித் திகதிக்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**The Chairman of the Procurement Committee, Itham CACPD, Karai nagar Road, Sithternkerny junction, Siththernkerny.**

அவ்வாறு பெறப்பட்ட விலை மனுக்கள் செப்டம்பர் 09 .2020 அன்று திறக்கப்படும்.

**இயக்குனர்,**
**Itham - CACPD**
**யாழ்ப்பாணம்.**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



உதிப்பு
மட்டுவில்
28 • 08 • 1938

உதிர்வு
சுவிஸ்
பேர்ண்
28 • 08 • 2019

## அமரர் திருமதி செல்லாச்சி செல்லையா

அன்பெனும் குடைக்குள் எம்மை அரவணைத்து.
நல்லறிவினையும் நல்லொழுக்கத்தினையும் எமக்கூட்டி
எம் உயர்வுக்கு வழிகாட்டிய எம் தாயே
எமதன்பை மறந்து எட்டாத்தூரம் சென்று
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி ஓராண்டாகியது.
எம் நினைவினிலே என்றும் உங்கள் நினைவுகளே
இறைவன் பாத த்தில் என்றும் அர்ச்சனைமலராய்
வீற்றிருக்க என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

எமது அன்புத் தெய்வத்தின் இழப்பின்போது எமக்கு அனைத்து வழிகளிலும். உதவிகள் புரிந்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்ந்த நன்றிகள்

**குடும்பத்தினர்**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

1. இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2018
2. மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2018

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புரட்டாதி மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைகளுக்கு தோற்றத்தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய த்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப்பெற்றுக்கொள்ளலாம்.
மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 18.09.2020 (வெள்ளிக்கிழமை) ஆகும்.
பூர்த்தி செய்ய ப்பட்ட விண்ண ப்பப்படிவங்களினை திறந்த மற்று ம் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்ப ட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக் கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன்தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**28.08.2020**

# UNIVERSITY OF JAFFNA
# FACULTY OF TECHNOLOGY
# WALK – IN – INTERVIEW

Walk in Interview for appointments to the following posts will be held on 03/09/2020 at 9.30 a.m. at the Board Room of Faculty of Agriculture, Kilinochchi Premises, University of Jaffna.

- Temporary Assistant Lecturer & Temporary Demonstrator in Engineering Technology
- Temporary Demonstrator in Biosystems Technology
- Temporary Demonstrator in Inter Disciplinary Studies

**Qualification:**

1. A degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;

**OR**

2. A degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

**OR**

3. A degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honors and (b) a recognized postgraduates degree in the relevant subject.

Note I : Special Consideration will be given in Engineering Tecno logy to those who have degrees in Technology or Engineering in one or more of the following fields;

- Building Construction / Civil Engineering
- Automobile Technology / Mechanical Engineering
- Electro Technology / Electrical & Electronic Engineering (Priority will be given to candidates with expertise on Electronics & Tele co mmunication)

Note II: Special Consideration will be given in Bio systems Techno logy to those who have degrees in Bio systems Technology specialized in one or more of the following fields;

- Food Production Technology
- Commercial Green farming Technology

Note III: Special Consideration will be given in Inter Disciplinary Studies to those who have studied Mathematics, Statistics, Physics and ICT related field in undergraduate studies;

**Note – Candidates who are awaiting the results of the final degree examinations may also present for the positions of Temporary Demonstrator.**

**SALARY SCALE:** Temporary Assistant Lecturer RS.49, 860/- p.m (fixed)
Temporary Demonstrator RS.40, 920/- p.m (fixed)


In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, NIC and Self - prepared applications.

Registrar
University of Jaffna.

# அருட்தந்தை ம. போல் நட்சத்திரம் அ.ம.தி. அடிகளார்

## அருட்பணியில் நாற்பது ஆண்டுகள்!




அருட்பணி. ம. போல் நட்சத்திரம் அமதி அடிகளார் 'பணிவிடை பெற அல்ல பணிவிடை புரியவே வந்தேன்'(மாற்கு10:45) என்ற இயேசுவின் அழைப்பை ஏற்று அருட்பணியாளராகத் திருநிலைப் படுத்தப்பட்டு நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்வதையிட்டு இறைவனுக்குக் கோடி நன்றி கூறுகின் றோம். 1980ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 29ஆம் நாள் அன்றைய யாழ். ஆயர் வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்களினால் திருநிலைப்படுத்தப்பட்டு தமது முதலாவது குருத்துவப் பணியை ஐந்து ஆண்டுகள்(1980-1985) மறையுரைஞராக ஆரம்பித்தார். தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத் தில் நானாட்டான், வங்காலை, உயிலங்குளம் ஆகிய பங்குகளில் ஏழாண்டுகள் (1985-1992) பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். பின்னர் மீண்டும் மறையுரைஞர் குழுமத்தின் தலைவராக இரண்டு ஆண்டுகள் (1992-1993) பணிசெய்தார். இப்பணியைத் தொடர்ந்து உரோமாபுரியில் நான்கு ஆண்டுகள் (1993 - 1997) ஒழுக்க இறையியலில் உயர்கல்வியை மேற்கொண்டார். நாடு திரும்பியதும் அமலமரித்தியாகிகளின் சிறிய குருமடத்தின் அதிபராக மூன்றாண்டுகள் (1997-1999) பணியாற்றி னார். தொடர்ந்து அமலமரித்தியாகிகளின் உயர் குருமட அதிபராக ஆறாண்டுகள் (1999-2005) பணிபுரிந்தார். இக்காலத்தில் யாழ். மாகாண அமலமரித்தியாகிகளின் முதல்வருக்கு நிர்வாக முதன்மை ஆலோசகர் ஆனார். மேலும் விருப்பு ஆண்டாக ஓராண்டு(2005-2006) கனடா சென்று பணிசெய்தார். மீண்டும் மூன்றாவது தடவையாக மறையுரைஞர் குழுமத்தின் தலைவராக இரண்டு ஆண்டுகள் (2007-2008) பணிபுரிந்தார். தொடர்ந்து யாழ். மாகாண அமலமரித்தியாகிகளின் முதல்வராக ஆறாண்டுகள்(2008-2014) தலைமைத்துவப் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றினார். விருப்பு ஆண்டில் (2015-2016) கனடா நாடு சென்று பணிபுரிந்தார். இன்னும், மூன்று ஆண்டுகள்(2016-2018) ஓய்வுபெறும் அமலமரித்தியாகிகளின் இல்லமாகிய அமல உற்பவத்தின் பொறுப்பாளராக இருந்து பணிசெய்தார். 2018ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மறையுரைஞர் குழுமத்தின் தலைவராகப் பணிபுரிந்து வருகின்றார்.

மறையுரைஞர் பணி, பங்குப் பணி, நிர்வாகப் பணி, கல்விப் பணி, குருமட மாணவர்களை உருவாக்கும் உருவாக்குனர் பணி எனப் பல பணிகளை அடிகளார் மிக ஆர்வத்தோடும் பொறுப்புணர்வோடும் ஆற்றி வந்திருக்கின்றார். இறைவனின் வார்த்தையை எடுத்துரைக்கும் மறையுரைஞராக அடிகளாரின் பணி விதந்துரைக்கப்படக் கூடியது. நான்கு தடவைகள் மறையுரைஞர் குழுமத்தில் ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகளாகத் தியாகத்தோடு பணியாற்றியது, பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. மேலும், அருள்பணியாளர்களை உருவாக்கும் உருவாக்குனராக ஒன்பதாண்டுகள் பணியாற்றி உள்ளார்.

தான் சார்ந்துள்ள துறவற சபையை, குழுமத்தை மிகவும் அன்புசெய்கின்ற ஓர் அமலமரித் துறவியாக ம. போல்நட்சத்திரம் அடிகளார் வாழ்ந்திருக்கின்றார். தம்க்குக் கொடுக்கப்படுகின்ற பணியை அர்ப்பணத்தோடும் தியாக உள்ளத்தோடும் செய்தவர், செய்பவர், செய்து வருபவர். குழும வாழ்வில் தன்னுடன் வாழ்பவர்களோடு சகோதர பாசத்துடனும் தோழமை உணர்வுடனும் வாழ்ந்துகாட்டி இருக்கின்றார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமையாகப் பேச வல்லவர். இத்திறமையைத் தன் மறையுரைஞர் பணிக்கு இவர் நிறைவாகப் பயன்படுத்தினார் என்பதை இவருடைய பணிவாழ்வில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறாக, இறைவனுக்காகவும் அவரின் மக்களுக்காகவும் நற்பணி ஆற்றிவரும் எம் அன்பிற்கினிய அமலமரித்தியாகி அருட்தந்தை ம. போல்நட்சத்திரம் அடிகளார் தமது அருட்பணி வாழ்வில் நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்நாளில் அவரை நெஞ்சார, மனதார, வாயார வாழ்த்துகின்றோம். இவர் இறைவனின் அன்புக் குருவாகத் தொடர்ந்து பணிசெய்ய இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

G.வொட்கின்சன்



### தாவடி திருவருள் மிகு

# அம்பலவாண கந்தசுவாமி திருக்கோயில்

## நூதன இராஜகோபுர பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம்

## பெரும் சாந்தி விழா - 2020


| கிரியை ஆரம்பம் | கிரியை ஆரம்பம் : | மஹா கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 28.08.2020 வெள்ளிக்கிழமை | 29.08.2020சனிக்கிழமை | 30.08.2020 ஞாயிற்றுக்கிழமை |
| காலை: 9.05 மணி | காலை 9.00 மணி | காலை: 7.17 முதல் 9.15 மணிவரை |

| பிரதிஷ்டா பிரதம குரு | இராஜகோபுர நிர்மாணம் |
|---|---|
| கிரியா திலகம் | ஸ்தபதி க.புருசோத்தமன் குழுவினர் |
| பிரம்மஸ்ரீ வாசு ஜெயவஸ்தாங்க குருக்கள் | (சீர்காழி தென் இந்தியா) |

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பலவாணக் கந்தசுவாமி பெருமானைத் தரிசித்து ஆசியும் அருளும் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

முருகன் தொண்டில்
ஆலயபரிபாலன சபையினர்.

## மரண அறிவித்தல்



### அங்கயற்கண்மணி அம்மாள் சிவப்பிரகாசபிள்ளை

(இளைப்பாறிய அதிபர் - இராமநாதன்கல்லூரி)

யாழ்ப்பாணம். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும கொண்ட அங்கயற்கண்மணி அம்மாள் சிவப்பிரகாசபிள்ளை 28.08.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிதம்பரநாதன் மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சின்னையா சிவப்பிரகாசபிள்ளையின் (குண்டுமணி மாஸ்ரர்) அன்பு மனைவியும் சிவசக்தி (London). சிவநாதன் (Canada). சிவநேசன்(Canada). சிவசங்கர் (London).சிவகரன் (Austraila). சிவகலை(Colombo). சிவகங்கா(Australia) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவனேசன். மைதிலி. உஷா. சொர்ணராணி. சிவானுஜா. பிறேம்நாத். சகாதேவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவயோகன். சிவகுமரன். சிவகௌரி. சிவசங்கரி. லக்ஷன். சிவசுருதி. சிவப்பிரியை. சிவநங்கை. சிவகாமி. ஏடிஜோன். அனிஷா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் பைரவி. சிவமயூரி. நேத்ரி. கஸ்தூரி. கார்த்திகா ஆகியோரின் அன்பு அம்மம் மாவும் மியா.லிலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தெஹிவளை மகிந்த பாலரில் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

குடும்பத்தினர்
சிவகரன் (மகன்)

**011 272 1605**

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை (29.08.2020)



பிறப்பு 10 • 04 • 1943

இறப்பு 28 • 07 • 2020

### செல்வவிநாயகம் சுந்தரமூர்த்தி

நீர் இந்த வேளை தன்னில்
சேயாம் என்னை மறந்தால்
நான் இந்த மானிலத்தில் ஆறுதல் யாரிடமோ?

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

சந்தை வீதி, ஆவரங்கால். குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் Dr. பொன்னம்பலம் சுந்தரராஜன்

கடந்த 02.08.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவ பதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கி ருத்திய கிரியைகள் 01.09.2020 செவ்வாய்க்கி ழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



மலர்வு 22.12.1967

உதிர்வு 24.08.2020

### குலசேகரம் ஜெயகாந்தன்

(மென் பொறியியலாளர்)

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா - சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட குலசேகரம் ஜெயகாந்தன் கடந்த (24.08.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற குலசேகரம், தங்கம்மா ஆகியோரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்ற அருளையா, குலமணி ஆகியோரின் அன்பு மருமகனும், சிவதேவியின் அன்புக் கணவரும் சுவேகா, சங்கவி, விசாகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவானி (அவுஸ்திரேலியா), ஜெயராஜ் (இலண்டன்), சாந்தினி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவகன் (அவுஸ்திரேலியா), சிந்துயா (இலண்டன்), Dr.அருந்தவநாதன் (இலண்டன்), சிவகுமார் (இலங்கை), செல்வதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதி நிகழ்வுகள் பின்வருமாறு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்
[குடும்பத்தினர்]

Home Address: 9, Malvern Avenue, Baulkham Hills, NSW 2153, Australia.
Phone: +612 8807 5640 (Home)
Viewing
Friday 28th August 2020 5:30pm – 7:30pm
Liberty Funerals
101 South Street, Granville, NSW 2142.

Final Rituals and Cremation:

**Sunday 30th August 2020**
9:00am – 9:30 am Viewing
9:30am – 12:00noon Rituals
12:00noon Cremation
**Macquarie Park Cemetery and Crematorium**
**Cnr Delhi Road and Plassey Road**
**Macquarie Park**
**NSW 2113**

நேரடி ஒளிபரப்பு
தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| சிவதேவி ஜெயகாந்தன் | +61 421 887 081 |
| குலசேகரம் தங்கம்மா (இந்தியா) | +91 9840 192 964 |
| அருளையா குலமணி (இலங்கை) | +94 071 881 8703 |
| பவானி ஜீவகன் (அவுஸ்ரேலியா) | +61 412 691 100 |
| குலசேகரம் ஜெயராஜ் (பிரித்தானியா) | +44 7824 358 502 |
| சிந்துஜா ஜெயராஜ் (பிரித்தானியா) | +44 7534 969 439 |
| சாந்தினி அருந்தவநாதன் (இந்தியா) | +91 9840 375 853 |
| சிவகுமார் (இலங்கை) | +94 071 660 4251 |
| செல்வதேவி (இலங்கை) | +94 070 662 2888 |

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



விதையாய் 22 • 12 • 1937

விழுதாய் 29 • 07 • 2020

### அமரர் மாணிக்கம் சுந்தரம்

(ஓய்வு நிலை அதிபர்)

எண்ணிறைத்தலைமகனே ஏற்றமிகு பெருந்தகையே
மண்புகழ வாழ்ந்த திரு மாணிக்கச் சுந்தரமே
உன்னதமாய் வழிகாட்டி உயர்ந்த எம் ஒளிவிளக்கே
கண்ணிறைந்து கலங்குகிறோம் காவலனே உன்னிழப்பால்!..

29-07-2020 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியெட்டிக்கிரியைகள் 29-08-2020 அன்று காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். அதன் பின் சபிண்டீகரண கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.31-08-2020 திங்கள் நண்பகல் 11:30 மணிக்கு (சட்டநாதர் கோவிலடி.நல்லூரிலுள்ள)திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

எமது குடும்பத்தலைவரின் மறைவுத்துயரோடு சங்கமித்து.நேரிலும். உள்ளூரிலும் வெளிநாடுகளிலு மிருந்து தொலைபேசி.இணையவழிகள் மூலம் இரங்கல்களைப் பகிர்ந்து கொண்டோருக்கும் மலர்வ ளையங்கள். பதாகைகள். பிரசுரங்கள் மூலம் அனுதாபங்களைப்பகிர்ந்து கொண்டோர்க்கும். இறுதிச் சடங்கிலிருந்து இன்று வரை பல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்..

24,பென்ரிக்கோஸ்ரல் ஒழுங்கை,
கண்டி வீதி,யாழ்ப்பாணம்.
T. P-0212219887 -குடும்பத்தினர்-

## பாலத்...

கிளிநொச்சி, ஓக. 29

பிரமந்தனாறு பகுதியில் பாலம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மண் சரிந்து விழுந்ததில் இளம் குடும்பத் தலைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தர்மபுரம் மேற்கைச் சேர்ந்த இராசலிங்கம் சசிதரன் (வயது36) என்ற ஒரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிரமந்தனாறு விசுவமடு சந்தியை இணைக்கும் வீதியில் புதிதாக பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பாலத்தின் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது கொங்கிறீட் இடும் பணியில் ஈடுபட்டுள்ளார். மண் சரிந்து விழுந்ததில் கம்பிக்குள் சிக்குண்டு அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர் பாதுகாப்பு அங்கிகளின்றியே பணியில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது. உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ஒ,5,6,21)

## சிங்களவர்களை...

நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகா நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களவர்களைக் குறைத்து மதிப்பிட்ட சிலர் கடந்த காலத்தில் எதிர்கொண்ட மோசமான விளைவுகளை விக்னேஸ்வரனும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கடந்த காலத்தில் சிங்களவர்களைக் குறைத்து மதிப்பிட்டவர்கள் இறுதியில் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பதை விக்னேஸ்வரன் மனதில்கொள்ள வேண்டும். நாட்டைப் பிளவுபடுத்தி தனிநாட்டை உருவாக்க முயன்ற தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கும் அந்தக் கதியே ஏற்பட்டது. விக்னேஸ்வரன் ஒருபோதும் பிரபாகரன் ஆக முடியாது. விக்னேஸ்வரனுக்கு அதற்கான வயதுமில்லை. காலமும் இல்லை. உங்களிடம் உள்ளது குறித்து மகிழ்ச்சி அடையுங்கள். இந்த நாட்டில் சிங்களவர்களின் நிலையைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். அவ்வாறு குறைத்து மதிப்பிட்டால் அதற்கான விளைவுகளை நீங்கள் எதிர்கொள்வீர்கள். மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும், என்றார். (ஒ,5,22)

## உண்மை...

அமைத்து உண்மையைக் கண்டறியுமாறு சவால் விடுக் கின்றேன். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடைக்காலக் கணக்கறிக்கை பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறினார்.

'குழப்பம் அடைந்து என்னைத் தூற்றி பொது விவாதத்துக்கு அழைப்பதன் மூலம் ஒரு உண்மை பொய்யாகவோ அல்லது ஒரு பொய் உண்மையாகவோ ஆகிவிடாது. தேவை ஏற்பட்டால், எமது வரலாறு மற்றும் பாரம்பரியம் ஆகியவை தொடர்பில் அறிவுகொண்ட சிறந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் சர்வதேச ரீதியான வரலாற்று ஆய்வாளர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவை நாம் அமைக்கலாம். இதுவரை காலமும் எமது சிங்கள சகோதரர்களுக்கு பிழையான தகவல்களை வழங்கிவந்த போலி வரலாற்று ஆய்வாளர்களை விடுத்து சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டவர்களாக இந்த வரலாற்று ஆய்வாளர்கள் இருக்கவேண்டும்' என்று விக்னேஸ்வரன் கூறினார்.

தனது கருத்துக்களுக்கு ஆதாரமாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் ஓய்வு பெற்ற சரித்திரப் பேராசிரியர் மற்றும் யாழ். பல்கலைக்கழக வேந்தர் பத்மநாதன் தயாரித்த குறிப்பை நாடாளுமன்றத்தின் ஹன்சாட்டில் உள்ளடக்குமாறு சமர்ப்பித்துள்ளார். இது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிமுக குறிப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

'வடகிழக்கு மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்தின் சில இடங்களிலும் வாழ்ந்து வந்த இலங்கையின் தமிழ் சமூகமானது இடைக்கற்காலம், பெருங்கற்கால மக்களின் ஒன்று கலப்பில் இருந்து தோன்றியவர்கள். இடைக்கற்கால கலாசாரமானது கிறிஸ்துவுக்கு முன் 28 ஆயிரம் வருடகால நீண்ட இருப்பைக் கொண்டது' என்று இந்த குறிப்பு ஆரம்பிக்கின்றது.

'நான் முதலமைச்சராக இருந்தபோது சிங்களவர்களும் முஸ்லிம்களும் வடக்குக்குள் நுழைவதற்கு நான் தடை விதித்ததாகக் கூறினார். எனது இரண்டு பிள்ளைகளும் சிங்களவர்களை திருமணம் முடித்திருக்கும் நிலையில் நான் அப்படிக் கூறியிருந்தால் உண்மையில் நான் ஒரு பிசாசாக இருக்கவேண்டும். இத்தகைய வெறுப்பூட்டும், இனவாத செயல்களில் நான் ஈடுபடுவதில்லை. நான் அப்படிக் கோரிய ஏதாவது காணொலி அல்லது ஒலிப்பதிவு இருந்தால் அதனைப் பார்க்க விரும்புகின்றேன். ஆனால், உள்ளூர் மக்களுக்கான முன்னுரிமையை வலியுறுத்தும் சர்வதேச சட்டத்துக்கு முரணாக மகாவலி குடியேற்றங்களில் வெளியிட மக்களைக் கொண்டுவந்து குடியமர்த்துவது தவறு என்று நிச்சயமாக நான் கூறியிருப்பேன்.

நான் நோயாளிகளுக்கு குருதித் தானம் செய்திருந்தேனா என்றும் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மட்டுமே குருதி வங்கிகளுக்கு குருதி வழங்குவதாகவும் உறுப்பினர் கூறியிருந்தார். ஏனைய சாதியினரிடம் இருந்து வெள்ளாள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குருதி பெற்றுக் கொள்வார்களா என்றும் உறுப்பினர் கேட்டிருந்தார். ஆனால், இராணுவம் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் வட மாகாண மக்கள் குருதி வங்கிகளுக்கு குருதித் தானம் செய்துள்ளனர் என்பதை அவர் புரிந்துகொள்ளவேண்டும். எல்லா குருதிகளும் நான்கு வகைகளுக்கு மட்டும் உரியவை என்பதை எம் மக்கள் அறிவார்கள். சிலர் நீல குருதியுடன் பிறக்கின்றார்கள் (உயர் சாதிக்காரர்!) என்று சிலர் நினைப்பதுபோல எமது மக்கள் நினைப்பதில்லை.

மக்களின் நன்மை சார்ந்த சில செயற்திட்டங்களை செய்விப்பதன் மூலம் இராணுவத்தினரின் மனோபாவத்தை மாற்றப் போவதாக மேஜர் ஜெனரல் மகேஷ்சேனநாயக்க என்னை முதலில் சந்தித்தபோது கூறியதை நினைவுறுத்துகின்றேன். இராணுவத்தினர் குருதி கொடுப்பது அநேகமாக அவரின் சிபார்சாகத் தான் இருந்திருக்க வேண்டும். உறுப்பினர் வீரசேகர அவர்கள், படையினரின் மனிதாபிமான செயல்களை வைத்து அரசியல் செய்யக்கூடாது.

வடக்கு கிழக்குக்கு சமஷ்டி கொடுக்கப்பட்டால், ஏனைய பகுதிகளில் வாழும் நாட்டின் 60 சத வீதத்தைக் கொண்ட தமிழர்களின் நிலை என்ன? என்று உறுப்பினர் வெகுளித்தனமாக கேட்டார். நாம் பிரிவினையை கோரவில்லை என்பதை உறுப்பினர் புரிந்துகொள்ளவேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை என்பதே சமஷ்டி, என்றார் விக்னேஸ்வரன். (ஒ,5)

## சர்வஜன..

வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் நடத்துவதற்கு அரசுக்கு இதுதான் சரியான சந்தர்ப்பம். ஒற்றை ஆட்சியின் கீழ் பொருளாதார நலன்கள் மட்டுமே அவர்களுக்கு வேண்டும் என்று மக்கள் தீர்மானித்தால் நான் அரசியலில் இருந்து உடனே விலகிவிடுவேன். இல்லையென்றால், எமது தலைவர்கள் புதிதாகச் சிந்தித்து அரசியல் மேதகைப் பண்புகளுக்குரிய முடிவுகளை எடுத்து எமது இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஒருமித்த' நாட்டுக்குப் பதிலாக 'ஐக்கிய' நாட்டை கட்டியெழுப்புவதன் மூலம், 10 ட்ரில்லியன் சர்வதேச கடன் இருக்கின்ற போதிலும் கூட, இந்த நாட்டை இந்த உலகின் சொர்க்க பூமியாக உங்களால் மாற்ற முடியும். இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு சரியான மருந்து சமஷ்டி முறைமையே ஆகும். தயவுசெய்து இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடாதீர்கள். ஆபத்தை உணரும்போது, தீக்கோழி தனது தலையை மணலில் புதைத்துக் கொள்வதுபோல பிரச்சினைகள் இருக்கும்போது அவை இல்லை என்று கூறி அவற்றில் இருந்து விலகி ஓடுவது முட்டாள்த்தனமானது. நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இனப்பிரச்சினையை எதிர்கொள்வோம். உங்களின் இந்த பொறுப்பை தட்டிக்கழித்து அதனை எமது வருங்கால வாரிசுகளிடம் விட்டுவிடாதீர்கள். போரை வெல்வது இலகுவானது. ஆனால், சமாதானத்தை வெல்வது கடினமானது. சமாதானமே நிரந்தரமான வெற்றியை ஏற்படுத்தவல்லது. இந்தப் புரிதலே அசோக மன்னன் பௌத்தத்தை தழுவக் காரணமானது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்றும் பொருளாதார பிரச்சினை மட்டுமே இருக்கின்றது என்றும் கூறிவரும் உங்களில் சிலரின் விதண்டாவாதத்தை தயவுசெய்து விட்டு விடுங்கள். சுதந்திரத்துக்கு பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு கட்சிகளுமே இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டே பேச்சுக்களில் ஈடுபட்டன. சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டன. போர் நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீண்ட கால இன முரண்பாட்டின் ஒரு இடை வெளிப்பாடாகவே விடுதலைப்புலிகள் தோன்றினார்கள். இன்று விடுதலைப்புலிகள் இல்லை என்ற காரணத்துக்காக இனப்பிரச்சினை இல்லை என்று ஆகிவிடாது.

நாம் ஏன் பிரித்தானியர்களிடம் இருந்து சுதந்திரத்துக்காகப் போராடினோம்? பிரித்தானிய ஆட்சியின் போது அமைதியுடனும் செழிப்புடனும் இருந்தோம். உண்மையில், லீ குவான் யூ சிங்கப்பூரை மற்றொரு சிலோனாக மாற்றுவதாக உறுதிபூண்டிருந்தார். பிரித்தானியர்களின் கீழ் அந்தளவு அமைதியும் வளமும் உள்ள நாடாக இலங்கை இருந்தது. ஆனால் அவ்வாறு இருந்தும் நாம் சுதந்திரத்துக்காகப் போராடினோம். ஏன்? எம்மை உருவாக்கிய எமது மொழி, பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றை உயிர்ப்பாக வைத்திருப்பதற்காகவே நாம் பிரித்தானிய ஆதிக்கத்தில் இருந்து விடுபட முடிவெடுத்தோம்.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் சரியாக இதேபோன்ற இக்கட்டான ஒரு நிலையில் தான் இருக்கிறார்கள். நாம் சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் கீழ் இன்று இருக்கின்றோம். இந்தியாவில் மகாத்மா காந்தி ஒரு வழியில் எமக்கான சுதந்திரத்தையும் பெற்றுக்கொடுத்ததால் நாங்கள் பிரித்தானியர்களிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு ஆயுதங்களை ஏந்த வேண்டி இருக்கவில்லை. ஆனால், சிங்கள பௌத்த அரசின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து விடுபடுவதற்கு எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டி இருந்தது.

வடக்கு கிழக்கின் அரசியல், சமூக வரையறைகளை நான் நன்கு அறிவேன். நாடு முழுவதிலும், நீதித்துறையில் பணியாற்றியபின்னர், வட மாகாண சபையின் நிறைவேற்று முதலமைச்சராக சேவையாற்றுவதற்கு அழைக்கப்பட்டேன். இப்பொழுது நான் நாடு முழுவதுக்குமான சட்டவாக்கவாளர்கள் குழுவின் ஓர் உறுப்பினர். ஆகவே, எனது 80 வருட கால வாழ்க்கையில் அரச இயந்திரத்தின் மூன்று பகுதிகளிலும் நான் பணியாற்றி இருக்கின்றேன். எனது இந்த நீண்ட பயணத்தில் புற அலகுகள் மீதான மத்திய அரசின் ஆதிக்கம் காரணமாக உள்ளார்ந்த ஏற்பட்ட குறைபாடுகளை நான் அறிவேன், என்றார். (ஒ,5)

## தமிழ்...

சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினர் இனவாதம் கக்குகின்றனர். எனினும், தமிழ் மொழிதான் முதல் மொழி என்று சொல்வதில் நானும் இறுமாப்பு அடைகின்றேன். உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். இவ்வாறு சபையில் சவால் விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற எதிர்வரும் நான்கு மாதங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற முதல் நாள் அமர்வில் உரையாற்றிய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், தமிழ் மொழியே முதல் மொழி என்றும், அதில் தான் பேசுவதில் பெருமையடைவதாகவும் கூறினார். இதில் என்ன தவறுள்ளது? சிங்களமொழி உங்களுக்கு எவ்வளவு முக்கியமோ அதேபோன்றே தமிழ் மொழி எங்களுக்கு முக்கியம். தமிழ் மொழிக்காக உயிர், உடைமைகளை இழந்த நாம் இன்னும் எத்தனை இழப்புக்களையும் எமது மொழிக்காகச் சந்திக்கத் தயார்.

எமது தமிழ் மொழி செம்மொழியாக்கப்பட்டுள்ளது. உலகின் முதன்மை மொழி தமிழ் மொழி. செம்மொழியாம் தமிழ் மொழி எமது உயிருடன் கலந்தது. அதனை விமர்சிக்கும் உரிமை உங்களுக்குக் கிடையாது. மண்ணுக்கும், மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்தமையால்தான் இனப்பிரச்சினையும் எழுந்தது. ஆகவே, எவரும் எமது மொழியைக் கொச்சைப்படுத்த வேண்டாம். மொழிக்காக நாம் பல விலைகளைக் கொடுத்துள்ள சூழலில் இன்னும் விலைகளைக் கொடுக்க தயாராகவே உள்ளோம். தமிழ் முதல் மொழி அது என் உயிர்மொழியென்பதில் நான் இறுமாப்பு அடைகின்றேன். நீங்கள் உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள் - என்றார். (ஒ,5,22)

# கண்ணீரால் கவிழும் ராஜபக்ச அரசு

## சரவணபவன் சாடல்

யாழ்ப்பாணம், ஓக. 29

காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் அன்புக்குரிய சொந்தங்களைத் தேடும் தாய்மாரின் உறவுகளின் கண்ணீரால் ராஜபக்சக்கள் கருவறுக்கப்படுவார்கள். அவர்களின் அரசு நிச்சயமாக கவிழும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் நாளை கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு தமிழர் தாயகப் பூமியில் பல்வேறு இடங்களில் போராட்டத்துக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் தங்கள் அதிகார வெறிக்காகவும், பதவி ஆசைக்காகவும் இந்த நாடு தனிச் சிங்கள பௌத்த நாடு என்பதை நிறுவுவதற்காகவும் காலத்துக்கு காலம் தமிழினத்தை துடைத்தொழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்;டு வருகின்றனர்.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டை அரச படைகள் கைப்பற்றிய பின்னர், 1996ஆம் ஆண்டிலிருந்து 1999ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குள் இளையோர் ஆயிரக் கணக்கில் காணாமல் ஆக்கப்பட்டனர். கிருசாந்தி என்ற பாடசாலைச் சிறுமியும் காணாமல் ஆக்கப்பட்டு செம்மணி வெளிக்குள் இருந்து எலும்புக் கூடாக மீட்கப்பட்டமை உலகறிந்தது. காணாமல் ஆக்கிக் கொலை செய்த ராணுவத்தினர் இன்றும் சுதந்திரமாக உலாவருகின்றனர்.

2006ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் யாழ்ப்பாணம் உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த தமிழர் தாயகப் பிரதேசத்திலும், கொழும்பு நகரிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். போரின் இறுதியில் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

காணாமல் ஆக்கப்படுதலை சிறிலங்கா அரசின் ஏவல் படைகளும், அவர்களுடன் இயங்கிய ஒட்டுக் குழுக்களுமே காலம் காலமாக மேற்கொண்டு வந்தன.

பல குடும்பங்களின் வாழ்வாதார அச்சாணியாக இருந்த ஆண்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அந்தக் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்தன. இன்று வரை பல தசாப்பதங்கள் கடந்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது அரசால் கூறப்படவில்லை. உண்மையை வெளிப்படுத்த தயங்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட தன் பிள்ளை வருவான் வருவான் என்று காத்திருந்து பல தாய்மாரும், தந்தையரும் அவர்களைக் காணாமலே சாவடைந்துள்ளனர். இந்த வேதனைகளை வார்த்தையில் சொல்ல முடியாது.

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் சொந்தங்களைத் தேடித் தவிக்கின்ற அந்த உறவுகளின் கண்ணீர், நிச்சயமாக ராஜபக்சக்கள் அரசை கருவறுக்கும். ராஜபக்ச குடும்பமே அதிகாரத் திமிரில் திளைத்திருந்து கொண்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகளுக்கு ஆறுதல் கூறாது அவர்களை ஆவேசப்படுத்தும் கருத்துக்களைச் சொல்லி வருகின்றது. இவை எல்லாவற்றுக்கும் அவர்கள் பதில் சொல்லவேண்டிய நிலைமை வரும். உறவுகளின் கண்ணீர் ராஜபக்சக்களை எப்போதும் விடாது துரத்தும். இவர்களின் கண்ணீரால் அவர்களின் ஆட்சியும் கவிழும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகளின் போராட்டத்தில் பங்கேற்று ஆதரவு வழங்கவுள்ளேன். தாயக உறவுகள் ஒவ்வொருவரும் பங்கேற்று ஆதரவை நல்கவேண்டும், என்றுள்ளது. (ஒ.5)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04 . 02 . 1948

மறைவு
21 . 08 . 2018

அமரர்
தம்பிஜயா கருணாமூர்த்தி
(உரிமையாளர் - கல்யாணி கிறீம் ஹவுஸ்
திதி: வளர்பிறை ஏகாதசி

ஆண்டுகள் இரண்டு ஆனதப்பா தாளாத துயரத்தில் தவிக்கின்றோம்
ஆற்றத்தான் ஆளில்லை இங்கு எமையெல்லாம் தவிக்கவிட்டு
அமைதியாய் நீங்கள் உறங்குகிறீர்கள்
தினம்தினம் மனம் வெதும்புகிறோம்
எங்கு தேடினாலும் கிடைக்காத மனிதம் நிறைந்த மனிதரப்பா
இன்று நீங்கள் இல்லை என்பதை
ஏற்க மறுக்கிறது நெஞ்சம்
பிரசவவேதனையை விடக் கொடியது
தந்தை இல்லை என்ற வேதனை
என்றும் எங்களுடனேயே வாழ்வதாய்
எண்ணிக் கொண்டு வாழ்கிறோம்.

405, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

ஒருவருட வேலையை பூர்த்திசெய்த

# பட்டதாரிகளுக்கான நியமனம் 5 மாதங்கள் தள்ளிப்போனது!

அபிவிருத்தி அதிகாரிகள் சேவையில் பயிற்சிபெற்ற 14 ஆயிரத்து 500 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கையை 5 மாதங்களுக்கு பிற்போட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த அபிவிருத்தி அதிகாரிகள் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் பட்டதாரிகள் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டனர். பயிற்சிக்காலம் நிறைவடைந்த நிலையில் இந்தமாதம் முதல் வாரத்தில் அவர்கள் சேவையில் நிரந்தரமாக இணைத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில் தற்போது 5 மாதங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் செயலர் தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

பயிற்சிபெற்ற பட்டதாரிகளை நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையை அரசு பிற்போட்டுள்ளமையால் எதிர்வரும் 2ஆம் திகதி கொழும்பில் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் எதிர்கால திட்டம் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

20 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு ஒரு வருட கால பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகள் தற்போது நிரந்தர நியமனம் பெற்ற அரச அதிகாரிகளின் கடமைகளைச் செய்துவருகின்றனர். ஏற்கனவே உறுதியளித்ததற்கமைய அவர்கள் நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்படவேண்டும், என்று முனசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ.த)

**விற்பனைக்கு**

கோப்பாய் பிரதேச செயலகம், அருகாமையில் 100m தூரத்தில் இரண்டு கடையுடன் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : A. உதயன்
077 4654 577, 077 4911078

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கிநின்று பணியாற்றக் கூடிய 35-40 வயதிற்கு உட்பட்ட பணிப்பெண் தேவை.

077 9592 628

**வேலையாளர்கள் தேவை**

மேசன், தச்சுவேலை செய்வோர், கம்பிவேலை செய்வோர் மற்றும் கூலியாள்கள் தேவை.

தொடர்புக்கு:
077 2473883, 077 238 3469

**விண்ணப்பிக்கலாம்!**

உங்களின் உணவு உற்பத்தி நடைமுறைகளை சான்றுப்படுத்தலுக்கான இலவச செயல்முறை வழிகாட்டல்




வடமாகாணத்தில் உள்ள உணவு பதனிடும் அல்லது உணவக நிறுவனங்கள் தமது உற்பத்தி நடைமுறைகளை (GMP, HACCP) சான்றுப்படுத்த விரும்புபவர்களுக்கான இலவச செயல் முறை வழிகாட்டல்.

CCIY, PTB இணைந்து உணவு தயாரித்தலில் ஈடுபடும் நிறுவனங்களுக்கான சான்றுப்படுத்துவதற்கான செயல்முறையின் 3ம் தொகுதிக்கான வழிகாட்டல்கள் October மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

30 நிறுவனங்கள் மட்டுமே உள்வாங்கப்படும்!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த Hotel, Restaurant, பனை உணவுப்பதனிடுவோர், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பழப்பாகு, கோடியல், அரிசி ஆலை, அரிசி மா, மிளகாய்த்தூள், உடன் துரித உணவு (Mixture), மீன் பதனிடல், பழவகை பதனிடல், மரக்கறி பதனிடல், பால் பதனிடல், Ice Cream உற்பத்தி வெதுப்பகம் போன்ற அனைவரும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 07.09.2020

CCIY
தொடர்புகளுக்கு
யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம்
106 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 6609
070 366 3600



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 ஆவணி 14 சனிக்கிழமை (29.08.2020) சிகரம் : 11

பட்டதாரியானதும் வேண்டும் எமக்கு வேலையென்றே
பட்ட தடியாகி பலநாள் போராடி பட்ட துயரெலாம்– தேர்தலோடு
விட்டோடிப் போய் வினையாற்றக் காத்திருக்க இப்போ
கட்டாயப் பயிற்சியாம் , கந்தறுந்த கதைதான் பார்!

*ஒட்டுக்குழுச் சுவாமிகள்*

# திட்டமிட்டே தவறிழைத்தார் தமிழரசு செயலாளர்!

**நாடாளுமன்றத் தேர்தல் பின்னடைவு, கட்சிக்குள்ளான குழப்பங்கள், தேசியப் பட்டியல் விவகாரம், மாகாணசபைத் தேர்தல் என்று பல்வேறு பரபரப்பான விடயங்கள் தொடர்பில் 'சஞ்சீவிக்கு', வடக்கு மாகாண அவைத் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் வழங்கிய சூடான நேர்காணல்.**

சந்திப்பு ஏ.ஏ.

**கேள்வி: நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழர் தேசத்தின் முடிவுகளை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அல்லது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் மிகப் பெரிய பின்னடைவுதான். இதனை சீர்தூக்கிப் பார்த்து தவறுகளை நிவர்த்தி செய்யாவிட்டால் தமிழ்த் தேசியத்துக்கு கூட ஆபத்து வரலாம்.

**கே: தமிழ்த் தேசியத்தைப் பேசுகின்ற கட்சிகளுக்கு வடக்கு கிழக்கில் கிடைத்த ஒட்டு மொத்த வாக்குகளின் சதவீதம் அண்ணளவாக 60 ஆகவும், சிங்களத் தேசியக் கட்சிகளைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற, அபிவிருத்தியைப் பற்றிப் பேசுகின்ற, தமிழ்த் தேசியத்துக்கு எதிரான கட்சிகளுக்கு 40 சதவீத வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இவ்வாறானதொரு மிக மோசமான நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது. மக்களின் மனநிலை மாற்றத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் கூட நானும் தமிழ்த் தேசியம்தான் பேசுகின்றேன் என்று கூறி வாக்குக் கேட்டார். டக்ளஸ் தேவானந்தா கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்பாட்டை விமர்சிக்கவில்லை. அபிவிருத்தி விடயங்களைக் கூறி வாக்குக் கேட்டார். என்னைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியம் என்ற உணர்வில் பெரும் தாக்கம் ஏற்படவில்லை. ஆனால் அதனை முன்னெடுப்பவர்கள் தற்போது மாற்றமடைகின்றார்கள். 2015 ஆம் ஆண்டு எங்கள் கட்சியின் சார்பில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அது தற்போது மூன்றாகியுள்ளது. அதற்குப் பதிலாக தமிழ்த் தேசியத்தைப் பேசுகின்ற விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமாரும் தெரிவாகியுள்ளார்கள். அங்கஜன் தமிழ்த் தேசியம் சார்ந்து செயற்படுவேன் என்று கூறியதை நம்பி மக்கள் வாக்களிக்கும் அளவுக்கு நிலைமை இருந்தமைக்கு நாங்களும் பொறுப்பேற்று ஆகவேண்டும்.

**கே: 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக இருந்தது. ஆனால் இன்று ஏகபிரதிநிதித்துவத்தை கூட்டமைப்பு இழந்துள்ளது. இந்தச் சறுக்கலுக்கு என்ன காரணமாக இருக்கும்?**

**ப:** எங்களின் செயற்பாடுகளில் பல குறைபாடு கள் இருந்துள்ளன. நாங்கள் புதிய அரசமைப்பை உருவாக்கலாம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தோம். அந்த அரசமைப்பு உருவாக்கம் சாதகமாக முடியவில்லை. அதை எங்களிலுள்ள குறைபாடாகத்தான் மக்கள் பார்ப்பார்கள். நாங்கள் முயற்சித்தோம். ஆனால் பலன் கிடைக்கவில்லை. எனவே மக்களைப் பொறுத்தவரையில் ஒன்றும் நடைபெறவில்லை என்றுதான் நினைப்பார்கள்.

**கே: புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டபோதே, தமிழ்த் தேசியம் பேசுகின்ற ஏனைய தரப்புக்கள் இந்த முயற்சி தோல்வியில் முடிவடையும் என்று கூட்டமைப்பை எச்சரித்திருந்தன. ஆனால் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன், நாங்கள் நம்பிக்கை வைத்துதான் இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும், ஈடுபடுகின்றோம் என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், வேலை வாய்ப்பு விடயங்களை அரசிடம் கேட்டால் புதிய அரசமைப்பு முயற்சி குழம்பிவிடும் என்று சொன்னார். அவ்வளவு நம்பிக்கையுடன் நகர்ந்த உங்களால் ஏன் வெற்றி பெற முடியவில்லை?**



**ப:** புதிய அரசமைப்பு முயற்சியின் தோல்விக்கு நாங்கள் காரணமல்ல.

**கே: நீங்கள் காரணமில்லை என்றால், மக்கள் அந்தக் காரணத்துக்காக உங்களை ஏன் நிராகரித்தார்கள்?**

**ப:** மக்கள் இந்த விடயத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அதற்குரிய சூழலும் இருக்கவில்லை. புதிய அரசமைப்புக்கான இறுதிக் கட்டப் பணிகள் முடிவடைந்து நவம்பர் மாதம் (2018 ஆம் ஆண்டு) சமர்ப்பிக்கப்பட இருந்த காலத்தில் ஒக்ரோபர் 26ஆம் திகதி சதிப் புரட்சி மூலம் அதனைக் குழப்பியடித்தவர் மைத்திரிபால சிறிசேன.

**கே: தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் மக்கள் அபிவிருத்தியின் பக்கம் திசை திரும்பி விட்டார்கள் என்று கருத முடியுமா?**

**ப:** மக்கள் அபிவிருத்தியையும், உரிமையையும் எதிர்பார்க்கின்றார்கள். தேசியத் தலைவர்கூட அபிவிருத்தியை நிராகரிக்கவில்லை. இரண்டும் சமாந்தரமாகச் செல்ல வேண்டும் என்று விரும்பியிருந்தார். நாங்கள் அபிவிருத்தி விடயங்களைச் செயற்படுத்தியிருந்தாலும் மக்கள் அதில் திருப்தியடையக் கூடிய வகையில் செய்தோமா என்பதுதான் பிரச்சினை.

**கே: 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பு பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை கூட்டமைப்பு கைப்பற்றியது. இந்தக் காலத்தில் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன், "கூட்டமைப்பிடமிருந்து பிரிந்து சென்ற வாக்குகள் சிங்களத் தேசியக் கட்சிகளுக்குத்தான் அபிவிருத்தி என்ற எதிர்பார்ப்பில் கிடைத்தன. நாங்களும் உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதன் ஊடாக அவ் வாக்குகளை மீளப் பெற முடியும்" என்றார். அதன் பின்னர் கம்பரெலிய உள்ளிட்ட சில அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.**

(12ஆம் பக்கம் பார்க்க)










புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் அடுத்தகட்டம்?

நிலாந்தன்

நாளை அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டவர்களின்தினம். அதையொட்டி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமிழ்ப் ப்குதி எங்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நகர மையத்தில் இருந்து தொடங்கும் ஊர்வலம் கச்சேரியைச் சென்றடையும். மட்டக்களப்பில் கல்லடிப் பாலத்தில் இருந்து தொடங்கி காந்தி சிலையைச் சென்றடையும். தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடக்கவிருக்கின்றன.




காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இவ்வாறு போராடுவது இதுதான் முதல் தடவை அல்ல . ஆனால் ராஜபக்சக்கள் இரண்டாவது தடவை ஆட்சிக்கு வந்த பின் அவர்கள் நடத்தும் பெரிய அளவிலான போராட்டம் இது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ரணில் - மைத்திரிஅரசாங்கத்தின் காலத்தில் வீதியோரங்களில் அமர்ந்து போராடத்தொடங்கினார்கள். ஒவ்வொரு மார்ச் ஜெனிவாக் கூட்டத்தொடரை ஒட்டி அல்லது அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தையொட்டி பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படும். நாளை 30 ஆம் திகதியோடு இந்தப் போராட்டங்கள் 1,290 ஆவது நாளை அடைகின்றன. ஆனால் போராடும் மக்களுக்கு பொருத்தமான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. ஏன்?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெருவோரங்களில் அமர்ந்திருந்து போராடத் தொடங்கிய பொழுது, தொடக்கத்தில் ஊடகங்களின் கவனத்தையும் அரசியல்வாதிகளின் கவனத்தையும் அவர்களால் கவர முடிந்தது. தொடக்கத்தில் அரசியல் கட்சித் தலைவர்களும் பிரமுகர்களும் போராட்டக் குடில்களுக்குப் போய் தங்கள் வருகையைப் பதிவு செய்தார்கள். ஊடகங்கள் ஒவ்வொரு நாளும் எத்தனையாம் நாள் போராட்டம் என்று முன் பக்கத்தில் செய்தி போட்டன. ஆனால் ஒரு கட்டத்துக்கு மேல் எல்லாமே தொய்யத் தொடங்கியது. படிப்படியாக இப்போராட்டங்கள் யாருடைய கவனத்தையும்ஈர்க்காத ஒரு நிலைமை வந்தது.



தெருவோரப் போராட்டங்கள் 500 ஆவது 'நாளை நெருங்கியபோது சட்டச்செயற்பாட்டாளரான வழக்கறிஞர் ரட்ணவேலு உட்பட வவுனியாவைச் சேர்ந்த சில செயற்பாட்டாளர்கள் போராடும் மக்களை அணுகி சில ஆலோசனைகளை முன்வைத்தார்கள். அரசாங்கத்தின் கவனத்தையும், வெளி உலகின் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் இந்தப் போராட்டங்களை வடிவமைக்க வேண்டும் என்றும் சிந்திக்கப்பட்டது. அதன் பிரகாரம் தெருவோரப் போராட்டங்களை நிறுத்தி, போராடும் மக்கள் தங்களுக்கென்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அலுவலகங்களை உருவாக்கி, அந்த அலுவலகங்களில் இருந்தபடி போராடலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டது. வவுனியா மாவட்ட போராடும் அமைப்பின் ஒருபகுதி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் போராட்டம் பெருமளவுக்கு சோர்ந்து போய்த் தேங்கிவிட்டது.

இப்படிப்பட்டதொரு பின்னணியில் கோத்தாபய ராஜபக்சவின் வருகைக்குப்பின் பெரிய அளவில் ஒரு போராட்டத்தை மேற்படி அமைப்புகள் ஒழுங்குபடுத்தி இருக்கின்றன. எனினும் வவுனியா மாவட்ட அமைப்பு தனது போராட்டத்தை ஒரு நாள் முன்னதாக அதாவது இன்று சனிக்கிழமைநடத்தப் போவதாகக் கூறியிருக்கிறது. இம்முறையும் போராட்ட அமைப்புகளுக்கு இடையே ஒத்த கருத்து இல்லை என்பதையே இது காட்டுகின்றது. ஈழத்தமிழர்களின் அரசியல் பரப்பில் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் என்று பார்த்தால், அது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தெருவோரப் போராட்டம்தான். இதற்கு முன் மூன்றாம் கட்ட ஈழப்போர் காலகட்டத்தில் மல்லாவியில் நிவாரணவெட்டை எதிர்த்து ஐ.சி.ஆர்.சி அலுவலகத்துக்கு அண்மையில் ஒரு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப்போராட்டம் ஒப்பீட்டளவில் நீண்ட நாட்களுக்கு நடந்தது.

அதற்குப்பின் இப்பொழுது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை 1,290 ஆவது நாளை அடைகிறது. போராடத்தொடங்கியதிலிருந்து இன்று வரையிலும் மொத்தம் எழுபதுக்கும் குறையாத உறவினர்கள் இறந்து போய்விட்டதாக அமைப்புகள் தெரிவிக்கின்றன. மன்னாரில் நட்ந்த ஒரு ஊடகச்சந்திப்பில் கருத்து தெரிவித்த பெற்றோரில் ஒருவர், அடுத்த ஆண்டு இதே போல ஒரு போராட்டத்தை ஒழுங்குபடுத்தும் பொழுது எங்களில் எத்தனை பேர் உயிரோடுஇருப்பார்களோ தெரியாது என்று கூறியிருந்தார்.

அதுதான் உண்மை. இந்த போராட்டத்தின் உயிர்மூச்சாக காணப்படுவது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இரத்த உறவுகள்தான். அதிலும் குறிப்பாக முதிய பெற்றோர்தான். அப்படிப்பட்டவர்கள்தான் தமக்கு வரக்கூடியஉயிர் ஆபத்தையும் பொருட்படுத்தாது ஆவேசமாகப் போராடுவார்கள். அவர்களுடைய உடல்நிலையும் வயதும் அவர்களுக்கு ஒரு தடைதான். ஆனாலும் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைக்கு நீதி வேண்டும் என்றஆவேசம் அவர்களைப் போராட வைக்கிறது. இந்தப் பெற்றோர் படிப்படியாக இறந்துபோனால் போராட்டத்தின் கதி என்னவாகும்?

இவ்வாறு ஒவ்வொரு நாளும் போராட்டக்குடிலில் குந்தி இருப்பதற்கு பதிலாக, அவர்கள் வீட்டில் ஆடு வளர்த்தால் அல்லது கோழி வளர்த்தால் அல்லது பாய் இழைத்தால் எதையாவது சம்பாதிக்கக் கூடியதாக இருக்கும். அல்லது குறைந்த பட்சம் தமது பேரப்பிள்ளைகளையாவது பராமரிக்கலாம். ஆனால் அவை எவற்றையும் செய்யாமல் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைக்காக இவ்வாறு பொது இடம் ஒன்றில் வந்து அமர்ந்திருக்கிறார்கள். அவர்களால் தென்னிலங்கையின் கவனத்தையும் ஈர்க்க முடியவில்லை. உலகத்தின் கவனத்தையும் ஈர்க்க முடியவில்லை.

(13ஆம் பக்கம் பார்க்க)



இந்த போராட்டத்தின் உயிர்மூச்சாகக் காணப்படுவது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இரத்த உறவுகள்தான். அதிலும் குறிப்பாக முதிய பெற்றோர் தான். அப்படிப்பட்டவர்கள்தான் தமக்கு வரக்கூடிய உயிர் ஆபத்தையும்பொருட்படுத்தாது ஆவேசமாகப் போராடுவார்கள். அவர்களுடைய உடல்நிலையும் வயதும் அவர்களுக்கு ஒரு தடைதான். ஆனாலும் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைக்கு நீதி வேண்டும் என்றஆவேசம் அவர்களைப் போராட வைக்கிறது.



# நவால்னி எனும் நாயகன்!

ஆர்.பிரகாஷ்

ரஷ்யாவில் நடப்பது ஜனநாயக ஆட்சி என்ற தோற்றப்பாடு வெளியில் காட்டப்பட்டாலும், அதன் வலிய ஆட்சியாளரான புடினின் உத்தரவுகள், கட்டளைகள், மற்றும் செயற்பாடுகள் எத்தகையவை என்பதை சர்வதேச ஊடகங்கள் பலவும் புட்டுப் புட்டு வைத்துப் பல வருடங்களாகிவிட்டன. இதனால்தான் இன்று ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவரான நவால்னியின் உடலில் நஞ்சுள்ளமைக்குக் காரணம் புடினும் அவரது அரசும்தான் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

**ஜனநாயக சர்வாதிகாரம்**

சிம்பாப்வேயின் ஆட்சியாளரான முகாபே, தான் அதிகாரத்தில் தொடரவேண்டும் என்று விரும்பினார். அதற்காக அவர் பெரிதாக ஒன்றும் கஷ்டப்படவில்லை. மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுக்கவில்லை. கட்சிக்குள்ளும் வெளியிலும் தனக்குப் போட்டியாளர் என்று கருதும் நபரை மெல்ல ஓரம் கட்டி விடுவார். அவரின் குரல்கள் நசுக்கப்படும். கூடுதலான எதிர்ப்பை வெளிப்படுத்தினால், அந்த நபர் சிம்பாப்வேயின் புறநகர்ப் பகுதியொன்றில் கொன்று வீசப்பட்டிருப்பார். இதே பாணிதான் புடினுடையதும். பெரிதும் வளர்ச்சியடையாத ஆபிரிக்க நாட்டில் முன்னெடுக்கப்பட்ட வியூகத்தை உலகின் வல்லரசான ரஷ்யாவில் முன்னெடுக்கும் 'கெத்து' புடினுக்கு அதிகம். அந்த வகையிலான அடக்குமுறையின் எதிரொலிப்பே ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரான நவால்னி நஞ்சூட்டப்பட்டமை என்கின்றனர் வல்லுநர்கள்.



**பெரும் தலைவலியானவர்**

அலெக்சி நவால்னி, ரஷ்ய அரசுக்கும் புடினுக்கும் பெரும் சிம்மசொப்பனமாகவே திகழ்ந்தார். இதற்கு முன்னர் ரஷ்ய அரசால் நேரடியாகவே இலக்கு வைக்கப்பட்டார். வெளிப்படையாகவே அவர் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. கடந்த வருடம் ரஷ்ய அதிபர் தேர்தல் இடம்பெற்றது. அந்தத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரான நவால்னி போட்டியிடுவதற்கு நேரடியாகவே தடை விதிக்கப்பட்டது. தேசத்துரோகக் குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் நவால்னி மீது சுமத்தப் பட்டு, இந்தத் தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து எதிர்க்கட்சியின் முக்கிய புள்ளி இல்லாமல் தேர்தலை எதிர்கொண்டு வென்றார் புடின். அதன் பின்னர் ரஷ்ய அரசமைப்பில் புடின் மாற்றங்களைக் கொண்டுவந்து இன்னும் 20 வருடங்கள் ரஷ்யாவை ஆட்சி செய்யக்கூடிய அதிகாரத்தைப் பெற்றவராகிவிட்டார். இதற்கெல்லாம் ரஷ்யாவில் பெரும் எதிர்ப்பை வெளிப் படுத்தியவர், வெளிப்படுத்துகின்றவர் நவால்னிதான். அதனால்தானோ என்னமோ, நவால்னியைநிரந்தரமாக அடக்கிவிட சதி இடம்பெற்றுள்ளது என்று சந்தேகிக்கப்பட்டுள்ளது.

**பெரும் எதிர்ப்பலை**

நவால்னிக்கு நஞ்சூட்டப்பட்டமை தொடர்பில் ரஷ்யாவுக்கு எதிராகத் தற்போது மிகப்பெரும் எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவில் வைத்து நவால்னிக்கு மருத்துவம் வழங்கப்பட்டால் அவர் கொல்லப்படலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டு அவர் தற்போது ஜேர்மனியின் தலைநகர் பெர்லினுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்குவைத்து சிகிச்சை வழங்கப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் பிரான்ஸ், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் நவால்னி விடயத்தில் வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. நவால்னிக்கு ரஷ்ய அரசால்தான் நஞ்சூட்டப்பட்டது என்றால் ஏற்கனவே இதுபோன்ற சர்ச்சைகளில் சிக்கி ஏகப்பட்ட கறுப்புப் புள்ளிகளை வாங்கிக் குவித்துள்ள ரஷ்யா இந்த விடயத்தில் இன்னும் மோசமான விளைவுகளையே சந்திக்க வேண்டியிருக்கும். உலக அரங்கில் இருந்து தனிமைப்படுத்தப்படல், பொருளாதாரத் தடை என்றவாறாக சர்வதேச நடவடிக்கைகள் நீண்டு செல்லவும் வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. ஆனாலும் தன் அதிகாரத்தைத் தக்க வைக்க இந்த விடயத்தையும் புஸ்வாணமாக்க, புடின் என்ன தகிடுதத்தம் செய்யப்போகிறார் என்பதே இப்போது உலக அரங்கில் பெரும் கேள்விக்குறியொன்றாக உருவாகியுள்ளது. ■



# சூரியன் இல்லா வானம்!

ஆர்.லயனல்

உலகின் மிகப் பழமையான கால்பந்தாட்டத் தொடரான லாலிகாவில் விளையாடிவரும் பார்சிலோனா கழகத்துக்குள் தற்போது உச்சக்கட்ட கருத்து முரண்பாடுகள் ஏற்பட ஆரம்பித்துள்ளமை வெளிப்படையாகவே தெரிகின்றது. நானா நீயா என்ற இந்தப் போட்டியின் ஆகப்பிந்திய தகவலாக 'மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு வெளியேறவுள்ளார்' என்ற செய்தி ,பார்சிலோனா ரசிகர்களுக்கு மட்டும் என்றல்லாது ஒட்டுமொத்தக் கால்பந்தாட்ட ரசிகர்களுக்கும் பேரிடியாக விழுந்துள்ளது. ஏனெனில் மெஸ்ஸியும் பார்சிலோனா கால்பந்தாட்டக் கழகமும் ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் போன்ற நிலைதான் இன்றுவரையிலான அவதானிப்பு. சிறு பராயத்தில் இருந்து மெஸ்ஸியை வளர்த்துவிட்டது பார்சிலோனாதான். அதேபோல் பார்சிலோனாவின் களத்தைப் பயன்படுத்தி அந்தக் கழகத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றவர் மெஸ்ஸிதான். இதனால்தான் தனது தேசிய அணியான ஆர்ஜென்ரீனாவை விட பார்சிலோனாவை மெஸ்ஸி அதிகம் நேசிக்கின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்பட்டன. இவ்வாறானதொரு பின்னணியில் பார்சிலோனாவில் இருந்து மெஸ்ஸி வெளியேறவுள்ளார் என்ற செய்தியை ஜீரணிப்பதென்பது கால்பந்தாட்டத்தை ரசிக்கும் அனைவருக்கும் கடினமானதுதான். சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவரான டோனியை, அந்த அணியை விடுத்து இன்னொரு அணியில் காணமுடியுமா?. அதனையொத்த நிலை இது.

**ஏன் இந்த முரண்பாடு?**

மெஸ்ஸிக்கும் பார்சிலோனாவுக்கும் இடையிலான இந்த முரண்பாடு இன்று நேற்றல்ல கடந்த இரண்டு வருடங்களாகவே நீறுபூத்த நெருப்பாக வெளித்தெரியாமல் இருந்து வந்துள்ளது. தற்போதுதான் அது வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளது. பார்சிலோனாவில் இருந்து நெய்மர் வெளியேற்றப்பட்டதை அடுத்து பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் நெய்மரை ஒப்பந்தம் செய்தது. இந்த பரிமாற்றத்தை அடுத்து பார்சிலோனாவின் தகர்க்க முடியாத அரண் என்று கருதப்பட்ட எம்.எஸ்.என் கூட்டணி (மெஸ்ஸி, சுவாரஸ், நெய்மர்) உடைந்தது. இதன் பின்னர் பார்சிலோனா உம்திதி, விடால், கிரீஸ்மன் உள்ளிட்ட நட்சத்திர வீரர்களை ஒப்பந்தம் செய்தபோதிலும் எம்.எஸ்.என் கூட்டணிக்குள் இருந்த 'ஆத்மார்த்த இணைப்பை' மீண்டும் கொண்டுவர முடியவில்லை. இதற்காக மெஸ்ஸி பார்சிலோனாவின் நிர்வாகத்தை நொந்துகொண்டார். பின்னர் மெஸ்ஸி ஒருவாறு 'கூலாக்கப்பட்டு' அவருக்குத் தலைமைப் பொறுப்பும் வழங்கப்பட்டது. அதன் பின்னர் மாற்றப்பட்ட நிர்வாகம் மெஸ்ஸிக்குப் பெரும் தலைவலியாக அமைந்தது. மெஸ்ஸி என்னும் இராஜாவின் இராச்சியத்துக்குள் அவருக்கு வேண்டப்படாதவர்கள் உள்ளே வந்தமை அவரை மேலும் கோபப்படுத்தியது. விரக்தியின் உச்சத்துக்குக் கொண்டுசென்றது. இதுவே மெஸ்ஸி தன் சொந்த நாட்டைவிட மேலாக நேசிக்கும் அணியில் இருந்து வெளியேற வேண்டும் என்று முடிவெடுத்தமைக்கான முக்கிய காரணம்.

**சம்பியன்ஸ் லீக் தோல்வி**

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடர் அண்மையில் முடிவுக்கு வந்தது. இந்தத் தொடரில் சம்பியனானது மூனிச். மூனிச் அணி காலிறுதியில் மெஸ்ஸி தலைமையிலான பார்சிலோனாவை புரட்டி எடுத்தது. 8:2 என்ற அடிப்படையில் இமாலய வெற்றியைப் பெற்றது. மெஸ்ஸியின் கால்பந்தாட்ட வரலாற்றில் என்றுமே இல்லாத தோல்வியாக இது அமைந்தது. இந்தப் படுதோல்வியை அடுத்து அணியின் பயிற்சியாளரை நீக்கியது பார்சிலோனா. இதையடுத்தும் மெஸ்ஸி அந்தக் கழகத்தை விட்டுச் செல்ல முடிவெடுத்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


**இங்கிலாந்து இலக்கு**

மெஸ்ஸியை பார்சிலோனாவின் பரம எதிரியான ரியல் மட்ரிட்தான் ஒப்பந்தம் செய்யும் என்று கருதப்பட்டது. ரியல் மட்ரிட் அணி மோட்ரிச் உள்ளிட்ட சில வீரர்களை வெளியேற்ற மேற்கொண்ட நகர்வு மெஸ்ஸி ரியல் மட்ரிட்டுக்குத்தான் வருகின்றார் என்ற பிம்பத்தை ஏற்படுத்தியது. ஆனால் மெஸ்ஸி இங்கிலாந்து பிரீமியர் லீக் கழகங்களில் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளார் என்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி மன்செஸ்டர் சிற்றி, மற்றும் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணிகள் மெஸ்ஸியை ஒப்பந்தம் செய்ய இலக்கு வைக்கின்றன. அதிலும் 700 மில்லியன் யூரோ வரையில் மெஸ்ஸிக்காக வழங்க மன்செஸ்டர் யுனைற்ரெட் தயாராக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**மெஸ்ஸி இல்லா பார்சா**

சூரியன் இல்லாத வானம் எவ்வாறு இருக்கும் என்று கற்பனை செய்ய முடிகின்றதா?. அதுபோன்றுதான் இனி மெஸ்ஸி இல்லாத பார்சிலோனா அணியும் இருக்கப் போகின்றது. பார்சிலோனாவை விட்டு மெஸ்ஸி வெளியேறுவது நிஜமானால் இந்தப் பேரிழப்பில் இருந்து பார்சிலோனா மீண்டு வருவதற்கு மூன்று முதல் ஐந்து வருடங்கள்கூட ஆகலாம். சிலவேளை மீள முடியாமல் கூடப் போகலாம். ■

29 ஓகஸ்ட் 2020



## புதிர் 8




○ மாயன்

அந்தச் சமையல்வாசனை சாதாரணமானதல்ல. நுகர்வோரை அப்படியே சுண்டியிழுத்து தன்னைப் பின் தொடரச் செய்வதாக இருந்தது. பரிவழுதி, தூவாரகன், இளஞ்சந்திரன், காக்கை குப்தன் நால்வரும் சங்கிலியால் பிணைக்கப்பட்டவர்களைப் போல ஒருவர் பின் ஒருவராக அந்த வாசனை வந்த வழியே போய், கடைசியில் ஒரு உணவுக்கடை முன்னால் நின்றார் கள்.

நகரின் மத்தியில் மிகப்பெரிய பட்டுக்குடை ஒன்று கட்டப்பட்டு, அதன் கீழே வகை வகையான உணவுப்பண்டங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மீது ஏதோ சில இலக்கங்கள் போடப்பட்டிருந்தன. அறுசுவையான உணவுப்பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்தபோதும், அந்த உணவுக்கடையில் இருந்த பெண்ணொருவரைத் தவிர வேறெவரும் அங்கு இருக்கவில்லை. வீதியால் சென்றவர்கள் கூட , கடையை எட்டிப் பார்த்து, அப்படியே இவர்கள் நல்வரையும் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சென்றுகொண்டிருந்தார்களே தவிர, ஒருவராவது கடைக்கு வருவதாகத் தெரியவில்லை. பசியால் நால்வரும், சிறுகுடலைப் பெருங்குடல் தின்று கொண்டிருப்பது போல உணர்ந்தார்களே தவிர, கடைக்கு ஏன் எவருமே உணவுப் பண்டங்களை வாங்க வரவில்லை என்று கொஞ்சமும் சிந்திக்கவில்லை. காக்கைகுப்தன் உணவுகளைப் பார்த்து வாயூறிக் கொண்டே, எதைத் தெரிவு செய்வது என்று குழம்பிய வனாக இருந்தான்.

" அந்தக் குகைக்குப் பின்னால் இப்படி ஒரு அற்புதமான நகரம் இருக்குமென்றோ, அங்கே பரவசமூட்டும் உணவுப்பண்டங்கள் இருக்குமென்றோ நான் கனவிலும் நினைக்கவில்லை" என்று சொன்னான் துவாரகன். அவன் சொல்வதை ஏனையவர்களும் ஆமோதித்தனர்.

" அது சரி, காக்கை குப்தனுக்கு கூடவா இந்தக் கடை தெரியாது?" என்று இளஞ்சந்திரன் கேட்டான்.

" இல்லை இளவல்களே, நான் புதிர்மலையில் இருந்து இன்னொரு கடினபாதை வழியூடாகவே உள்ளே அனுப்பப்பட்டேன்,. அதுவும்...." என்று ஏதோ சொல்லவந்தவன் உடனேயே நாக்கைக் கடித்துக் கொண்டான். அதை துவாரகன் கண்டுவிட்டான்.

" ஏதோ ஒரு இரகசியத்தை காக்கை குப்தன் நம்மிடம் சொல்லாமல் மறைக்கிறான்" என அவன் மனதுக்குள் எண்ணிக்கொண்டான். அதை வாய் விட்டே அவனிடம் கேட்க நினைக்கையில் உணவுக்கடைப் பெண்ணின் குரல் குறுக்கிட்டது.

" வாருங்கள், உங்களுக்காகத்தான் இந்த உணவுப்பதார்த்தங்கள் காத்திருக்கின்றன. பிடித்தவற்றை எடுத்து உண்ணுங்கள், ஆனால் உரிய விலையைக் கொடுத்துவிட்டு" என்று கடைசியாகத்தான் விலை பற்றிச் சொன்னாள். நால்வரும் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு,கடைசியாக பொரிக்கப்பட்ட மாமிசக் கூடையை எடுத்தனர்.

" ஓ, மாமிசமா உண்ணப்போகிறீர்கள், அதோ தாமரை இலையையும், அங்கேயுள்ள சாதத்தையும் இதனோடு சேர்த்து எடுத்துக்கொள்ளலாம். விலை வெறும் 3 தான்"

அவள் சொன்னதும் பரிவழுதி இடுப்பில் கட்டப்பட்டிருந்த ஒரு பட்டு பையை அவிழ்த்தான். அதில் இருந்து மூன்று பொற்காசுகளை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"இந்தா பெண்ணே நீ கேட்ட மூன்று பொற்காசுகள்"

அப்போது அந்தப் பெண் கடகடவெனப் பலமாகச் சிரித்தாள்.

"இளவரசரே, யாருக்கு வேண்டும் உங்கள் பொற்காசு. நான் மூன்று என்று சொன்னது மூன்று புதிர்கள். அதுதான் இந்த உணவின் விலை" என்று சொன்னாள். அதைக்கேட்டதும் எல்லோருக்கும் தூக்கிவாரிப்போட்டது.

"பரவாயில்லை, பயப்படாதீர்கள், சுலபமான புதிர்கள் தான். இதோ முதலாவது புதிர். என்னிடம் ஒரு இரும்புச் சங்கிலி உண்டு. " என்று ஒரு சங்கிலியைக் காட்டிவிட்டு புதிரைத் தொடர்ந்தாள்.

"இந்தச் சங்கிலி மூன்று வளையங்களால் ஆனது. இதில் உள்ளதைப் போல மூன்று வளையங்கள் தனித்தனியே இருக்கின்றன. அவற்றை இணைத்து ஒரு சங்கிலியாக்க வேண்டும். ஒரு வளையத்தை வெட்ட 1 பொற்காசும், அதனை ஒட்ட இன்னொரு பொற்காசும் கேட்கிறார் கொல்லர். அப்படியானால் மூன்று வளையங்களையும் இணைத்துச் சங்கியாக்க எவ்வளவு பொற்காசுகள் தேவைப்படும்?"

அவள் புதிரைச் சொல்லி முடிப்பதற்கிடையில், பசியின் அகோராத்தாலோ என்னவோ " நான்கு பொற்காசுகள்" என்று கூவினான் பரிவழுதி. மற்றவர்கள் எல்லோரும் அவனைப் பார்த்து "இப்படிக் காரியத்தைக் கெடுத்துவிட்டாயே" என்று தலையில் கைவைத்தார்கள்.

(மர்மங்கள் தொடரும்)



## அப்பா

நெஞ்சில் சுமந்து
உள்ளன்பை கொட்டி பக்குவமாய்
எம்மை பாதுகாத்த உறவே
அழும் போது துடித்திடும்
உள்ளம் உனதே
அழாதே என சமாதானம் .
செய்யும் அன்பு உனதே
பட்டினியால் தான் இருந்தாலும்
தன் குழந்தை பசிதீர்க்க
கண்ணுக்கு எட்டாத தூரம்
சென்றாவது பணிபுரிந்திடும்
கடமை உணர்வே
இரவு பகல் என முப்பொழுதும்
எமக்கென்று அர்ப்பணித்த உயிரே
நீ தந்த உயிரும் உடலும் உள்ளவரை
உன் தோள்களில் விளையாடி
உன் கன்னங்கள் கிள்ளி
உன் முகம் கண்டு சிவக்கும் என்
உணர்வுகள் என்றும் அப்பா
என்று உன்னைத் தேடும்
தைரியம் தந்து தேற்றிடும் உன்
பேச்சு நீதானே அப்பா என் மூச்சு
உன் விரல் பிடித்து
வீரமாய் நடந்திடும் என்
சின்ன உலகில் ஆதவன்
நீதான் நிலையான உறவும் நீ
என் மனதை விட்டு அகலாத
மாகானும் நீதான் அப்பா



காஞ்சனா
நிதி

## வனவளம் காப்போம்

வனங்கள் இயற்கை அன்னையின் கொடை. பூத்துக் காய்க்கும் மரங்களும் வற்றாது ஓடும் ஆறுகளும் மலைவீழ் அருவிகள் துள்ளியோடும் விலங்குகளையும் சிறகடித்துப் பறக்கும் பறவைகளையும்கொண்டமைந்ததே வனம். வனவளம் நமக்கு பல பயன்களைத் தருகின்றது. பயன்தரும் வனவளத்தை நாம் அழித்துக் கொண்டுள்ளோம்.வனங்களில் உள்ள மரங்கள் நமக்கு மழை,உணவு,சுவாச வாயு போன்ற பலவற்றை வழங்குகின்றன. நீர்வளத்தைப் பாதுகாப்பதில் முககியத்துவம் பெறுகின்றன.

காடுகள் சூழலை அழகுபடுத்துகின்றன. பற வைகள் விலங்குகளுக்கு வாழ்விடமாக அமைகின்றன. சூழல் சமநிலையைப் பேண துணை புரிகின்றன. இவ்வாறாக வனங்களின் பயன்களை அடுக்கிக்கொண்டே போகலாம். சனத்தொகைப் பெருக்கத்தாலும், இடவசதி இன்மையாலும் காடுகள் அழிக்கப்படுகின்றன. புவி வெப்பமடைதல்,மழை இல்லாது விடல், சூழலில் பச்சை வீட்டு வாயுக்களின் தொகை அதிகரித்தல்,சூழல் சமநிலை பாதிக்கப்படல் என பல பாதக விளைவுகள் வனவன அழிப்பால் ஏற்படும். எனவே வனவளத்தைக் காப்பதோடு புதியமரங்கள் பலவற்றை நாட்டில் இயற்கை அன்னையைப் பேணிக்காப்போம். வள வளத் தைக் காக்கவேண்டியது மனிதர்களாகிய எமது கடமை.



லி.லக்ஷிகன்
யா/யாழ்.இந்துக் கல்லூரி
தரம் - 9ஏ, அங்கத்துவ இல 012



# வாகன அனுமதிப்பத்திரமும் தமிழ் எம்.பிக்களும்

○ ந.பரமேஸ்வரன்

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தாங்கள் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளப் போவதில்லையென 'ஐலண்ட்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் ஒருவரான நந்தன கொடித்துவக்கு , கோட்டை மாநகர முதல்வராக இருந்தவர். மற்றவர் மதுர விதானகே,தேர்தல் முடிந்து சம்பிரதாயபூர்வமாக நாடாளுமன்ற முதல் அமர்வுக்கு படகில் வந்து ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தவர்.



மதுர விதானகே

நந்தன கொடிதுவக்கு


கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரத்தின் பெறுமதி 33 மில்லியன் ரூபா என இவர்கள் தெரிவித்துள்ளனர். பல பில்லியன் பெறுமதியான மக்களின் வரிப்பணம், தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் மூலம் வீணடிக்கப்படுவதாக கடந்த சில வருடங்களாக நந்தன கொடித்துவக்கு தெரிவித்து வந்துள்ளார். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஹம்மர் ரக வாகனம் ஒன்று கொள்வனவு செய்ததற்கு 44.7 மில்லியன் ரூபா வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்ததாக நந்தன கொடிதுவக்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

2016 மே மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் 62.500 அமெரிக்க டொலர் (62.500 டொலரின் தற்போதைய பெறுமதி 1,16,31,868.75 ரூபா) பெறுமதியான வாகனத்தை எந்தவித வரிகளும் செலுத்தாமல் கொள்வனவு செய்து கொள்ள முடியுமென்வும் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட பல உறுப்பினர்கள், தீர்வையற்ற வாகனஅனுமதிப் பத்திரத்தை பெற்ற அன்றே அதனை விற்பனை செய்து விட்டதாகவும் கொடித்துவக்கு குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தமுறை வடமாகாணத்திலிருந்து மொத்தம் 13 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ரிஷாத் பதியுதீனையும், காதர் மஸ்தானையும் விட்டாலும் பதினொரு தமிழ் உறுப்பினர்கள் வடமாகாணத்திலிருந்து இம்முறை நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் விக்னேஸ்வரனையும் திலீபனையும் தவிர ஏனையோர் மூன்று தடவைகளுக்கு குறையாமல் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளனர். தமது பேச்சிலும் மூச்சிலும் தாங்கள் தமிழ் மக்களுக்காகவே அல்லும் பகலும் உழைப்பதாக கூறிக்கொள்ளும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நந்தன கொடித்துவக்கு, ஜே. வி.பி கட்சி போன்ற சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பின்பற்றி உண்மையிலேயே மக்களுக்கு சேவையாற்ற முன்வருவார்களா? ஜே. வி.பி நாடாளுமன்ற உறுப்பி னர்கள் தமது சம்பளப்பணத்தைக்கூட கட்சிக்கே வழங்குகின்றனர் என்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

**ஏற்கனவே பல தடவைகள் (விக்கி, திலீபன் தவிர) வாகன அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்து பணம் சம்பாதித்தவர்கள் இம்முறையாவது வாகன அனுமதிப் பத்திரம் மூலம் கிடைக்கும் பணத்தை யுத்தத்தால் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு வழங்க முன்வருவார்களா?**

தமிழ்த் தேசியம் பேசுபவர்களாக இருக் கட்டும், முள்ளிவாய்க்காலில் உறுதிமொழி எடுத்துக்கொண்டவர்களாக இருக்கட்டும் அல்லது அரசை ஆதரிப்பவர்களாக இருக்கட்டும் இதயசுத்தியுட்ன் மக்களுக்கு சேவையாற்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராவது முன்வருவார்களா? நந்தன கொடிதுவக்கின் செயற்பாட்டைப் பின்பற்றுவதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராவது தயாராக உள்ளனரா? செஞ்சோற்றுக்கடன் தீர்க்க வேண்டியவர்களும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். ஏற்கனவே பல தடவைகள் (விக்கி, திலீபன் தவிர) வாகன அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்து பணம் சம்பாதித்தவர்கள், இம்முறையாவது வாகன அனுமதிப்பத்திரம் மூலம் கிடைக்கும் பணத்தை யுத்தத்தால் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு வழங்க முன்வருவார்களா? அப்படிச் செய்வார்களாயின், புதிய அரசியல்நெல்நெறி ஒன்றை தமிழர்களிடத்தேயும் கட்டியெழுப்பலாம்.



# வாக்கு ஏன் போடேல்லை?

## உங்களுக்கு அவசரமாக ஒரு கடுதாசி

எல்லாருக்கும் வணக்கம்.

நான் நல்ல சுகம், நீங்களும் நல்ல சுகமா இருப்பியெண்டு நம்பிறன். போன கிழமை வோட்டுப் போடாத ஆக்களை வைச்சு, வாங்கு வாங்கெண்டு வாங்கினதை வாசிச்சன். எனக்கு அதைப்பாக்கச் சரியான கடுப்பா இருந்திது. அதோடை கடும் ரோசமும் வந்திட்டுது. எட வோட்டுப்போடேல்லை எண்டு திட்டிறியள் ஆனால் எங்கடை பக்கமும்ஞாயம் இருக்கது எண்டதையும் கொஞ்சம் விளங்கப் படுத்த வேணுமெண்டுதான் இந்தக் கடுதாசியை எழுதுறன்.

எலக்சனுக்கு முன்னம், தெற்கிலங்கையிலை ராஜபக்ச ஆக்கள் சிங்களச் சனத்துக்கு முன்னாலை போய்ப் பேசுறதைப் பேப்பரிலை படிக்கேக்கை இந்த முறை உவங்களை ஒரு கை பாக்கவேணும் எண்டுதான் நினைச்சனான். பிறகு எங்கடை பகுதியிலை வோட்டுக் கேட்டு வாற ஆக்களையும், அவை என்னத்தைச் சொல்லிக் கொண்டு வருகினம் எண்டதையும் பாத்த உடனை உவங்களை வோட்டுப்போட்டு பார்லிமெண்டுக்கு அனுப்பி, என்னத்தை காணப்போறம் எண்டு நினைச்சன் ... வேட்டுப் போட வேணும் எண்ட ஆசையும் இல்லாமல் போட்டுது.

கட்சிக்காரர் ஆளையாள் மாறி மாறி விமர்சிச்சு அறிக்கைகள் விட்டினம். கட்சிக்குள்ளையும் வெட்டுப்பாடும், குத்துப்பாடும் இந்தமுறை கூடிப் போச்சுது. மிகவும் கேவலமான சொற் பிரயோகங்களோடை அறிக்கையள் வந்தன. அதைத் திருப்பிச் சொல்ல வாய் கூசும்.ஒண்டாய்ச் சேந்திருக்கேக்கை தங்கடை கட்சிக்குள்ளை இருந்த சூத்தையை வெளியிலை சொல்லாமல்,பிரிஞ்சாப்பிறகுதான் கக்கத் துவங்கிச்சினம். உதை இப்ப எலக்சன் நேரத்திலை சொல்லாமல், முன்னமே சொல்லி இருக்கலாமே? பிரிஞ்சாப் பிறகுதான் முன்னம் தங்களோடை சேந்திருந்தவை கள்ளர் எண்டும், சனத்தை ஏமாத்தினவை எண்டும் சொல்ல ஞானம் வந்திருக்கோ? 2014 இல பாடின பழைய பல்லவியைத்தான் திரும்பவும் பாடிக்கொண்டு வந்தவையிட்டை "பார்லிமெண்டுக்குப் போய்ப் புதுசா என்னசெய்வியள்?" எண்டு கேட்டம். "முதலிலை வேட்டுப் போட்டு அனுப்பிப்போட்டுப் பாருங்கோவன் என்ன செய்யிறம் எண்டு" எண்டு சனத்தை மடக்கிறமாதிரியும், மழுப்பலாகவும் மறுமொழி சொல்லிச்சினம்.

சரி கட்சிக்காரர்தான் இப்பிடி எண்டால், ஆராவது பொது ஆக்கள் சொல்லுறதைக் கேட்டு அவை சொல்லுற ஆக்களுக்குப் போடுவம் எண்டிருந்தால், என்ரை பக்கத்து வீட்டுக் காத்திகேசு ஒரு பேப்பரைக் கொண்டுவந்து காட்டினான். அதிலை "வாக்குண்டாம். வெல்லவழியுண்டாம்" எண்ட தலைப்பிலை ஒரு கட்டுரை.பிரசங்கி ஒருத்தர் எழுதியிருந்தார். கட்டுரையின்ரை கடைசியிலை "உள்ளதுக்கை வல்லிசாய்" இருக்கிற கட்சிக்குப் போடுங்கோ எண்டு எழுதினதைப் பாத்த உடனை எனக்குக் கோபம் வந்திட்டுது. அதென்ன ? "உள்ளதுக்கை வல்லிசாய் " . தன்ரை கருத்தை நெத்தியடியாச் சொல்லாமல் , வழுவல்,நழுவல் கதை. அப்ப அவருக்கே நல்லது எது? கெட்டது எது? எண்டு தெரியேல்லை. அதுக்கை மற்றவைக்கு வழிகாட்ட வெளிக்கிட்டிட்டார். இதை எல்லாம் நினைக்க.. நினைக்க.... வேதனையாக் கிடந்துது. எல்லாரும் ஒரு குட்டையிலை ஊறின மட்டையளாத்தான் தெரிஞ்சினம். மனம் விட்டுப் போச்சுது. அண்டைக்குத் தீர்மானிச்சனான் எலெக்சன் நடக்கிற நாளண்டைக்கு, வேளைக்குத் தோய்ஞ்சு குளிச்சுப் போட்டுப் போர்த்துக் கொண்டுபடுக்க வேணும் எண்டு. அப்பிடியே செய்தும் போட்டன். ஆனால் அப்பிடி நான் செய்தது சரி எண்டு எலக்சனுக்குப் பிறகு கட்சியளின்ரை நடத்தையைப்பாக்க , இப்ப தெரியிது. இப்ப சொல்லுங்கோ நான்

செய்தது பிழையோ? என்னைப்போல வோட்டுப்போடாமல் விட்ட ஆக்கள் செய்தது பிழையோ?

தங்கள் பதிலை ஆவலோடு எதிர்பார்க்கும் தங்கள் பட்சமுள்ள,

அப்பாவி அன்னமுத்து

சிறுகதை



# ஆண் பப்பாசி

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

பப்பாசிக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு சிறுவயதிலிருந்தே ஆரம்பமாகி விட்டது. சொல்லப் போனால். அவனது பத்து வயதிலிருந்தே இந்தத் தொடர்பு ஆரம்பமாகி விட்டது. பப்பாசிக் கன்றுகளை அவனது தாயார் தேடிப்பிடித்து வாங்கி உண்டாக்கி விடுவார். சாப்பிடுவதற்கு பப்பாசிப் பழங்கள் வீட்டிலேயே இருக்கும். பத்துப் பரப்புக்கு நடுவிலே அமைந்த வீடு. பெரிய அரண்மனை என்று சொல்ல முடியாது. அம்மா அப்பாவோடு அவனது சகோதரர்கள் மொத்தம் எட்டு ஜீவன்கள் மூச்சுவிட்டு வாழ்வதற்கு அந்த வீடு போதுமானதாக இருந்தது.

வீட்டைச் சுற்றிய அந்தப் பரந்த காணிக்குள் ஏதோ ஒரு உணவுப் பயிராவது வளர்ந்திருக்கும். ஒரு பொதுக்கிணறு மாத்திரம் வீட்டுக்கும் பயிருக்கும் தண்ணீர் வழங்கிக்கொண்டிருக்கும் . அக்கம்பக்கத்தில் வசிக்கும் மக்களுக்கு அந்தக் கிணறு தான் தாகம் தணித்தது.
அதிகாலையில் "மெசினைப்" பூட்டிவிட்டால் மாலை வரை தொடர்ந்து இறைப்பு நடந்து கொண்டிருக்கும். இடையே சாப்பாட்டு நேரத்தில் மெசினுக்கு ஓய்வு வழங்கப்படும். அவனது வீட்டோடு ஒட்டியிருந்த காணிக்குள் வீடு போக, நிலம் இருந்தது. அதில் வாழை மரங்களோடு இடையில் பப்பாசிக் கன்றுகளை வளர விட்டு விடுவார்கள்.

பாடசாலை விட்ட கையோடு திரும்பி வந்தவுடன் அவனது பொழுது இந்த வளவோடு போய்விடும். காற்று வீசும் காலத்தில் பெடியளோடு சேர்ந்து வயல்வெளியில் பட்டம் விடுவான். பட்டத்தைத் தானே கட்டிவிடுவான். பட்டத்தை ஏற்றிக்கட்டிவிட்டு, ஆட்டுக்கும் புல் அறுப்பான். அப்போது தான் ஏற்றிய பட்டம் உயரப் பறப்பதைப் பார்த்து சந்தோஷம் அடைவான். வீடு அப்போது அமர்க்களமாக இருந்தது. ஆறு சகோதரங்களோடு, அதுவும் இரண்டு அக்காமார், இரண்டு அண்ணாமார் ஒரு தம்பியென இருந்ததால் குறும்புகளுக்குப் பஞ்சமேது?

தந்தையார் மலைநாட்டில் புகையிலை வியாபாரம் செய்து வந்தார். குடும்பம் கஷ்டப்படாமல் ஓடிக்கொண்டிருந்தது. தாயாரைத் தவிர மற்றவர்கள் தந்தையாரின் வரவை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பயம் பிடித்துக்கொள்ளும்.

"வளர்ந்த பப்பாசி சிலவற்றில் இப்போது பிஞ்சுகள் தெரிந்தன. ஆனால் சிலவற்றில் காய்களைக் காணவில்லை. நீண்ட மெல்லிய காம்பில் பூக்கள் மட்டும் நீட்டிக் கொண்டு தெரிந்தன. இவன் தாயாரை அழைத்தான். "உங்க பாருங்கோம்மா...சில பப்பாசியள் காய்ச்சுப்போட்டுது. சிலதுகள் காய்க்காமல் நீளமாக வளர்ந்து பூத்துக்கிடக்குது. "உதெல்லாம் ஆண் பப்பாசியள்...காய்க்காது... சும்மா இடத்தை மினைக்கெடுத்திப் போடும். வெட்டிப்போட வேணும்."

காரணம் தந்தை கண்டிப்பானவர். ஒழுக்கமானவர். பிள்ளைகள் மேல் பாசம் கொண்டவர். வரும்போது இனிப்புப் பண்டங்களோடு அவரது பையில் புத்தங்களும், இந்தியச் சஞ்சிகைகளும் நிறைத்திருக்கும். எல்லாம் நன்றாகதான் போய்க் கொண்டிருந்தது. அவ்வப்போது ஆர்ப்பாட்டங்கள் ஹர்த்தால்கள் எனத் தொடங்கி இனப்பிரச்சினைச் சண்டையென உக்கிரமடைய எல்லாம் தலைகீழாகிப் போனது.

இதுவரை காலமும் இருந்த வீட்டை அவனது எண்ணத்தில் சொந்தவீடாகக் கருதியிருந்தான். ஆனால் உரியவர்கள் வந்து வீடு தங்களுக்குத் தேவையென்று கேட்டபோதுதான் தாங்கள் இதுவரை இருந்த வீடு தங்களுக்கு சொந்தமானதல்ல என்பது தெரியவந்தது. பிறகு அந்த வீட்டை விட்டு இடம்பெயர்ந்தார்கள் . யுத்தமும் மெல்லத் தீவிரமடையத் தொடங்கியது. இன விடுதலைக்கு ஆட்களைத் திரட்டத் தொடங்கியிருந்தார்கள். . பல பகுதிகளில் மோதல்கள் நடந்தன. எப்போதும் தெருவில் சோககீதங்கள் ஒலித்தன. பிள்ளைகள் காணாமல் போனார்கள். ஒவ்வொரு வீட்டிலும் துயரம் தடையின்றிப் புகுந்தது. குடும்பத்தினர் உயிர் இழப்புக்களைச் சந்திக்கத் தொடங்கினார்கள். இவனும் தந்தையைப் பறிகொடுத்தான். இவனது குடும்பமும், தலைவனை இழந்த மற்றைய குடும்பங்கள் போல் தத்தளிக்கத் தொடங்கியது.

வாழ்க்கையில் பிடிப்பற்றுப்போன நிலை. பூ, பிஞ்சு,காய் எல்லாம் நிலத்தில் சிதறுண்டு கிடந்தன. தாயார் உடைந்து போனார். முதல் வீட்டிலிருந்து வெளியேறிய கையோடு வட்டக்கச்சியில் சொந்தமாக வாங்கிய காணியில் கட்டிக்கொண்டிருந்த வீடு பூரணமாக முடிக்கப்படவில்லை.
அடுத்து என்ன செய்வதென்ற நிலை. பப்பாசிக் கன்றுகளை அவன் மறந்து போய்விட்டான். தாயாரும்வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எல்லாமே குழப்பமான சூழ்நிலை. போர் அவர்களை நெருங்கியிருந்தது.

கடைசியில் சொந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். தாயார் கடைசியாக் வீட்டைப் பார்த்துக் கதறியழுதாள். ஊர் திரும்பி வரும்போது கொல்லப்பட்ட கணவனை நினைத்தாள். இந்தக் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறேன்? அவள் பயந்தாள். நான்கு பக்கங்களாலும் இராணுவம் சூழ்ந்து கொண்டு வந்தது. தரையில் குண்டு விழாத இடமேயில்லை. அகதிகளாக உருமாறி முகாம்களில் பல்லாயிரக்கணக்கான மக்களோடு இருந்த வேளை "விசாரணைக்குக் கொண்டு செல்கின்றோம். பின்னர் கொண்டு வந்து விடுவோம்" என்று சொல்லி மூத்த அண்ணாமார்களைப் பிடித்துக்கொண்டார்கள்.
இப்போது சொந்த இடத்தில் கட்டிய வீட்டுக்கு திரும்பி வந்தபோது, அது உருக்குலைந்து போயிருந்தது. தற்காலிகக் கொட்டில் போட்டு இரு அக்காமார், தம்பி,அம்மா என அவனும் அதில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் ஊரில் இப்போது நூற்றுப் பதினெட்டு குடும்பங்கள் இருப்பதாகவும், அதில் எண்பத்தெட்டுக் குடும்பங்கள் தலைவனை இழந்த குடும்பங்களாக இருப்பதையும் அறிந்தான். அதில் எங்கள் குடும்பமும் ஒன்றென அவன் நினைத்தான். பல குடும்பத் தலைவர்கள் அங்கவீனர்களாக இருப்பதைக் கண்டான்.

அவனது தாயாரைப் போல பல பெண்கள் எல்லா வேலைகளுக்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். சந்தைக்குத் தாயாரோடு போனபோது பப்பாசிப்பழத்தைக் கண்டான். மனதில் பப்பாசி ஆசை மீண்டும் எழுந்தது. பப்பாசிப் பழத்தின் அந்தப் பால் மணத்தை உணர்ந்தான். வாயில் பப்பாசியின் சுவை தெரிந்தது. அதன் ருசி எப்போதும் அவனுக்குப் பிடித்தமானது. உயர்ந்த மரங்களில் அவனாக மரமேறி பப்பாசி பறிப்பான். வெறும் மார்புடன் ஏறும் போது பப்பாசிப் பால் பட்டால் சுணைத்து எரியும். அதற்கு எண்ணெய் பூச வேண்டியிருக்கும்.

அவனுக்கு வயிற்றில் பூச்சி இருப்பதாக நாட்டு வைத்தியர் கூறியதால் தந்தையார் அவனுக்கு எப்போதும் பப்பாசிப் பழத்தை வாங்கிக்கொண்டு வருவார். மகனின் பார்வையிலிருந்த ஏக்கமும் தவிப்பும் தாய்க்குப் புரிந்தது.

"பப்பாசிப்பழம் வேணுமோ?" அவன் தலையாட்டினான். பெரிய பழமாக வாங்கிக்கொண்டார்கள். சனங்கள் வாழ வேண்டுமென்ற உந்துதலில் நடமாடித் திரிந்தார்கள். முகத்தில் உண்மையான சந்தோஷத்தைக் காணமுடியவில்லை. தாயாரிடம் கதைத்தவர்கள் அவனது அண்ணன்மார்களைப் பற்றி வினாத்தொடுத்தார்கள். இவனும் தாயாரும் காணாமல் போனோர் நடத்தும் பல கூட்டங்களுக்குப் போனார்கள். அண்ணன்மார்களின் புகைப்படத்தை இவன் தூக்கிப் பிடித்தபடி பலபேருக்கு இவன் காட்சிப் பொருளாக இருந்திருக்கின்றான். கணவனை, பிள்ளையை சகோதரரை எனப் பலரும் தேடிக் கொண்டிருந்தனர். அடிக்கடி அரசியல்வாதிகள் உயர் அதிகாரிகள்,வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இவர்களுக்கு ஆறுதலும் உதவிகளும் கொடுக்க வருவார்கள். வாளி,குடம்,பாய்கள்,தறப்பாள் மெசின்,புத்தகங்கள்,கதிரைகள் எனப் பல வகையான பொருட்கள் அந்த உதவிகளுக்குள் அடக்கம். ஆனால் அவர்கள் அந்த உதவிகளைத் தந்து விட்டு, எதனைக் கேட்கின்றார்கள்?
அன்று மதியம் பப்பாசிப்பழம் வெட்டிப் பரிமாறப்பட்டது. கடும் ருசியாக அவனுக்கு இருந்தது. இவன் பப்பாசி விதைகளைத் தனியாக எடுத்து வைத்துக்கொண்டான். சில நாள்கள் கழிய உடைந்த பிளாஸ்ரிக் வாளியில் மண் நிரப்பி விதைகளைப் போட்டு தண்ணீர் விட்டு முளைக்க வைத்தான். கன்றுகள் வந்தால் வளவுக்குள் வைக்கலாமென்ற ஆசை. சிலநாள்களில் பப்பாசிக் கன்றுகள் முளை விட்டு, துளிர்த்தெழத் தொடங்கின.

நடவேண்டிய நிலப்பகுதியைத் தெரிவு செய்து பத்துப் பப்பாசிக் கன்றுகளை நட்டான். இடையில் ஒருநாள் குளிர்காற்று வீசி நல்ல மழை பெய்தது. நிலம் குளிர்ந்து தொடர்ந்திருந்த வெக்கையும் தணிந்தது. அந்த மழையோடு பப்பாசிக் கன்றுகளும் விரைவாக வளர்ந்துவிட்டன. இவனுக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. எல்லாக் கன்றுகளும் காய்த்தால் எப்படி இருக்கும்?அவன் கற்பனையில் மூழ்கினான். வளர்ந்த பப்பாசி சிலவற்றில் இப்போது பிஞ்சுகள் தெரிந்தன. ஆனால் சிலவற்றில் காய்களைக் காணவில்லை. நீண்ட மெல்லிய காம்பில் பூக்கள் மட்டும் நீட்டிக் கொண்டு தெரிந்தன. இவன் தாயாரை அழைத்தான்.

"உங்க பாருங்கோம்மா...சில பப்பாசியள் காய்ச்சுப்போட்டுது. சிலதுகள் காய்க்காமல் நீளமாக வளர்ந்து பூத்துக்கிடக்குது"

"உதெல்லாம் ஆண் பப்பாசியள்... காய்க்காது... சும்மா இடத்தை மினைக்கெடுத்திப் போடும். வெட்டிப்போட வேணும்.

"ஏனம்மா வெட்டிப் போட வேணும்....? ஆண் பப்பாசியள் தேவையில்லையா?"

"இதுகள் இருந்து ஒரு பிரயோசனமுமில்லை"

"அம்மா வெட்டிப் போடாதையுங்கோ.... இந்த ஊரில் கன குடும்பங்களுக்கு அப்பாமார் இல்லை. சாக்காட்டிப் போட்டாங்கள். நாங்கள் அப்பா இல்லாமல் எவ்வளவு கஷடப்படுகிறம். பப்பாசியளுக்கும் அப்பா வேணுமம்மா...."

தாயார் மகனை இறுக அணைத்தாள். கண்ணீர்க் கோடுகள் கன்னங்களில் இறங்கத் தொடங்கின.

# மஞ்சள் படுத்தும் பாடு



சிக்மலிங்கம் றெஜினோல்ட்

மஞ்சளுக்காகக் கலங்கிக் கொண்டிருந்த காலம் போய், மஞ்சளைத் தேடுகின்ற காலம் வந்திருக்கிறது. கலங்க வைத்த மஞ்சள் வந்து கண்ணுக்கு முன்னே நிற்கிறது. நாங்கள் தேடிக் கொண்டிருக்கின்ற மஞ்சளைக் காணவே முடியவில்லை. விதி என்ன மாதிரியெல்லாம் விளையாடுகிறதென்று பார்த்தீர்களா?

அந்த மஞ்சளுக்காகக் கலங்கியது 1988, 89 களில். அது இந்தியன் ஆமிக்காலம். இந்திய இராணுவத்தின் பரா ரெஜிமென்டோடு எம்முடைய தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் சிலரும் சனங்களைக் கதிகலங்க வைத்துக் கொண்டிருந்தார்களல்லவா? அதில் ஒருத்தனே இந்த மஞ்சள்.

மஞ்சளுக்கு இம்மை மறுமை எதுவும் கிடையாது. ஏன் தான் இப்படி இந்தியன் ஆமியோடு திரிகிறேன் என்றோ, இந்தியன் ஆமி ஊரை விட்டுப்போனால் தன்னுடைய கதி என்னவாகும் என்றோ ஒரு மண்ணும் விளங்காது. சனங்களைக் கலங்க வைப்பது எவ்வளவு பெரிய பிழை? அதை விட யாரென்றே சரியாகத் தெரியாத அப்பாவிச் சனங்களைக் கண்டபாட்டுக்குச் சுட்டுத் தள்ளுவதும், தலைகளை வெட்டி எறிவதும் எவ்வளவு பெரிய குற்றம்? இதெல்லாம் எவ்வளவு பெரிய பழி என்றும் கூடத் தெரியாது.

அப்படித் தெரிந்தாலும், இதெல்லாம் மஞ்சளுக்குத் தேவையாக இருந்தது. அவனுக்குத் த்ரில் வேணும். அந்தத் த்ரிலில் அவனுக்கொரு போதை. தன்னைக் கண்டால் அல்லது மஞ்சள் என்ற தன்னுடைய அந்தப் பெயரைக் கேட்டால் சனங்கள் நடுங்க வேணும். தலைதெறிக்க ஓட வேணும்... பயத்தில் பசியில்லாமல், தூக்கமில்லாமல் நடுங்க வேணும்....

இதெல்லாம் அவனுக்கு தேவையாக இருந்தது. இதற்காக இந்தியன் ஆமியோட சேர்ந்து கொண்டு, தலையில் கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டு திரிந்தான். ஆமியோடு சேர்ந்து ஒரே அட்டகாசம். அந்த நாட்களில் பரா ரெஜிமென்ட் ஜீப்பின் இரைச்சல் சத்தம் கேட்டால் போதும், நாங்கள் பனங்கூடலுக்குள்ளால் விழுந்து, கம்பி வேலியைக் கடந்து, வயல்வெளிக்குள்ளால் ஓடி, பற்றைக் காடுகளுக்குப் பறந்து போய் விடுவோம். ஓடவே முடியாமல் திடுமுட்டாக மஞ்சளின் குறூப் வந்து விட்டுது என்றால், வீட்டுக் கூரைக்குள்ளேயோ, அடுப்படிப் புகைக்கூட்டுக்குள்ளேயோ மறைந்திருப்போம். சிலவேளை மாமரத்திலே பலாவிலோ ஏறி கால்கள் நடுங்க மறைந்திருப்பதும் உண்டு. இப்படி நாங்கள் தப்பியோடக் கூடாது என்பதற்காகத் தான் இந்தியன் ஆமி மஞ்சளையும் அவனுடைய கூட்டாளிகளையும் தங்களோடு கூடவே கூட்டிக் கொண்டு திரிந்தது.

மஞ்சளுக்கு ஊரைப்பற்றி நன்றாகத் தெரியும். ஊரில் உள்ள ஒழுங்கை, முடக்கு, சந்து பொந்து, வயல், காடு, பறுகுப் பற்றை, வெட்டை, குளத்தங்கரை எல்லாமே தெரியும். ஆட்களையும் தெரியும். இப்படி விவரம் தெரிந்தவனோடு வந்தால் தப்பியோடுவதைத் தடுத்து ஓடுகிற ஆட்களைப் பிடித்து விடலாம். அல்லது ஓடுகிற வழியில் வைத்துச் சுட்டுக் கொல்லலாம். இதுவே இந்தியன் ஆமியின் நோக்கம். ஆகவே மஞ்சளை வைத்துக் காரியத்தைச்சாதித்துக் கொள்ளலாம் என்பது அவர்களுடைய இலக்கு.

மஞ்சளுடைய எண்ணம் வேறு. இந்தப் பெரிய இந்தியாவே தன்னைத்தான் நம்பியிருக்கிறது. இந்தியாவின் பென்னாம் பெரிய இராணுவமே தன்னை ஏத்திக்கொண்டே திரியவேண்டியிருக்கெண்டால்... தன்னை விடப் பெரிய ஆட்கள் வேறு யார் எண்ட மாதிரி.

இப்படி யோசித்துக் கொண்டிருந்த மஞ்சள் வாரத்துக்கு ஒரு தலையையாவது உருட்டுவான். சிலவேளை மாதத்துக்கு ஐந்து ஆறுக்கு மேலும் போகும். எங்கள் ஊரில் மட்டுமென்றில்லை, அக்கம் பக்கத்து ஊர்களில். பிறகு அப்பால் நகரத்தில் என்று மஞ்சளின் ராஜ்ஜியம் இப்படியே மெல்ல மெல்ல விரியத் தொடங்கியது. இதனால் மஞ்சளைக் காண்பதற்கே சனங்கள் அஞ்சினார்கள். இரவில் தூக்கமே இல்லை. பகலில் வெளியே நடமாட முடியாது. வீட்டிலிருந்தாலும் தேடுதல், தேடுதல் விசாரணை; விசாரணை. வெளியே தப்பிச் சென்றாலும் கேள்வி, விசாரணை. தேடப்படும் ஆள் இல்லையென்றாலும் அடி. தெரியாதென்றாலும் அடி. விசாரித்த ஆளைத் தெரியும் என்று சொன்னால், எங்கே ஆள்? என்று கேட்டு அதற்கும் அடி. இப்படியே எத்தனை நாளைக்குத்தான் ஆய்க்கினைப் பட்டுக் கொண்டிருப்பது?

"ஐயோ இந்தப் பக்கம் இல்லாமல் மஞ்சள் எங்காவது போய் ஒழியட்டும். அல்லது மஞ்சளுக்கு ஏதாவது கெடுதி வந்து தொலையட்டும்" என்று சனங்கள் நேராத நேர்த்தியெல்லாம் வைத்தார்கள்.

இதை விட்டு மஞ்சள் தப்பியிருந்தால், மரணக் கயிறு தங்களைச் சுற்றி இறுக்கும் என்று சனங்களுக்குப் பட்டது.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" அல்லவா! சனங்களுடைய கண்ணீர் மஞ்சளைச் சும்மா விடவில்லை. ஒரு தடவை கரணம் தப்பியது மரணம் என்ற மாதிரி புலிகளின் இலக்கிலிருந்து மஞ்சள் மயிரிழையில் தப்பினான்.

ஆனாலும் அடங்கவில்லை அவன்.

இது நெடுங்காலம் நீடிக்கவில்லை. 1990 இல் இந்திய மத்திய அரசில் ஆட்சி மாற்றம்- அங்கே வி.பி. சிங் பதவிக்கு வந்தார். இலங்கையில் புலிகளுக்கும் பிரேமதாசவுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது அப்போது. புலிகளும் பிரேமதாசவும் இணைந்து இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்குத் திட்டமிட்டனர். அதன்படியே இந்திய அமைதிப்படை வெளியேறிச் சென்றது. மஞ்சளும் அவர்களோடு கப்பலேறிப்போனான்.

"இந்தியாவுக்கு இப்பவும் மஞ்சள் தேவையாக இருக்குப் பார்த்தியா?" என்று தனக்குப் பக்கத்தில் இருந்தவனைக் கேட்டானாம் மஞ்சள் என்று ஊருக்குள் சொல்லிச் சிரித்தார்கள். இந்தியன் ஆமியோடு கப்பலேறிப்போன மஞ்சள் ராஜஸ்தானில் இறக்கி விடப்பட்டான். கூடவே குடும்பத்தையும் கூட்டிக் கொண்டு சென்றதால் அங்கேயே குடித்தனமாகினான். ஆனால், இங்கே நாட்டிலிருந்தபோது ஆடியதைப்போல அங்கே ராஜஸ்தானில் மஞ்சளால் ஆட முடியவில்லை. அதற்கு அவசியமும் இருக்கவில்லை. இந்தியாவுக்கு அந்தத் தேவையும் அங்கில்லை. காற்றிறங்கிய பலூனைப் போல சோர்ந்து சுருண்டுபோய், இந்தியா கொடுத்த ரேஷன் அரசியோடு அடங்கிப் போனான் மஞ்சள்.

இப்படியே ராஜஸ்தானில் வாடி வதங்கிக் கொண்டிருந்த மஞ்சள், 2009 இல் போர் முடிந்து புலிகள் அரங்கில் இல்லாது போன கையோடு ஊருக்கு வந்து சேர்ந்தான். ஊருக்கு வந்த மஞ்சளை எவரும் வரவேற்கவில்லை. எல்லோரும் பாராமுகமாகவே இருந்தனர். வந்தவன் தனக்குப் பொருத்தமான அதிகாரத் தரப்புகளைத் தேடித்திரிந்தான். அப்படியொரு அதிகாரம் இல்லாமல் மஞ்சளால் இருக்க முடியாது என்ற நிலை.

ஆனாலும் மஞ்சளுடைய இந்தப் பருப்பெல்லாம் வேகவில்லை. ஊருக்குள் ஒதுக்கப்பட்டவனாக விலக்கப்பட்டிருந்தான் மஞ்சள். அழுவாரைப்போலவே திரிய வேண்டியிருந்ததால், பெரும்பாலும் வீட்டுக்கு வெளியே அவன் வருவதே இல்லை.

ஆனால், சனங்கள் எப்போதும் மன்னிக்கக் கூடியவர்கள். அவர்களிடம் எப்போதும் நல்ல குணமே உண்டு. மஞ்சளை விடவும் அவனுடைய பிள்ளைகளே சனங்களுடைய கண்ணுக்குத் தெரிந்தனர். அந்தப் பிள்ளைகளுடைய எதிர்காலத்தைப் பற்றியே சனங்களின் இதயம் சிந்தித்தது. மஞ்சளை அவர்கள் எப்படியோ மன்னித்து விட்டார்கள். பிள்ளைகள் மீது அவர்கள் வேற்றுமை காட்டவில்லை. மஞ்சள் இப்போது ஊருக்குள்ளிருக்கிறான். அவனை முதுமை வேறு சூழ்ந்து விட்டது. அவனுடைய உடல், நடை, மனம் எல்லாமே தளர்ந்து விட்டது. இப்படியே மஞ்சள் தேடுவாரில்லாமல் ஊருக்குள் கிடக்கிறான்.

ஆனால், நாம் தேடுகின்ற மஞ்சளைத்தான் எங்கேயும் காண முடியவில்லை. அப்படித்தான் எங்காவது கண்டாலும் ஒரு கிலோ மஞ்சளின் விலை இப்போது மூவாயிரத்துக்கும் மேல் என்று சொல்கிறார்கள். 50 கிராம் மஞ்சள் தூள் 100 ரூபாய் வரை விற்கிறது. அது மஞ்சள் தூள் தானா என்பதை ஆய்வு செய்து தான் உறுதிப்படுத்த வேண்டும்.

யுத்த காலத்தில் கூட மஞ்சளுக்கு இந்த விலையில்லை. இப்போது மட்டும் ஏனிப்படி? கேட்டால், மஞ்சள் இறக்குமதியை அரசாங்கம் தடுத்திருக்கிறது என்கிறார்கள். உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கே இந்த நடவடிக்கை என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதாம். இப்போது யுத்தம் நடந்து கொண்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? வெளியே இருந்து ஆயுதத்தை இறக்குமதி செய்யக் கூடாது. உள்ளூரில் அதை உற்பத்தி செய்யலாம் என்று தீர்மானித்திருப்பார்களா? என்றொரு மொக்கைக் கேள்வி உங்களுக்குள்ளும் எழலாம். என்ன செய்வது அரசியல் அதிகாரம் தீர்மானிப்பதை யும் சொல்வதையும் கேட்பதுதான் நற்குடிமக்களுக்கு இலக்கணம் என்பதைப்போல மௌனமாக இருக்க வேண்டியதுதான். மஞ்சள் படுத்தும் பாடு கொஞ்சமல்ல. அது இப்போதைக்குத் தீராது போலிருக்கு.



**அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை அல்லவா! சனங்களுடைய கண்ணீர் மஞ்சளைச் சும்மா விடவில்லை. ஒரு தடவை கரணம் தப்பியது மரணம் என்ற மாதிரி புலிகளின் இலக்கிலிருந்து மஞ்சள் மயிரிழையில் தப்பினான்.**

**நாம் தேடுகின்ற மஞ்சளைத்தான் எங்கேயும் காண முடியவில்லை. அப்படித்தான் எங்காவது கண்டாலும் ஒரு கிலோ மஞ்சளின் விலை இப்போது மூவாயிரத்துக்கு மேல் என்று சொல்கிறார்கள். 50 கிராம் மஞ்சள் தூள் விலை 100 ரூபாய் வரை விற்கிறது. அது மஞ்சள் தூள் தானா என்பதை ஆய்வு செய்துதான் உறுதிப்படுத்த வேண்டும். யுத்த காலத்தில் கூட மஞ்சளுக்கு இந்த விலையில்லை. இப்போது மட்டும் ஏனிப்படி?**

# 10 இற்கான கவிதைகள்



குதித்தாட மண் வேண்டும்
வானம் பார்த்த கதைகள் வேண்டும்
கொஞ்சி மகிழ மலர்கள் வேண்டும்
குயிலின் இசை கேட்க வேண்டும்
நெல்மணியும் விளைய வேண்டும்
நேசக்கரங்கள் இணைய வேண்டும்
குழந்தை உலகம் வெளியாய் வேண்டும்
இயற்கை இனிய நட்பாய் வேண்டும்

S. K.பரணிகன்
யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி

அழகுதனை மிஞ்சிநிற்கும் மழலையவள்
நேசம் பெற - மணற்துகள்கள்
பெற்றனவா வரம் தெரியவில்லை
பத்து விரலும் முத்தமிட
மணலும் சிரிக்குதம்மா!
அவள் புன்னகையை ரசித்தே!
இமை நகர்ந்தால் மறைந்திடுமென
இமையாது நின்றான் - சூரியனும்
மறுஜென்மம் மணலாக வேண்டி....

த.விதுர்ஷன்
யாழ்/இந்துக்கல்லூரி

தாய்மடி காணா எம்மை
தயவோடு அரவணைத்தாய் தாயகமே!
தூர்ந்து போன மணல்மேட்டில்
துளிர்விட்ட சிறுபிஞ்சும் - உன்
துர்நிலை கண்டு தானோ
தீரமனம் கொண்டதுவோ
சிந்தனையில் ஆழ்ந்ததுவோ
திகழ்பரவ மீண்டெழுவாய்
தரணியிலே!

துஷானி பரமானந்தம்

உன் உள்ளத்தை ஊடுருவும்
கஸ்டத்திலும் - உன்
உறவின் பசி வாட்டத்திலும்
வெள்ளை மணலை
அள்ளி எறிகையிலே
அதன் அழகைக் கண்டு
உன் மனம் கொள்ளும்
ஆனந்தத்திற்கு ஏதேனும் ஈடாகுமா?

ராஜன் சுதர்சி

தம்பி
செய்மதி..
செயற்கைக்கோள்...
செவ்வாய்க்கிரகம்...
அண்டவெளி...
ஆராய்ச்சி...
அத்தனையையும்
தாண்டி உன் அறிவுப்பசிக்கு...
தீனி போடுமா?
அகிலம்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

மொழிகள் தெரியா வயதினில்
சுயநலமில்லா வாழ்வினில்
கனவுகள் இல்லா நாட்களில்
மண் விளையாடிக் – களித்திருப்போம்
இக் கணம் போல் எம் வாழ்வில்
எக்கணம் வருமோ – எம் வாழ்வில்?
பொழுதுடன் பொழுதாக
கரைந்து-போகிறது – நாட்கள்.....

வாகினி தயாபரன்,
யாழ்ப்பாணம்.

## மௌன மொழி 11



குரு மணல் எறிய
குருவிகள் ஆனதே நாம்
தரைபடக் கிடந்து
உருவங்கள் போனதே
ஏக்கம் நிறைய
தூக்கம் இன்றி
ஏழை நாம் பசியோடு
வாடுகிறோம்
இன்ப பொழுதையே
தேடுகிறோம்

ETPசாரூபன் S
சங்கரத்தை

**பரிசு பெறும் கவிதை**

பொழுதினைப் போக்க
பொல்லாத வழி தேடும்
பொல்லாப் பிள்ளைகளின்
பொன்முக மலர்ச்சியைக் காண்கிலும்
புழுதியிலே புரண்டெழுந்து
பொழுதையே போதாதெனும்
பொன் வ(ா)ண்டுகளின் புன்சிரிப்பு
புராதன பொக்கிசங்களில் ஒன்றல்லோ!!!

அபினு. வரணி.

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்த னை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 04.09.2020**

கவிதைக்கு பரிசு 1000/=

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com
0773165555

அள்ளித் தெளித்த மணலில்
துள்ளித் தெறித்த அழகு
கவலை மறந்து
கற்பனை உலகில்
மெய் மறந்து
சுந்தரப் புன்னகை பூத்திடும் சுந்தரி

தி.பாரதி.நாவற்குழி.

வறுமையின் கோரப்பிடி – வாழ்வில்
வாட்டி வதைக்க
தனக்குப் பின் பிறந்தவனுடன்
தாயாக உருவெடுத்து
பசி வயிற்றைக் கிள்ள – வாழ்வில்
பாதை தவறாமல்
மணல் மீது அமர்ந்து சோகம் தீர்க்கும்
மானிடக் கோலத்தை படைத்ததை
நினைக்க மனம் வெதும்புதே!

அ.வே.கோகிலன், நாவற்காடு

தாய் மண்ணில் வாழத் தடையில்லை
நாளை எண்ணி எமக்கு பயமில்லை
போற்றுவது நாம் மண்ணையே
போகட்டும் எமது துன்பமே
மகிழ்ந்து விளையாட மனமுண்டு
மனதில் எமக்கு இடமுண்டு
சோதரனுக்கு ஒரு துணையானேன்
சோர்வின்றி அன்புத் தாயானேன்.

சிவரம்யா

மண்ணுக்காய் மரணித்த
மறவர்களை
மனதில் கொண்டு
மணல் மண்ணிலிருந்து
மகிழ்வுடன் மண்தூவும்
மழலைகள்

சி.பாவனா.யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை

11 கிராமத்து மனிதர்கள்...

# வன்னப்பெட்டி வைரவிப்பிள்ளை

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

○ இராகன்

ஆல், ஒதி, வேம்பு, பூவரசு போன்ற மரங்களுக்குக் கீழே காற்றோட்டமாக இருந்த சாமிகளெல்லாம் கருவறைக்குள் நுழைந்துவிட்டன. உச்சிவெயில் தகிக்கும் நேரத்தில்கூட குளிர்நிழலை இறைத்துக்கொண்டிருந்த அந்த மரங்கள் அடியோடு சாய்க்கப்பட்டுவிட்டன. விருட்சங்களைச் சாய்த்த வீறாப்புடன் நெஞ்சை நிமிர்த்தி நின்றன பிரமாண்டமான கோபுரங்கள். சாமியை உலாவுக்குச் சுமந்துசெல்ல தோள்கள் இன்றி, இழுத்துச் செல்ல இரும்பினால் செய்யப்பட்ட சிறு 'சகடை" வாகனம். மணி,நாதஸ்வரம், தவில், தாளம், சேமக்கலம் யாவுமாக ஒருங்கே உரத்துக் கத்துகின்ற மின்னியக்கப் பூசை வாத்தியப் பொறி. இவற்றைப் பார்த்துக்கொண்டு கையைத் தலையில் கூப்பும் வேளைகளிலெல்லாம் கண்ணில் நிறைந்து போவது கொண்டலடி அண்ணமார் கோயிலின் வேள்வியும் 'வன்னப்பெட்டி வைரியின்" சன்னதக் கலையாட்டமும்தான்.

வைரவிப்பிள்ளை கலியாணமாகாதவள். அவளை 'இருளி வைரவி" என்று அழைப்பதிலிருந்து அதற்கான காரணத்தை அறிந்து கொள்ளலாம். வைரவிப்பிள்ளை என்ற நீண்ட பெயர் சுருங்கி 'வைரி" என்றானது. வைரவி, பெட்டி பாய்கள் பின்னப் பயன்படும் பனையோலைகளுக்கு வர்ணம் காய்ச்சுவதில் பேர்பெற்றவள். பாய், தட்டுப்பெட்டி, மூடல்பெட்டி, கொட்டைப்பெட்டி, உமல் முதலான பல்வேறு 'அயிற்றங்களை" இழைப்பதற்கு அவற்றுக்கேற்ற அளவுகளில் வார்ந்தெடுத்த ஓலைகளுக்கு சாயம் காய்ச்சிக் கொடுப்பதிலும், சாயம் காய்ச்சிய ஓலைகளை வைத்து இழைத்து கண்ணைக் கவரும் 'டிசைன்கள்" பின்னுவதிலும் வைரிக்கு நிகர் வைரிதான் என்பதால் அவளை எல்லோரும் 'வன்னப்பெட்டி வைரி" என்று அழைத்தனர். இழைப்பதற்கேற்ப வார்ந்தெடுத்த பனையோலைகளை கட்டுக்கட்டாக கட்டிவைத்து, வாயகன்ற அலுமினியப் பானையிலே கொதிக்கக் கொதிக்க சுடுநீர் வைத்து, சுடுநீரில் பிடிக்கவுள்ள வர்ணத்துக்கேற்ற சாயத்தூளைக் கரைத்து, கட்டிவைத்த மூன்று நான்கு அடி நீளமான ஓலைக் கட்டுகளை பானையினுள் பவ்வியமாக முழுவதாகத் திணித்து, பொருத்தமான கால அவகாசத்தில் ஓலை முழுவதும் சாயம் சேரவிட்டு, ஓலைக்கட்டில் கட்டப்பட்ட வார்ந்த ஓலைகளை இருபகுதிகளாக வகிடுபிரித்து நடுவே ஒரு தடியைச் செருகி பானையின் வாய்வழியாகத் தூக்கி வெளியே எடுத்து, சாயம் சரியாக பிடித்துள்ளதா என்பதைப் பரிசோதித்து, கட்டப்பட்ட கயிற்றுக் கொடியில் வகிடுபிரித்த கட்டின் இரு பகுதியையும் கவடாக விரித்துக் காயப்போட்டுவிட்டால் ஓலைக்குச் சாயம் காய்ச்சும் வைரியின் 'புறோசஸ்" முடிந்துவிடும். இப்படி ஒவ்வொரு வர்ணத்துக்கும் ஒவ்வொரு நாளை எடுத்துக்கொள்வாள். சாயக் காசு, சாயம் பிடித்த காசு என்று சரியாகக் கணக்குப் பார்த்து வசூலித்துவிடுவாள்.

வன்னப்பெட்டி வைரியின் வீட்டுக்குத் தூர இடங்களிலிருந்தெல்லாம் வியாபாரிகள், தரகர்கள் வந்து போவர். ஊரிலும் அயலூர்களிலும் பாய், பெட்டி, கடகம், நீத்துப்பெட்டி, பனம் ஈர்க்குக் கட்டுகள் முதலானவற்றைச் சேகரித்து வைப்பாள். வியாபாரிகள் வந்து மொத்தமாக வாங்கிச் செல்வர். வைரியை மீறி எவரும் தனியாக அந்த வியாபாரிகளுடன் தொடர்புகொண்டு தங்கள் பொருட்களை விற்க முடியாது. பேரம் பேசும் தருணங்களிலெல்லாம் வாயில் புகைந்து கொண்டிருக்கும் மண்டான் சுருட்டை எடுத்தெடுத்து புகையிலைச் சாயம் ஊறிய எச்சிலை துப்பிக்கொள்வாள். மண்டான் கிறக்கத்தில் வாயில் 'கண்டது கடியதெல்லாம்" வந்துபோகும். அவள் ஒரு விநியோக முகவர். வியாபாரிகள் கொண்டுவரும் சாயத்தூள் வகைகளையும், கொழும்பு வெற்றிலையையும் வாங்கி பாய் பெட்டி இழைப்பவர்களுக்கு விற்றுக் காசாக்கிவிடுவாள். 'சீசன்களுக்கு" ஏற்ப வியாபாரிகளும் தரகர்களும் கொண்டுவந்து கொடுக்கும் ரம்புட்டான், மங்குஸ்தான் என்றும் விற்பாள். வாங்கிச் சாப்பிடுபவர்களே, 'இருளியான" அவளுக்கும், அவர்களுக்குமான "தொடர்பு"



பற்றி 'அரசல் புரசலாக" அவலாய் மெல்வர்!

வன்னப்பெட்டி வைரி நல்ல அழகி. ஆறடியை எட்டும் உயரம். ஒரேஞ்சுப் பழக் கலர். சாதாரணமாக முன்னுடுப்புக்காரி. கலையாடும் வேளைகளில் மட்டும் பின்னே கொய்யகம் வைத்துப் பின்னுடுப்பு. ஒரேஞ்சில் குங்குமத்தைக் கரைத்த நிறத்தில் வாய் நிறைந்த வெற்றிலை. நெற்றியைப் போலவே கைகளிலும் நீரில் குழைத்துத் திரிபுண்டரகமாக பூசிய பால் வெள்ளை விபூதிக்குறிகள். பிறை நிலவாக ஒளிரும் நெற்றியில் ஒரு ரூபாய் நாணயக் குற்றியளவில் இலங்கும் பெரிய சந்தனப் பொட்டினுள்ளே ஐம்பது சத நாணயக் குற்றியளவில் குங்குமப் பொட்டு. முடிமயிர் வைத்து வரிந்து கட்டி ஆக்கப்பட்ட 'பண் கொண்டையில்" செவ்வரத்தை, பொன்நொச்சி முதலான பூக்களும் வேப்பிலைத் துளிர்களும் செருகப்பட்டிருக்கும். வைரியின் அந்தக் கோலத்தினால்தான் அவளை 'பூசாரி வைரி" என்றும் அழைத்து வந்தனர். கொண்டலடி அண்ணமார் கோயில் வேள்வி என்றால் பல ஊரவர்களும் ஒன்றாய்க் கூடிவருவார்கள். அங்கு பரவப்படும் 'மடை" கலைக்கும் வரை வந்தவர்கள் காத்துக்கிடப்பர். பரவப்பட்ட மடையில் சீப்புச் சீப்பாக வாழைப்பழம், கட்டி கட்டியாகப் பலாப்பழம், பொங்கல், வடை, மோதகம் என்பவை கடலாகப் பரந்து கிடக்கும். "இடும்பன் பூசைக்காக" மீன், இறைச்சி, இறால், கணவாய், நண்டு என்று மாமிசங்கள் பலதும் பத்தும் சேர்த்துக் குழைத்த சோற்றுக் குவியல் மலையாய்க் கிடக்கும். அந்தக் குவியலிலிருந்து ஒரு கவளம் கிடைத்தாலே சொர்க்கம் என்று காத்துக்கிடப்பவர்கள்தான் எல்லோரும்.

நேர்த்திக்காக கொண்டுவரப்படும் ஆடுகள், கோழிகளை பேரம் பேசி மலிவாக வாங்கக் காத்துக் கிடக்கும் வெளியூர்க்காரர். கோயிலிலிருந்து ஊர் எல்லையிலுள்ள சுடுகாடு வரை 'வழிவெட்ட" குவிக்கப்பட்டிருக்கும் இளநீர்க் குவியல் ஒரு பக்கம். இவை எல்லாம் வந்திருப்பவர்களின் உள்ளத்தை ஈர்த்தாலும் முழக்கப்படும் பறை வாத்திய ஒலியின் நடுவில், வழிவெட்டப் பயன்படுத்தும் நீண்ட பிடி போட்ட வெட்டுக்கத்தியை தோளில் தாங்கிய படி ஆடும் கோயில் பூசாரியோடு சேர்ந்து வைரி ஆடும் கலையாட்டம் பார்த்திருப்பவர்களின் மனங்களில் சன்னதத்தை உண்டாக்கும். வந்திருக்கும் இளவட்டங்கள் சேர்ந்தாடத் தொடங்கிவிடுவார்கள். வைரியின் ஆட்டத்துக்கு நிகராக பூசாரியால் கூட ஆட முடியாது. வழிவெட்டலின்போது சுடுகாடுவரை வழிநெடுக ஆடிச்செல்வது வைரியின் வழமை. வந்திருக்கும் கரகாட்டக்காரர்களுக்குக்கூட வைரியின் ஆட்டம் உந்துசக்தியாயிருக்கும். பாம்புக்கு மகுடியென்றால் வைரிக்குப் பறை. பறையின் தாளக் கட்டு வைரியின் உள்ளக் கிளர்ச்சியை உந்திவிடும். வாயினால் அவள் மீட்டும் தாளக் கட்டுகள் ஆட்களைக் கவரும். பறையின் தாளக்கட்டின் ஜதிக்கேற்ப தனக்குத் தெரிந்த சொற்சேர்மானத்தை வைத்து உடனுக்குடன் அவள் இயற்றிப் பாடும் பாடல்களை இளசுகள் சர்வசாதாரணமாக ஞாபகம் வைத்துப் தாளலயமாகப் பாடி மகிழ்வார்கள். மரண ஊர்வலம் ஒன்றின்போது வீதிச் சந்தியில் நிறுத்தி பறை முழக்கிய வேளையில் பறை அடியின் தாளக்கட்டுக்கு ஏற்ப,

'நாங்கள்
பொங்கிறதும் பொங்கிறதும்
திங்கிறதும் திங்கிறதும்
நீங்கள் கேட்கத்
தரோம் தரோம்
என்கிறதும் என்கிறதும்"

என்று பாடிக் காட்டிய எழுந்தமானமான வரிகளை அதன் பின்னர் ஊரில் பலரும் பறையின் தாளக் கட்டுகளை மனதில் நிறுத்திக்கொண்டு பாடத்தொடங்கிவிட்டார்கள். அவை வைரியின் வைர வரிகளாகிப் போயின!

அந்தப் பகுதியில் பெருமெடுப்பில் நடந்த இராணுவ நடவடிக்கையின் பின்னர் வைரியை எவரும் காணவில்லை. அவளைக் கொழும்பு வியாபாரிகள் தங்களோடு கூட்டிச் சென்றுவிட்டதாக ஒரு சாரார் பேசிக்கொண்டார்கள். அவள் வன்னிப் பகுதியில் இருக்கலாம் என சிலர் ஊகம் தெரிவித்தார்கள். கோயில் பூசாரியின் குடும்பத்தில் அவளும் ஒருத்தியாக ஐக்கியமாகிவிட்டதாக சிலர் தீர்மானமாகச் சொன்னார்கள். கொண்டலடி அண்ணமார் கோயிலுக்குப் பின்னாலிருந்த அடர்பற்றைக் காணியில் கிடந்த மண்டையோடும் எலும்புத் துண்டுகளும் அவளதுதான் என்றும் ஒரு கதையுண்டு. அண்ணமார் அடியோடு உருமாறிப் போய்விட்டாலும் ஊரில் ஆங்காங்கே அருந்தலாகக் கேட்கும் பறை ஒலியைக் கேட்கும் போதெல்லாம் ஊராரின் மனக்கடலில் வைரி மிதப்பெடுப்பாள்.

# சுயநலமின்றி தொண்டு செய்வோம்

தேன் கூடு

ம.ப. மகாலிங்கசிவம்

நாடாளுமன்றத்துக்குப் புதிய உறுப்பினர்கள் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 196 பேர் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். இவர்கள் தமக்குச் சேவை, தொண்டு செய்தவர்கள் அல்லது இனியாவது செய்வார்கள் என்று மக்கள் நம்பியதாலேயே தமது வாக்குக்களை இவர்களுக்குச் செலுத்தி தெரிவு செய்துள்ளனர். இவர்களது தொண்டு எவ்வாறு இருக்க வேண்டும். வீட்டுக்கா? நாட்டுக்கா முதன்மை கொடுப்பது? பொதுநலம் மட்டும் இருக்க வேண்டுமா? சுய நலம் மேலோங்கி இருக்க வேண்டுமா? இத்தகைய பல வினாக்கள் தெரிவு செய்தவர்கள் மனங்களிலும் தெரிவு செய்யப்பட்டவர்கள் மனங்களிலும் அலை மோதலாம். இத்தகைய வினாக்களுக்கான விடையாக நீலாவணனின் "தொண்டு'என்ற கவிதை அமைகிறது.

**வெம்புமணல் உண்டு மிஞ்சி**
**வெள்ளம் வெருக்கெடுத்துப்**
**பம்பும் மழை நீர்,பயிரழிவுபண்ணுமென**
**அஞ்சிக்,கமக்காரர்**
**ஆழியொடும் சுவ்டி விட்ட**
**குஞ்சி நீர் ஓடை**
**குறுமணலே வார்ந்திருக்கும்**

**பாம்பாய் கடல்வரையும்**
**பாயும் அந்தப் பள்ளத்தில்**
**சாம்பிக் குருத்தும் சருகான வெள்ளறுகைச்**
**சப்பி வயிற்றைச் சரிக்கட்டிச் சாய்பொழுதில்**
**அப்பாடா என்று களை ஆறும் பசுவொன்றில்**
**பக்கத்தில் வந்து பழகுமிரு காக்கைகள்**

**வெட்கத்தை விட்டும்**
**விரைந்து பசுமீதில்**
**ஏறி இறங்கி,இருந்து, விளையாட்டில்**
**ஊறி உணர்ச்சியிலே**

**காகங்கள்**
**சொண்டுகளைப் பார்த்தேன்**
**சுருக்கென்ற துள்ளத்தில்!**
**தொண்டுக்கு கூலியவை**
**கொண்ட பசுவால் மயிரைக்**
**கண்டேன் இதென்ன கனம்**
**தொண்டருங்கள் சொண்டினிலே!**
**என்றேன். சுடவையிலே ஆலமரம் நோக்கியவை**
**சென்றமர்ந்து கொண்டென்னை ப்**
**பார்த்துச் சிரித்தனவே**

**கடவையிலே வண்ணார்**
**சவலைசெய்யும் கேணி**
**வடபால் விழுதூன்றி**
**வாழும் வடக்கிளையில்**
**கூடுகட்டும் நோக்குடனே**
**குச்சுவகை சேகரிக்கப்**
**பாடுபடுகின்ற அண்டங் காகங்கள் தாமவைகள்**

**கொசுக்கள் படை ஙொய்ங்ங்**
**குரல்கேட்டுச் சாட்டை**
**விசுக்கும் பசு வாலில் தொங்கும் கருங்குழலில்**
**கட்டாதலைகின்ற காட்டெருமைபோல் பேன்கள்**
**கிட்டநெருங்கி மயிர்கோதி,வாய் ஊறிப் பேன்**
**குத்துகின்ற காக்கைக் குடும்பம்**
**பொதுத் தொண்டில்**
**வைத்திருக்கும் நம்பிக்கை**
**வாழ்த்தத் தகுந்ததுவே**

**அப்பொழுதில் அப்பசுவுக் காத்திரமேன் வந்ததுவோ?**
**சப்பளிந்து போன வயிற்றைச் 'சடா' ரென்று**
**தூக்கி வால்தூக்கிச் சுழற்றி அண்டங் காக்கைகளைத்**
**தாக்கியது கொம்பைத் தரைநோக்கித் தாழ்த்தியது**

**காக்கையர் ஏதும்**
**கதையாமல் வேறுபுறம்**
**நோக்கப் பசுமாடு ஊர்**
**நோக்கி நடக்கிறது**

**தொண்டுக்கு நன்றி**
**துளியுமற்ற மாடிதென்று**
**அண்டங்காகங்கள் அறையும் அறமொழியே**
**உண்மையென எண்ணியதை ஒப்புகையில்...**

இக்கவிதை குறியீட்டுப் பாங்கானதாக அமைந்திருக்கின்றது. ஒரு பசுவினதும் இரு காகங்களினதும் கதையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏமார்ந்த பசு தொழிலாளர்களுக்கான அல்லது அப்பாவி மக்களுக்கான குறியீடு. காக்கைகள் தொண்டு செய்கிறோம் என்ற போர்வையில் சுயநலத்தோடு சுரண்டிப் பிழைப்பவர்கான குறியீடு.

வறட்சிக்காலம் குருத்துக் கூடச் சருசாய்ப் போன அறுகம்புல்லை உண்டு அதை இரை மீட்டுக்கொண்டு படுத்திருக்கிறது பசு. அதன் வாலில் பெருந்தொகையான பேன்கள் இருந்து இரத்தம் குடிக்கின்றன. அந்தப் பேன்களைப் பிடித்து இரு காகங்களும் உண்கின்றன. வடிவேலு பாணியில் ''கதை நல்லாத் தானே போய்க்கிட்டிருந் திச்சு'''




திடீரெனப் பசுவோ வாலைத் தூக்கிச் சுழற்றிக் காகங்களை அடிக்கிறது. ''தொண்டுக்கு நன்றி சிறிதுமற்ற மாடு இதென்று"காக்கைகள் குற்றம் சுமத்துகின்றன. வெளிப்பார்வைக்கு அது உண்மை போலத் தான் தெரிகிறது. ஆனால் கவிஞரோ காகங்களின் வாய்களைக் கூர்ந்து நோக்குகின்றார். அவற்றின் வாயில் மாட்டு வாலிலிருந்து பிடுங்கிய மயிர் தமது கூட்டைக் கட்டுவதற்காகக் குச்சு வகைகளைச் சேகரித்துக்கொண்டிருக்கும் காக்கைகள் மாட்டுவால் மயிரையும் அதற்காகவே பிடுங்கியுள்ளன. தொண்டுக்குக் கூலியாக அவற்றை எடுத்துள்ளன என கவிஞர் கூறுகிறார்.

தொண்டு என்ற போர்வையில் தமது கொடுரமான சுயநலத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் காகங்களைக் குறியீடாகக் கொண்டு கவிஞர் சுயநலம் மிக்க மனிதர்களின் செயலைக் எடுத்துக்காட்டியுள்ளார்.

"பாம்பாய்க் கடல்வரையும் பாயும் அந்தப் பள்ளம்"
"கட்டா தலைகின்ற காட்டெருமை போல் பேன்கள்"முதலிய உவமைகள் கவிதைக்கு அழகு சேர்க்கின்றன.
"கடவையில் வண்ணார் சலவை செய்யும் கேணி
வடபால் விழுதூன்றி வாழும் வடக்கிளை"முதலிய நுட்பமான வர்ணனைகள்
"இதென்ன கனம் தொண்டருங்கள் கொண்டினிலே" என்றேன்...ஆகிய பகுதிகளில் காணப்படும் பேச்சோசைப் பண்பு முதலியவை கவிதைக்கு நயம் சேர்க்கின்றன.

தம்மை முழுமையாகத் தொண்டுக்கென்றே அர்ப்பணித்துச் சமூக சேவை செய்யும் எத்தனையோ நல்லுள்ளம் கொண்டவர்கள் இருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது. எனினும் தொண்டின் பயனைப் பெற்றுக்கொள்ளும்போது விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை இக்கவிதை எடுத்துக்காட்டுகிறது. ■





## ஏழ்மைகள்

எமது
நிலத்தை விழுங்கும்
ஏழ்மைகள்.
அழுவதற்கு இடமில்லாத
குடிசைகளில்,

முள்ளில் தொடங்கிய
வாழ்வில் குருதியை
தவிர வேறு ஒன்றும்
இல்லை,

இந்நிலை எந்நாளும்
எமக்கு வந்து விட கூடாது என்று
தான் ஒரு யுகத்தை உருவாக்கி
அதை நாமே அழித்து விட்டோம்,

அந்த தேசத்தில் வறுமைக்கு
வளம் இல்லை,
அங்கு வாழ்ந்த
மனித குலம் ஆனந்தத்தையும்
தன்னம்பிக்கையையும்
வாழ்வில் சூடி நின்றது,
மேலும் தம்மை தாமே
வளப்படுத்திக்கொண்டார்கள்,

ஆயினும் இன்று எதனால் இப்படி
வாழ்கிறோம் என்பது அறிந்தால்,

தன்னம்பிக்கை தரும் நம்மவர்கள்
சற்று குறைவே என்பேன்,

இது நாம் செய்யவேண்டிய
கடமை,
வாழ்வை விட வேறெதுவும்
எமக்கு பெரியதல்ல,

இப்போ இங்கே பெரிய இளைஞர்
படையே மக்கள் பிணி தீர்க்கும்
பணியில் இணைகின்றார்கள்,
நாங்கள் மக்களுக்கானவர்கள்
என்பது எங்கள் நோக்கு,

எனது தேசம்,எனது மக்கள்,
என்று எழும் என்
தமிழர் சேனை எப்போதும்
தனித்துவமானதே,

ஆழமாக விதைக்கப்பட்ட
விதைகள் அசுர வேகத்துடன்
எழுவது பேரதிசயமே,

*தே.பிரியன்,*
*கிளிநொச்சி*



○ பொக்கிசன்

# நானும் கள்ள வாக்கு போட்டனான்

எங்கடை கிளிநொச்சி எம்.பி, தான் எழுபத்தைந்து கள்ள வாக்கு போட்டனான் எண்டு தேர்தல் காலத்தில, எங்கையோ சொல்லி, அது தேர்தல் ஆணையாளர் வரையும் போயிருக்கு. அவருக்கு மட்டும் தான் கள்ள வாக்கு போடத்தெரியுமெண்டு நினைக்காதையுங்கோ. எனக்கும் கள்ள வாக்கு போடத் தெரியும்; நானும் கள்ள வோட் போட்டனான் தெரியுமே? 1977ம் ஆண்டு அமிர்தலிங்கம் தமிழ் ஈழத்துக்கு ஆணை கேட்ட போது எலெக்சன் கூட்டத்திலை சொன்னார், அடுத்த தேர்தல் தமிழ் ஈழத்திலை தான் எண்டு. நானும் தமிழ் ஈழம் மலரப்போகுது எண்டு நினச்சு மூண்டு வோட் போட்டனான் தெரியுமே. அதுவும் எனக்கு வாக்குரிமை இல்லாத நேரத்தில. அதுவும் ஏ.எல் படிக்கிற காலத்திலை .

எலெக்சனுக்கு கொஞ்ச நாளைக்கு முதல் தான் கூட்டணி (தமிழர் விடுதலை கூட்டணி) ஒப்பிஸ் திறந்தவை. திறப்பு விழாவுக்கு நானும் போய் தோரணம் கட்டினனான். செத்த ஆக்களின்ரை கார்ட்டுகள் எல்லாவற்றையும் (வாக்காளர்அட்டை) வாங்கிக் கொண்டந்து வைச்சிருந்தினம். என்னட்டையும் ஒரு கார்ட்டைத் தந்து, போய் வோட் போட்டிட்டு வரச் சொல்லிச்சினம் . நானும் கார்ட்டிலை கிடந்த பெயரை சொல்லி, போட்டிட்டு வந்திட்டன். கூட்டணி ஒப்பிசிலை அஞ்சாறு பேர் இருந்தவை. எல்லாம் ஊர் ஆக்கள் தான். என்னடா போட்டிட்டு வந்திட்டியே எண்டு எல்லாரும் கேட்டினம். நான் ஓமெண்டு சொன்னன். வெள்ளையப்பன் ஒரு எலுமிச்சம்பழத்தை இரண்டாக வெட்டி மை பூசின விரலை எலுமிச்சம்பழ பாதிக்குள் வைத்து அமத்தினான். மை அழிந்து விட்டது. இன்னொரு கார்ட்டை தந்தார்கள். அதையும் கொண்டு போய் வாக்குப் போட்டு விட்டு வந்தேன். அங்கே அமிர்தலிங்கம் வந்தார் "என்ன மாதிரி போகுது?" என்றார்.


" இந்த முறை எங்களுக்குத்தான். ஒண்டும் யோசிக்கத் தேவையில்லை "என்றார்கள் ஒப்பிஸிலிருந்த ஆக்கள். இதுக்கு முந்தி வி.பொன்னம்பலம் தான் எதிர்த்து கேக்கிறது. இந்த முறை ஸ்ரீதரன் தான் அமிர்தலிங்கத்தை எதிர்த்துக் கேக்கிறார். மல்லாகத்திலை தான் வீடு. ஸ்ரீதரனுடைய ஆக்களும் பள்ளிக்கூடத்திலை இருந்தவை. ஆனா கண்டும் காணாதது மாதிரி விட்டிட்டு இருந்திச்சினம்.

நாங்கள் ஏலாத ஆக்கள் உள்ள வீடுகளுக்குப் போய், அவர்களைக் கூட்டிக் கொண்டு வோட் போடப்பண்ணினோம்.

"நீ இனி மதியத்துக்குப் பிறகு போய், ஒரு வோட் போட்டிட்டு வா" ஒபிசிலை இருந்த ஆக்கள் சொல்லிச்சினம் . நானும் ஓமெண்டு சொன்னன். திரும்பவும் எலுமிச்சம்பழம் பூசி மையை அழித்த பின்னர் நான் மூண்டாவது தடவையாக யாரோ ஒருத்தற்றை கார்ட்டை கொண்டு வெளிக்கிட்டன்.

" ஒண்டும் பிரச்சனை இல்லையே?" எண்டு கேட்டன். ஒபிசிலை இருந்த ஆக்கள் "அது ஒண்டும் பிரச்சனையில்லை .நீபோய் போட்டிட்டு வா "என்று சொன்னார்கள். நானும் கார்ட்டை வாங்கிக்கொண்டு பாடசாலையை நோக்கி நடந்தேன். இப்படியாக ஒரே எலெக்சனிலை மூன்று தரம் கள்ளவாக்குப் போட்ட செம்மலானேன்.

○ ந.பரமேஸ்வரன்



# யாழ். மாநகர சபையின் வரலாறு (1906 - 1949)

பாகம் 11

10.01.1927 அன்று சனி காலி 9.00 மணிக்கு தலைவர் கனகரத்தினத்தின் தலைமையிலான கடைசிக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உபதலைவர்V.S.S குமாரசாமி,K.கனகசபை, R.R.நல்லையா, மோசஸ்,R.சுப்பிரமணியம்,R.சிவகுருநாதர், K.சோமசுந்தரம், A.M.M.அப்துல் காதர் ஆகியோர் கலந்துகொண்டனர். சட்டசபையின் அழுத்தம் காரணமாக (Legislative pressure)(பிரித்தானியர் காலத்தில் நாட்டை ஆட்சி செய்த சபை) தலைவர் கனகரத்தினம் தனது பதவியை இராஜினாமா செய்ய அவரது இடத்திற்கு Patriot பத்திரிகை ஆசிரியர் C. அருளம்பலம் நியமிக்கப்பட்டார்.

12.03.1927 அன்று நடைபெற்ற கூட்டத்தில், சபை எல்லைக்குட்பட்டகுளிபான தொழிற்சாலைகளுக்குரிய சட்ட திட்டங்களை வரைவது பற்றி ஆராயப்பட்டது. அத்துடன் வரி வசூலிப்பவர்களின் சம்பளத்தை 82ரூபா 50 சதமாக அதிகரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதே கூட்டத்தில் நகரின் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு 2.80.000 ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டது.

(Catholic Guardian 19.03.1927)

09.07.1927 அன்று நடைபெற்ற கூட்டத்தில், யாழ் நகர அபிவிருத்திச் சபையை புதிய இடத்தில் அமைப்பது பற்றி ஆராயப்பட்டது. இதே கூட்டத்தில் நான்காம் வட்டார உறுப்பினர் பதவி விலகுவதாக அறிவித்தார். அவரது இடத்திற்கு யாரை நியமிப்பது என்ற வினா எழுப்பப்பட்டது.

*(Catholic Guardian 23.07.1927)*

10.03.1928 அன்று நடைபெற்ற கூட்டத்தில், மணிக்கூட்டுக்கோபுரத்திலுள்ள மணிக்கூடு திருத்துவதற்கு அதிக செலவாகுமெனவும், புதிதாக மணிக்கூடொன்றைக் கொள்வனவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. தீர்மானத்தின் பிரகாரம் பென்சன் அன் கோவிடம் புதிய மணிக்கூடு கொள்வனவு செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டது. அவர்கள் இரண்டு மணிக்கூடுகளின் விபரங்களை அனுப்பியிருந்தனர்.

1.358 ஸ்டேர்லிங் பவுண் அல்லது 5500.00 ரூபா

2.386 ஸ்டேர்லிங் பவுண் அல்லது 6000.00 ரூபா R.R.நல்லையா 6000.00 ரூபா பெறுமதியான மணிக்கூடு சிறந்தது எனக்கூறி வாக்கெடுப்புக்கு விட்டார். அதனை T.H. Fnwhnrw; வழிமொழிந்தார். இதே கூட்டத்தில் பெரிய கடைப்பகுதியில் மீன்சந்தை அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

அத்துடன் வீதி விளக்குக ளுக்குப்பதிலாக 100.00 பெறுமதியான மின் விளக்குகள் பொருத்துவதற்கு கேள்விப்பத்திரம் கோரலாம் என்ற ஆலோசனையையும் தலைவர் முன்வைத்தார்.

14.07.1928 அன்று R.சிவகுருநாதர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், C.அருளம்பலம், R.Rநல்லையா, A.M.Mஅப்துல் காதர், R.சுப்பிரமணியம் V.S.S.குமாரசாமி, மாவட்ட பொறியியலாளர் K.கனகசபை, மாகாண சத்திரசிகிச்சை நிபுணர் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் ஐயனார் கோயில் வீதி - குளங்கரை வீதிக்கு தார் ஊற்றுவதற்கு கேள்விப்பத்திரம் கோருவதென தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

25.08.1928 அன்று நடைபெற்ற விசேட கூட்டத்தில், ஐயனார் கோயில் வீதி குளங்கரை வீதிக்கு கூட்டத்தில் தார் ஊற்றுவதற்கு 350.00 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

15.09.1928 அன்று நடைபெற்ற விசேட கூட்டத்தில், கைத்தொழில் பயிற்சிக்கல்லூரி அமைப்பதற்கு காணி தேவையென கல்விக்குழு விடுத்த கோரிக்கை நிராகரிக்கப் பட்டது; பொருத்தமான இடத்தில் காணி ஒதுக்குவதென தீர்மானிக்கப்பட்டது.

08.12.1928 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அரசரின் (பிரித்தானிய) சுகவீனத்திற்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

19.01.1929 அன்று யாழ்ப்பாணம் கச்சேரியில் சிவகுருநாதர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஆரியர்குளத்திலிருந்து புகையிரத நிலையம் வரையான வெள்ளவாய்க்கால் புனரமைக்கப்பட வேண்டுமென உறுப்பினர் ஆசைப்பிள்ளை வலியுறுத்தினார்.

24.01.1929 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஐயனார் கோயில், காங்கேசன்துறை வீதிக்கு சிவப்பிரகாசம் வீதி என பெயர் சூட்டுவதென தீர்மானிக்கப்பட்டது.

(தொடரும்)

யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**பொதுச் செயலர் துரைராஜசிங்கம் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரை மாத்திரமல்ல கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோவையும் ளபுறந்தள்ளி தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த வாக்குகள் தனித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு கிடைத்தவை அல்ல. அவை பங்காளிக் கட்சிகளுக்கும் சேர்த்து கிடைத்த வாக்குகள்தான்.**

**ஆனாலும் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், உள்ளூராட்சித் தேர்தல் தோல்வியை விட மிகப் பெரிய தோல்வியைத்தானே சந்தித்திருக் கின்றீர்கள்?**

**ப** 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் எங்களுக்குப் பாதகமான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. பணம் அள்ளி விசிறப்பட்டுள்ளது. எங்களுடன் போட்டி போட்ட பல கட்சிகள் இதனைச் செய்துள்ளன. அவர்கள் பணத்தைக் கொட்டிய அளவுக்கு நாங்கள் செலவு செய்யவில்லை. மதுபானத்தை விநியோகித்தி ருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் எங்களால் செய்ய முடியாது. இவையும் தேர்தலில் எங்களுக்கு பாதகமான காரணிகளாக அமைந்தன.

**கே கடந்த காலங்களிலும் பணம் வழங்கல், மதுபானம் வழங்கல் என்பவை உங்களுடன் போட்டியிட்ட ஏனைய கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்றன. ஆனால் அந்தக் காலங்களில் எல்லாம் கூட்டமைப்புக்கு மக்கள் அதிகளவில் வாக்களித்திருந்தார்களே?**

**ப** கடந்த காலங்களில் இந்தத் தேர்தலில் நடந்தது போன்று மதுபானமோ அல்லது பணப் புழக்கமோ இருக்கவில்லை. அது குறைவாக இருந்தது. மக்கள் மத்தியில் தேசிய உணர்வு மேலோங்கி நின்றது. இன்று அது மெல்ல மெல்ல மழுங்கடிக்கப்படுகின்றது. அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்ற தனிமனிதத் தேவைகள் மக்கள் மத்தியில் உள்ளன. அதனை நாங்கள் பூர்த்தி செய்யவில்லை. சில சில விடயங்களைச் செய்திருந்தாலும் மக்களின் தேவைகளை முழுமைப்படுத்த முடியவில்லை. கம்பரெலிய ஊடாக வீதிகளை அமைத்துக் கொடுத்ததிலும் பார்க்க, மக்களின் வாழ்வாதாரத்துக்கு அந்த நிதியை மாற்றிப் பெற்றுக் கொடுத்திருந்தோமானால் இன்று நாங்கள் வெற்றியடைந்திருக்க முடியும்.

**கே கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன், நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த பின்னர் சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஆயுதப் போராட்டம் தொடர்பில் கொச்சைப்படுத்திய அவரது நேர்காணல் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. தேர்தல் பின்னடைவுக்கு அதுவும் காரணம்தானே?**

**ப** அவரது உரையால் சிறிய தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இல்லையென்று இல்லை. கூடுதலாக இயக்கம் சார்ந்தவர்கள் அல்லது அந்தக் கருத்தியலோடு உள்ளவர்கள் முரண்பட்டிருக்கலாம். இது ஒரு காரணிதான். ஆனால் இது மட்டும்தான் காரணமல்ல.

**கே 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் பின்னடைவுகளைக் கண்டறியக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையில், சுமந்திரன் எஸ்.ரி.எவ். (சிறப்பு அதிரடிப் படையினர்) உடன் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்ற தும் பின்னடைவுக்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருந்தது. (அந்த அறிக்கை வெளியிடப்படாவிடினும் அதன் உள்ளடக்கங்கள் சில கசிந்திருந்தன) ஆனாலும், இந்தத் தேர்தலின் போதும் அவர் எஸ்.ரி.எவ். பாதுகாப்புடன்தானே தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்றார்?**

**ப** அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான சுமந்திரன், எஸ்.ரி.எவ். பாதுகாப்புடன் வந்து வெற்றி பெற்றுள்ளாரே?


**கே ஆனால் கட்சி தோல்வியடைந்து விட்டதே?**

**ப** கட்சிக்கு பின்னடைவு என்றால், மக்கள் அவருக்கு வாக்களித்திருக்கக் கூடாதே. அத்துடன் 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் பின்னடைவு தொடர்பான அறிக்கையை வெளியிடாமை தொடர்பில் கட்சியின் செயலரிடம் நான் கேள்வி எழுப்பியிருந்தேன்.

**கே 2018ஆம் ஆண்டு தேர்தல் பின்னடைவுக்கான அறிக்கையே வெளியிடப்படாதபோது, 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பின்னடைவுக்கு குழு நியமித்து அதனால் என்ன பயன் ஏற்படப் போகின்றது?**

**ப** கட்சி ரீதியான சில தவறுகளை நாம் விட்டுள்ளோம். இனிமேல் அவ்வாறான தவறுகளை விடுவோம் என்றில்லை. இவற்றை நாம் கூறினால், கட்சிக் கட்டுப்பாட்டை மீறுகின்றோம், கூட்டுப் பொறுப்பை உடைக்கின்றோம் என்று குற்றச்சாட்டுக்கள் வரும். அதனால் நாங்கள் அடங்கி அடங்கிப் போய் இன்று கட்சி ஆபத்தான நிலையில்தான் இருக்கின்றது. இனிமேலும் மௌனம் காத்துக் கொண்டிருக்க முடியாது.

இப்போதும் கட்சியின் செயலரின் விடயத்தில் நாம் விமர்சனங்களை முன்வைக்கும்போது கட்சியைப் பாதிக்கும் என்கின்றார்கள். கட்சி பாதிக்கப்பட்டு விட்டதே? ஆகவே இனிமேல் நாங்கள் மௌனம்காக்கப் போவதில்லை. சிலர் ஏதாவது பதவிகளுக்காக மௌனம் காக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் நான் அப்படியான நிலைப்



பாட்டில் இல்லை. கட்சி வீழ்ச்சியடையும் போது பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

நாங்களும் மௌனித்து அமைதியாக இருந்ததன் அடிப்படையில் நானும் ஓர் குற்றவாளிதான். இனியும் அந்த விடயத்தில் குற்றவாளியாக இருக்க நான் தயாரில்லை.

**கே தேர்தலில் பெரும் பின்னடைவு என்ற துன்பகரமான நிலையிலிருந்து கட்சி மீள்வதற்குள், கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கும் முறைமையில் மிக மோசமான தவறு, ஜனநாயக விரோதமான செயற்பாடு தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கத்தால் அரங்கேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் என்ன செய்யப் போகின்றீர்கள்?**

**ப** தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்பட்ட முறைமை பிழை என்பதை கட்சியின் அரசியல் செயற்குழுக் கூட்டத்தில் தெளிவாகச் சொல்லிவிட்டோம். வழங்கப்பட்ட நியமனத்தை மாற்றவேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை. அவ்வாறு நாங்கள் கேட்டால் பிராந்திய வேறுபாடு வரும்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவரை மாத்திரமல்ல கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோவையும் தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் புறந்தள்ளி தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த வாக்குகள் தனித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு கிடைத்தவை அல்ல. அவை பங்காளிக் கட்சிகளுக்கும் சேர்த்து கிடைத்த வாக்குகள்தான். பொதுச் செயலர் துரைராஜசிங்கம் தன்னிச்சையாக, அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளார். இந்த விடயங்கள் அரசியல் செயற்குழுவில் விவாதிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாகத்தான் மத்திய செயற்குழுவில் ஆராயப்படவுள்ளது.

**கே கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கம் தவறிழைத்துள்ளார் என்பது வெளிப்படை உண்மை. அதன் பின்னரும் அவர் மீது நடவடிக்கை எடுக்காமல், இழுபறி நிலை தொடர்வது ஏன்?**

**ப** அவர் மீதான நடவடிக்கை தொடர்பில் வவுனியாவில் நடைபெறும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நிச்சயம் பேசுவோம்.

**கே தவறிழைத்த துரைராஜசிங்கம் மீது, கூட்டமைப்பின் தலைவராகவும், தமிழ் அரசுக் கட்சியின் போசகராகவும் இருக்கக்கூடிய சம்பந்தன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே? துரைராஜசிங்கத்தை பாதுகாக்கும் வகையில் சம்பந்தன் செயற்படுவது போன்று தோன்றுகின்றதே?**


**ப** அவர் பாதுகாக்கும் வகையில் செயற்படவில்லை. கட்சியின் அரசியற் செயற்குழுக் கூட்டத்தில், இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது. பொதுச் செயலர் நடந்து கொண்ட முறைமை தவறு. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம். அரசியற் செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கம், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் இந்த விடயத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு மூன்று நான்கு தடவைகள் கேட்டபோதும், மத்திய செயற்குழுவில் ஆராயும் எமது கோரிக்கைக்குத்தான் செவிசாய்த்தார்.

**கே இவ்வாறு தவறிழைத்த ஒருவரை செயலராக வைத்துக்கொண்டு பாதாளத்தில் விழுந்துள்ள கட்சி வெற்றிப் பாதையில் பயணிக்க முடியுமா?**

**ப** மத்திய குழுக் கூட்டத்தில் இது தொடர்பான நடவடிக்கை பற்றி ஆராய இருக்கின்றோம். கட்சியிலுள்ள பெரும்பாலானவர்களுக்கு கிழக்கு மாகாணம் உள்பட, இவரது நடவடிக்கை தொடர்பில் அதிருப்தி உண்டு. அவர் இதனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார் என்பதையும் அவதானிக்கின்றோம். அவர் ஒரு முடிவுக்கு வரலாம். சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வருவது என்றால் அவராகவே பதவி விலகமுடியும். இல்லாவிட்டால், கடும் போக்கான நடவடிக்கைக்குச் செல்வோம். நாம் பகிரங்கமாக விவாதிக்கமாட்டோம், கட்சிக் கட்டுப்பாட்டை மீறமாட்டோம் என்ற துணிச்சலி லும், அம்பாறைக்கு தேசியப் பட்டியலை வழங்கினால் வடக்கு கிழக்கு என்ற பிரதேச வாதத்தை முன்னிறுத்தி எங்களை அடக்கலாம் என்ற துணிச்சலி லும் தான் செயலர் துரைராஜசிங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். இது எங்களுக்கு தெளிவாகத் தெரியும். இந்த விடயத்தில் அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்குப் பல்வேறு தெரிவுகள் இருக்கின்றன. வருடாந்த பொதுச் சபையைக் கூட்டித்தான் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றாலும் அதைச் செய்யத் தயாராக இருக்கின்றோம்.

**கே கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் இந்தச் சூழ்ச்சியை தனித்து முன்னெடுத்திருப்பார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?**

**ப** இந்த விடயத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தொடர்புபட்டிருப்பார் என்பது கேள்விக்குறியான விடயம். துரைராஜசிங்கம் என்ன நிகழ்ச்சி நிரலில் இயங்கினார் என்பது புதிராக உள்ளது. தான் தன்னிச்சையாகச் செய்து விட்டேன் என்று காட்டுவதற்கு முனைகின்றாரா அல்லது வேறு எவரும் ஆதரவுடன் இதனைச் செய்தாரா என்பதில் எனக்குத் தெளிவில்லை.



**கே** **தேசியப் பட்டியல் ஆசனத்துக்குப் பெயரிடப்பட்ட கலையரசனை கூட்டிச் சென்று உடனடியாகப் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியமை, தேசியப்பட்டியல் ஆசனத்துக்காக கலையரசனின் பெயரிட்டு கட்சிச் செயலர் கையெழுத்திட்ட ஆவணத்தை, கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உடனடியாக எடுத்துச் சென்றமை என்பவை திட்டமிட்டு நடந்ததைப் போன்று அல்லவா தெரிகின்றது?**

**ப** நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் நான், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவுடன் கதைத்து இணக்கத்தைப் பெற்ற பின்னர், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடனும் பேசி அவர்களின் சம்மதத்தைப் பெற்றேன். பின்னர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை 8ஆம் திகதி மதியம் சந்தித்தேன். அதற்கு முன்னர், இவ்வாறான சந்திப்பொன்றை கூட்டமைப்பின் தலைவருடன் மேற்கொள்ளவுள்ளேன் என்ற தகவலை கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தேன்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தேசியப் பட்டியலுக்கு மாவை.சோ.சேனாதிராசாவை நியமிப்பதற்குரிய ஒப்புதலை வழங்கிவிட்டு, இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலருக்கு அறிவிப்பதாகச் சொன்னார். அத்துடன் இந்த முடிவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கத்துக்கு நானும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.21 மணிக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பினேன். அக்குறுஞ்செய்தி இப்போதும் ஆதாரமாக எனது கைபேசியில் உள்ளது.

> எங்கள் கட்சியின் வரலாற்றில் எந்தவொரு காலத்திலும் செய்யப்படாத ஒரு விடயத்தை துரைராஜசிங்கம் அரங்கேற்றினார். தேசியப் பட்டியலுக்கு பெயரிடப்பட்ட கலையரசனையும் வைத்துக் கொண்டு பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தினார். எல்லாவற்றையும் அவர் திட்டமிட்டே செய்தார்.

**கே** **மாகாணசபைத் தேர்தல் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறலாம் என்று எதிர்வுகூறப்படுகின்றது. அந்தத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குரிய வியூகங்களை கூட்டமைப்பு வகுக்கத் தொடங்கிவிட்டதா?**

**ப** இன்னும் பெரிய அளவில் அதனை ஆரம்பிக்கவில்லை. ஆனால் பலர், நீதான் வேட்பாளர் என்று பலருக்கு உறுதிமொழி வழங்கி வருகின்றார்கள். உள்ளூராட்சி மன்றங்கள் தோல்வியடைந்ததற்குப் பிரதான காரணமும் இதுதான். தகுதியானவர்களை தெரிவு செய்யாமல், அவரவருக்கு வசதியானவர்களைத் தெரிவு செய்ததும் பெரும் பிரச்சினைதான். 2011ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்களை கட்சி ரீதியாக நாம் அழைத்து கலந்துரையாடல்களை நடத்தினோம். ஆனால் 2018ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை அவ்வாறு அழைத்து கலந்துரையாட முடியாத சூழல் காணப்படுகின்றது. ஒவ்வொரு உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்களும் ஏதோவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கியவர்களாகக் காணப்பட்டார்கள். இதனால் அதனைச் செயற்படுத்த முடியவில்லை. இதுவும் தேர்தல் பின்னடைவுக்கான காரணங்களில் ஒன்று.

மாகாணசபைக்கு பதவிக்கு வரக் கூடியவர்களுக்கு அடிப்படை நிர்வாக விடயங்களாவது நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். இதனால்தான் கடந்த தடவை முதலமைச்சராகப் பதவி வகித்த விக்னேஸ்வரனுக்கு பின்னடைவு வந்தது.எனது ஆதரவாளன், எனக்கு தேர்தலில் வேலை செய்தவர் என்ற அடிப்படையில் வேட்பாளர் நியமனம் வழங்கப் போனால் கடந்த தடவையிலும் பார்க்க மிக மோசமான மாகாண நிர்வாகம் வரும்.

**கே** **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டவர்களுக்குக் கூட மாகாணசபைத் தேர்தலில் வேட்பாளர் ஆசனம் வழங்கப்படும் என்ற உறுதிமொழிகள் வழங்கப்பட்டு அவ்வாறானவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் குறித்த தொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஆதரவாக பணியாற்றியும் இருந்தார்களே?**

**ப** வாக்குறுதிகள் கொடுத்துள்ளார்கள் என்பது உண்மை. இப்படி வாக்குறுதி வழங்கிய எல்லோரையும் வேட்பாளராக்குவது என்றால் 5 மாகாணசபைகள் வேண்டும்.

**கே** **நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்கு குழு அமைக்கப்பட்டமை போன்று மாகாணசபைத் தேர்தலுக்கும் அவ்வாறானதொரு குழு அமைக்கப்படமாட்டாதா?**

**ப** கட்டாயம் செயற்படுத்தப்பட வேண்டும். அரசியல் எடுபிடித்தனத்துக்காக வேட்பாளர்களாக்கினால் வரப்போகும் மாகாண சபை முதல் இருந்த மாகாணசபையை விட மோசமான மாகாண சபையாக வரும். மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

மாகாணசபையின் அவைத் தலைவராக இருந்து சரியாகத்தான் நான் வழிநடத்தினேன். மாகாண சபை முறைமையைப் பற்றி, அதிலுள்ள விடயங்களைப் பற்றி ஓரளவாவது தெரிந்தவர்கள், வேட்பாளர்களாகக் களமிறக்கப்பட வேண்டும். இல்லாவிடின் தமிழர்களுக்கு மாகாணசபையையே நடத்தத் தெரியாது என்று தெற்கு எம்மைப் பார்த்துச் சொல்லும் நிலைமைதான் ஏற்படும். மக்கள் விழித்தெழ வேண்டும். இனியாவது சரியானவர்களைத் தெரிவு செய்யவேண்டும்.

**கே** **நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிளவுண்டு நின்றமையும் சிங்கள தேசியக் கட்சிகள் அல்லது அவர்களுக்கு ஆதரமானவர்கள் கோலோச்சுவதற்கு காரணமாக அமைந்தது. மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா?**

**ப** ஒற்றுமையின்மை எமது இனத்தின் சாபக்கேடு. அடுத்தது தற்பெருமை பேசுவது, ஈகோ. இது எங்களின் கட்;சிக்காரர்களிடமும் உள்ளது. ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளிடமும் உள்ளது. ஈகோ உள்ளவரை, சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓர் புள்ளியில் இணைவார்களா என்ற சந்தேகம் உள்ளது. கட்சிகளின் இணைவுக்கான தேவை உள்ளது. ஆனால் பதவிகளுக்கான சண்டையும் உருவாகும்.

இல்லாவிடின்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து இவ்வளவு தரப்புக்களும் ஏன் வெளியேறினார்கள். எங்களிலும் தவறு உள்ளதுதானே? ஏன் இவர்கள் செல்லும் சூழ்நிலையை உருவாக்கினோம்? நாங்கள் செய்ததும் தவறுதான்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அதைவிடக் கொடுமை என்னவெனில் தமது சொந்த மக்களின் கவனத்தையும் ஈர்க்க முடியவில்லை என்பதே.இதைச் சுட்டிக்காட்டி கண்ணன் அருணாச்சலம் என்ற ஓர் ஆவணப் படத் தயாரிப்பாளர் குடில் என்ற பெயரில் ஓர் ஆவணப்படத்தைத்தயாரித்திருக்கிறார்.

போராட்டத்துக்கு சொந்த மக்கள் மத்தியில் இருந்தே தொடர்ச்சியான ஆதரவு கிடைக்கவில்லை.அதாவது அவை மக்கள் மயப்படவில்லை.போராட்டங்கள் தொடங்கிய புதிதில் போராட்டக் குடில்களுக்குள் காணப்பட்ட அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் படிப்படியாக அங்கே போவதைக் குறைத்துக் கொண்டார்கள்.

குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் ஒப்பீட்டளவில் அதிக தொகை மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். ஆனால் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு பெரும்பாலானவர்கள் தயாரில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமே போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஏன் இந்த நிலைமை? பாதிக்கப்பட்டவர்களை மட்டும் போராட விட்டுவிட்டு ஏனையவர்கள் பார்வையாளர்களாக அமர்ந்திருக்கும் ஒரு நிலைமை ஏன் தோன்றியது ? இதில் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது செயற்பாட்டாளர்கள் ஏன் இந்தப் போராட்டங்களுக்கு தலைமை தாங்க முன்வரவில்லை? குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புக்கள் இந்தப்போராட்டங்களை ஒருங்கிணைக்க மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. இதற்கு காரணம் என்ன?

பின்வரும் இரண்டு காரணங்களை கூறலாம்.

முதலாவது காரணம்இந்தப்போராட்டங்கள் கருத்து மையச்செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக பாதிக்கப்பட்டவர்கள் மைய செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படுகின்றன என்ற விமர்சனம்.கருத்துமையச் செயற்பாட்டாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்திருந்தால் அவை சிலவேளைகளில் இப்போது இருக்கும் தேக்கத்தை உடைத்துக்கொண்டு புதிய போராட்ட வடிவங்களைக் கண்டுபிடித்து இருந்திருக்கும். ஆனால் இந்தப் போராட்டத்தை இன்றுவரை முன்னெடுப்பது பாதிக்கப்பட்ட மக்களே. எனவே அவை அதிக பட்சம் உணர்வுபூர்வமான தளத்திலேயே இப்பொழுதும் நிற்கின்றன. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பும் ஒருமித்த சிந்தனையும் இல்லை. நாளை நடக்கப்போகும் போராட்டத்தில் வவுனியா அமைப்பு இணையப் போவதில்லை என்று தெரிகிறது. ஏற்கனவே வவுனியா மைய அமைப்பு இரண்டாக உடைந்து விட்டதாக ஒரு அவதானிப்பு உண்டு. கிளிநொச்சியிலும் நிலைமை அப்படித்தான். இந்த உடைவுகளுக்கு காரணம் மேற்படி போராட்டங்களைப் பின்னிருந்து ஊக்குவிக்கும் புலம்பெயர்ந்த தமிழ் தரப்புக்களே என்று ஒரு அவதானிப்பு உண்டு.

ஒருபுறம் புலம்பெயர்ந்த தமிழ் தரப்புகளின் தார்மீக மற்றும் நிதி ரீதியான ஆதரவு இல்லையென்றால் இந்தப் போராட்டங்கள் இந்த அளவுக்கு சோர்ந்து போன நிலையிலும்கூட இவ்வளவு காலத்துக்கு இழுபட்டுக்கொண்டு வந்திருக்காது. அதே சமயம் அதே புலம்பெயர்ந்த பணத்தின் தலையீடு தான் இந்தப் போராட்டஅமைப்புகளை ஒற்றுமைப்பட விடுவதில்லை என்றும் ஒரு அவதானிப்பு உண்டு.

சில ஆண்டுகளுக்கு முன் அனந்தி சசிதரன் அவ்வாறு ஒற்றுமைப்படுத்த எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அப்போது அவரும் இப்படி ஒரு கருத்தைத்தான் சொன்னார். இந்தஅமைப்புகளைப் பின்னிருந்து ஊக்குவிக்கும் வெவ்வேறு புலம்பெயர்ந்த தரப்புகள் இந்த அமைப்புகளையும் போராட்டத்தையும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்புகின்றன. அதனால் அவை இந்த அமைப்புகள் ஒற்றுமைப்படுவதை விரும்பவில்லை என்று பெரும்பாலான செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்டதொரு பின்னணியில் காணாமல் போனவர்களுக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் சங்கங்கள் ஒருமித்த வேலைத்திட்டத்தின் கீழ் இயங்குவதாகத் தெரியவில்லை. தவிர எல்லோரையும் ஒன்றிணைக்க கூடிய ஓர் அரசியல் இயக்கம்இந்தப்போராட்டங்களை முன்னெடுக்கவில்லை.

இப்போதுள்ள தேக்கத்தை உடைத்துக்கொண்டு ஒரு புதிய போராட்ட வழிமுறையைக் கண்டுபிடிக்கவில்லை என்றால் வரும் ஆண்டும் இந்த நாளையொட்டி அதாவது அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாளையொட்டிப் படி ஒரு கட்டுரையை எழுத வேண்டி வருமா? இப்போது உயிரோடு இருக்கும் அந்த முதிய பெற்றோரில் எத்தனை பேர் அப்போது உயிருடன் இருப்பார்கள் ?



# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.






○ இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வடக்கின் விஞ்ஞான கல்வியை மேம்படுத்துவோம்

11



கடந்த வாரம் உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியை கற்க விருப்பிருந்தும் வாய்ப்பற்ற மாணவர்கள் தொடர்பான சில விடயங்கள் தொடர்பில் பேச ஆரம்பித்திருந்தோம். அதில் விஞ்ஞானக் கல்வி வாய்ப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் கிடைப்பனவு மற்றும் தரமான திறன்மிக்க பாடசாலை ஆசிரியர்களின் கிடைப்பனவு தொடர்பில் சில விடயங்களை ஆராய்த்திருந்தோம். இது தொடர்பில் மேலும் சில காரணங்கள் தொடர்பில் இன்று சற்றுக் கவனம் செலுத்தலாம்.

**விஞ்ஞானத்துறைசார் தனியார் கல்வி நிலையங்களின் கிடைப்பனவு**

விஞ்ஞானத் துறைசார் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் வடக்கில் தனியார் கல்வி நிலையங்கள் கொண்டுள்ள வகிபாகம் விமர்சனங்களுக்கு அப்பால் ஏற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமானதொன்றாகும். தனியார் கல்வி நிலையங்கள் குறித்தும், அவற்றின் கற்பித்தல் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பொறிமுறைகள் என்பவை குறித்தும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் சூழலிலும் அவை வடக்கின் விஞ்ஞானக் கல்வியின் அடைவு மட்டத்தில் செலுத்தும் கனதியான தாக்கம் வரவேற்கத்தக்கதே. பல பாடசாலைகளில் உயர்தர விஞ்ஞானப்பிரிவுக்கு பொருத்தமான ஆசிரிய ஆளணி அற்ற நிலையில், அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் ஒரே நம்பிக்கையாகவிருப்பது தனியார் கல்வி நிலையங்களே. தனியார் கல்வி நிலையங்கள் ஒரு போட்டிமிகுந்த வியாபாரச் சூழலை ஒத்தவை எனும் அடிப்படையில் அங்குள்ள ஆசிரியர்களும் தமக்கான கேள்வியை அதிகரிக்கும் விதத்தில் தமது கற்பித்தல் ஆளுமையை விருத்தி செய்துள்ளதுடன் கற்பித்தலுக்காக செலவிடும் நேரமும் அதிகமாகவுள்ளது. அதுபோன்று மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளை உரிய முறையில் அளவிடுவதற்கான மதிப்பீட்டு நுட்பங்களையும் பல தனியார் கல்வி நிலையங்கள் கொண்டுள்ளமையும் அவதானிக்கத்தக்க விடயமாகவுள்ளது. இந்தப் பின்னணிகளில் தனியார் கல்வி நிலையங்கள் விஞ்ஞானக் கல்வியின் கற்றல் கற்பித்தலில் கனதியான வகிபாகத்தைக் கொண்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடிகின்றது.

இருந்தும் வடக்கில் விஞ்ஞானக் கல்விக்கான இத்தகைய தனியார் கல்வி நிலையங்களும் பெரு நகரங்களை அண்டியே அமைந்துள்ளன. கிராமங்களில் இத்தகைய உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கான தனியார் கல்வி நிலையங்கள் தட்டுப்பாடாகவேயுள்ளன. ஆனால் கிராமங்களில் தனித்தனி பாடங்களாக சில ஆசிரியர்கள் தனியார் வகுப்புக்களை நடத்துவதுடன் சில பொது அமைப்புக்கள் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் மாணவர்களின் நன்மை கருதி விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர்களுடனான குழுநிலை வகுப்புக்களை நடத்துகின்ற ஏற்பாடும் வடக்குக் கல்விப்புலத்தில் உள்ளது. இருந்தும் இத்தகைய வாய்ப்புக்கள் அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை.

> வடக்கில் விஞ்ஞானக் கல்விக்கான இத்தகைய தனியார் கல்வி நிலையங்களும் பெரு நகரங்களை அண்டியே அமைந்துள்ளன. கிராமங்களில் இத்தகைய உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கான தனியார் கல்வி நிலையங்கள் தட்டுப்பாடாகவேயுள்ளன.

விஞ்ஞானத் துறையை தமது உயர்தரத்துக்காக தெரிவு செய்யும் மாணவர்களின் முதன்மைத் தேடலாகவிருப்பது தமது வதிவிடத்துக்கு அருகில் பொருத்தமான தனியார் கல்வி நிலையம் அமைந்திருக்க வேண்டுமென்பதே. அதிலும் தாம் சாதாரண தரத்தில் கல்வி கற்ற தனியார் கல்வி நிலையத்திலேயே உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கான தனியார் வகுப்புக்கள் இருப்பது அவர்களுக்கு ஊக்க சத்தியாக அமைகின்றது. அவ்வாறு அமையப்பெறாத நிலையில் விஞ்ஞானக் கல்வியைத் தவிர்ப்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக தனியார் கல்வி நிலையங்களுக்கான கிடைப்பனவின்மையை காரணம் காட்டுவதை மறுத்து பேச முடியாத சூழ் நிலையேயுள்ளது. இருந்தும் இலங்கையின் தமிழ் மொழி மூலமான கல்வி கிடைக்கப்பெறும் பிரதேசங்களில் (வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்கள்) ஒப்பீட்டளவில் வடக்கில் விஞ்ஞானக் கல்விக்கான பொருத்தமான தனியார் கல்வி நிலையங்கள் இருப்பதும் விசேடமானதாகும்.

இந்த இடத்தில் கட்டுரையாளரின் முக்கியமானதொரு அவதானத்தைப் பதிவு செய்தாக வேண்டும். மலையகம் மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லீம் மாணவர்களை விஞ்ஞானக் கல்வியில் உட்புகுத்துவதில் அவர்களது அரசியல், கல்வி மற்றும் சமூகத் தலைவர்கள் மிகுந்த அக்கறையுடனுள்ளனர். அவர்கள் அதற்காக பல தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்படுகின்றனர். அவற்றுள் குறிப்பானதொன்று அப் பிரதேசங்களைச் சேர்ந்த விஞ்ஞானக் கல்வியைக் கற்கும் மாணவர்களை வடக்கு நோக்கி நகர்த்துதல் ஆகும். அதிலும் முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றும், கட்டாயமாக பாடசாலை வரவை உறுதிசெய்ய வேண்டிய மாண வர்களைக் கூட எது விதமான சவால்களுமின்றி பல நூறு கிலோமீற்றர்க ளுக்கு அப்பால் நகர்த்துகின்றார்கள். இதற்கு பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வித் துறை சார் அதிகாரிகளும் தமது மறைமுகமான ஆதரவை வழங்குகின்றனர். தமது சமூகத்தின் கல்வி மேம்பாடு எனும் ஒரு குடையின் கீழ் அவர்கள் திரள்வதால் இது சாத்தியமாகின்றது.

இந் நிலையில் வடக்கை மையப்பட்ட மாணவர்கள் தமக்கு பொருத்தமான தனியார் கல்வி நிலையம் கிடைக்கவில்லை என்பதைக் காரணம் காட்டி விஞ்ஞானக் கல்விக்குள் உள்நுழைவதை தவிர்க்கக் கூடாது. வார இறுதி நாள்களில் போக்குவரத்து வசதிகள் ஓரளவு உறுதிசெய்யப்பட்ட நிலையில் தொலைவில் உள்ள தனியார் கல்வி நிலையங்களை நாடுவதைச் சவாலான விடயமாக கொள்ளாது ஆக்கபூர்வமான வழிகளில் தடைகளை வெற்றி கொள்வது குறித்து எமது வடக்கு மாணவர்கள் சிந்திக்க வேண்டும்.

**தனியார்துறைக் கல்விக்கான அதிகரித்த கட்டணங்கள்**

விஞ்ஞானக் கல்விக்கான தனியார் துறையின் கட்டணங்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் வடக்குக் கல்விப் புலத்தில் உண்டு. போருக்கு முன்னர் பாடங்களுக்கான கட்டணங்களாக இருந்த கட்டண அறவீட்டு முறைமை தற்போது பாட அலகுகளுக்கான கட்டண அறவீட்டு முறையாக மாறியுள்ளமை மிகப் பெரும் சவாலான விடயம். அது போன்று தற்போது குறித்த ஒரு பாடத்துக்கான மாதாந்த கட்டணமும் 1000 ரூபாவை அண்மித்ததாகவுள்ளது.

அத்துடன் இக் கட்டணங்களுக்கு மேலதிகமாக கற்றல் துணைக் குறிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் குறித்ததொரு செலவை மாணவர்களும் அவர்கள் பெற்றோர்களும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பெரு நகரங்களில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையங்களை நோக்கி நகர்வதற்கான மேலதிக போக்குவரத்துச் செலவு சில மாணவர்களுக்கு தங்குமிட மற்றும் உணவுச் செலவு என்பவை அவர்களது குடும்ப பொருளாதார நிலமைகளுக்கு ஏற்புடையதாக வில்லை. அதிலும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் சமாந்தரமாக உயர்தரம் மற்றும் உயர்கல்வியை கற்கும் சந்தர்ப்பங்களில் கல்விக்கான செலவு என்பது அக் குடும்பத்தின் பொருளாதர்ர இயல்தகவு எல்லையை மீறியதாகவும் உள்ளது. அதிலும் கொடுமையான விடயம் தற்போது விஞ்ஞானக் கல்விக்கான பிரத்தியேக வகுப்புக்களுக்காக மணித்தியால கொடுப்பனவு முறையில் அறவிடப்படும் கட்டணங்களின் தொகை மனிதாபிமான எல்லைகளைத் தாண்டியதாகவுள்ளது. அதிலும் மொழி மூலங்களுக்கிடையில் கட்டணத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றமை, சமரசம் செய்ய முடியாத சவாலாகவேயுள்ளது. இதற்கு ஆசிரியர்கள் மட்டும் தான் காரணம் எனச் சொல்லிவிட முடியாது. அதற்குப் பின்னால் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவை தொடர்பில் ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கத்தை திசை திருப்பிவிடும் என்பதால் இங்கு அது தவிர்க்கப்படுகின்றது. எனவே விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டுக்கு பெரிதும் துணைசெய்யும் கட்டமைப்புக்களாகவுள்ள தனியார் கல்வி நிலையங்களின் கிடைப்பனவு, கல்வியில் சமத்துவம்எனும்கோட்பாட்டின் அடிப்படையிலும் நியாயமான கட்டணங்களின் அடிப்படையிலும் கிடைக்கத்தக்கதை உறுதிசெய்யும் பொறிமுறைகள் குறித்தும் சிந்திக்க வேண்டிய நிலையில் வடக்குக் கல்விப்புலம் உள்ளது. சிந்திப்போமா..? ■

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

## 1990 -1995




○ தில்லைநாதன் கோபிநாத்

2

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சுதேச மொழிகளில் நூல்களை அச்சிடும் செயற்பாடுகள் 1736இல் தொடங்கின. ஆயினும் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க அச்சு, பதிப்புச் செயற்பாடுகள் நடைபெற்றதாகத் தெரியவில்லை. குடியேற்ற ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் அல்லாமல் ஏனையோரும் அச்சகங்களை நிறுவுவதற்கான அனுமதி கிடைத்த பின்னரேயே குறிப்பிடத்தக்க அளவில் பதிப்புப் பணிகளைத் தொடங்க முடிந்தது. இந்த மாற்றம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே சாத்தியமானது.

யாழ்ப்பாணத்துக்கு அச்சகம் வந்த ஆண்டாக 1820ஆம் ஆண்டு அமைகிறது. அமெரிக்க மிசனரியின் முயற்சியாலேயே முதலாவது அச்சியந்திரமும் எழுத்துக்களும் யாழ்ப்பாணத்துக்கு வந்தன. 1816இல் யாழ்ப்பாணத்தில் மதம் பரப்பும் செயற்பாடுகளை ஆரம்பித்த அமெரிக்க மிசனரியினர், ஆரம்பத்தில் தமது மதப் பிரசுரங்களை தாள்களிலும் ஓலைச்சுவடிகளிலும் கையினால் எழுதி மக்களுக்கு வழங்கியே தமது பிரச்சாரங்களை மேற்கொண்டனர். அதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் நூல்கள், ஏட்டுச் சுவடிகளாகவே இருந்தன. சுவடி எழுதும் கலையும் பரவலாகக் காணப்பட்டது. ஆயினும் மதப் பிரச்சாரங்களை விரிவாக்கும் செயற்பாடுகளுக்குக் கையினால் எழுதுவது மிசனரியினருக்குப் போதுமானதாக இருக்கவில்லை. இதனால் கையினால் இயக்கும் அச்சு இயந்திரம் ஒன்றையும், அதற்கான ஆங்கில எழுத்துக்களையும் அவர்கள் தருவித்தனர். தமிழ் எழுத்துக்கள் இந்தியாவின் கல்கத்தாவிலிருந்து பெறப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்த மிசனரிமார் கேட்டுக் கொண்டபடி ஜேம்ஸ் கரற் (James Garret) என்ற ஒரு அச்சகர் 1820ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். ஆனால் அப்போது ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்த சேர் எட்வெட் பார்னசு (Sir Edward Barnes) இலங்கையில் அமெரிக்க மிசனரிமாரின் எண்ணிக்கை அதிகரிப்பதை விரும்பவில்லை. மூன்று மாதங்களுள் ஜேம்ஸ் கரற் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார். 1820 நவம்பரில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய கரற், முதலில் தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்துக்குச் சென்று, பின்னர் பம்பாய் சென்று, மராத்தி மிசனில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். யாழ்ப்பாணத்துக்கு அச்சியந்திரம் வந்து சேர்ந்தபோதிலும் அதனை இயக்க அச்சகர் இல்லாததால் பதிப்புச் செயற்பாடுகளைத் தொடங்க முடிய வில்லை. 1823ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதியன்று யாழ்ப்பாண சன்மார்க்க பிரசுரச் சங்கம் (Jaffna Religious Tract Society) என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட ஆகப் பழைய சன்மார்க்க புத்தக சங்கம் ஆகும். இதன் முதலாவது செயலாளராக வண ஜோசப் நைற் (Rev Joseph Knight) இருந்தார். சமயப் பிரசுரங்கள் மூலம் பரப்புரை செய்வதற்காகத் தொடங்கப்பட்ட அமைப்பென்ற போதிலும், ஆரம்பத்தில் அவர்கள் தாமாக அச்சுப் பணிகளைச் செய்யவில்லை. சென்னையிலிருந்து பெற்ற பிரசுரங்களை விநியோகிக்கும் பணிகளையே அவர்கள் ஆரம்பத்தில் செய்தனர்.

1825ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க மிசன் கொண்டு வந்த அச்சகத்தை நல்லூரில் சேர்ச் மிசனரியினர் செயற்படுத்த ஆரம்பித்தனர். யாழ்ப்பாண சன்மார்க்க பிரசுரச் சங்கத்தின் பதிப்புப் பணிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின. முதல் மூன்று ஆண்டுகளில் 1,002,800 பக்கங்களை இந்த அச்சகம் அச்சிட்டது. அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் பதிப்புச் செயற்பாடுகள் கிறித்தவ மதப் பிர சுரச் செயற்பாடுகளாகவே ஆரம்பிக்கப்பட்டன.

1831ஆம் ஆண்டில் வில்மற் கோட்டன் (Wilmot Horton) என்பவர் இலங்கையின் ஆளுநரானார். அவர் அமெரிக்க மிசனரிமீது பார்னசு விதித்திருந்த தடைகளை நீக்கினார். யாழ்ப்பாண அமெரிக்க மிசனரியினர் மீண்டும் தமக்கான அச்சகத்தை நிறுவுவதற்கான முயற்சிகளைத் தொடங்கினர். அவ்வகையில் 1834ஆம் ஆண்டில் ஈஸ்ற்மன் மைனர் (Eastman S. Minor) எனும் அச்சகர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் வந்தடைந்தார். சேர்ச் மிசன் நல்லூரில் வைத்திருந்த அச்சியந்திரமும் மீளப் பெறப்பட்டது. அந்த இரண்டு அச்சியந்திரங்களுடன் அமெரிக்க மிசன் அச்சகம் 1834ஆம் ஆண்டில் செயற்படத் தொடங்கியது. 1835ஆம் ஆண்டில் மட்டும் 3,383,500 பக்கங்கள் அச்சிடப்பட்டன. 1835இல் புத்தகம் கட்டும் நுட்பத்தைக் கற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. 1836ஆம் ஆண்டில் மூன்றாவது அச்சியந்திரம் வந்து சேர்ந்தது. மூன்று அச்சியந்திரங்கள், நூல் கட்டும் வசதிகள், மரச்செதுக்கலுக்கான உபகரணங்கள் என 1836ஆம் ஆண்டில் முழுமையான அச்சகமாக அமெரிக்க மிசன் அச்சகம் செயற்பட்டுவந்தது. 1838 இல் நான்காவது அச்சியந்திரமும் வந்து சேர்ந்தது. பதிப்புச் செயற்பாடுகள் மிகுந்த வேகமடைந்தன. 1834ஆம் ஆண்டில் நான்கு ஊழியர்களுடன் தொடங்கிய அச்சகம், அந்த ஆண்டு முடிவில் 8 ஊழியர்களுடன், அடுத்தடுத்த ஆண்டுகளில் 15, 40, 52 என அதிகரித்து, ஆறாவது ஆண்டு முடிவில் 81 ஊழியர்களைக் கொண்டிருந்தது. 1844இல் நான்கு வகையான தமிழ் எழுத்துக்களை இந்த அச்சகம் கொண்டிருந்தது. அச்சிடல், நூல்கட்டுதல் ஆகிய அனைத்துப் பணிகளும் அக்காலத்தில் கைகளால் செய்யப்பட்டன. இயந்திரச் செயற்பாடுகள் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் கிறித்த சமயப் பிரசாரப் பிரசுரங்களை அச்சிடுவதற்காகவே இந்த அச்சகம் தொடங்கப்பட்டபோதிலும், பின்னர் பாடநூல்களை அச்சிடும் பணிகளும் தொடங்கின. அமெரிக்க மிசனரியின் பாடசாலைகளில் பயன்படுத்துவதற்கான பெருமளவு பாடநூல்கள் அங்கு அச்சிடப்பட்டன. அகராதிகள் போன்ற ஏனைய நூல்களும் அச்சிடப்பட்டன. 1834 முதல் 1854 வரையான 21 ஆண்டுகள் காலத்தில் 171,747,198 பக்கங்களை அமெரிக்க மிசன் அச்சகம் அச்சிட்டது என்ற புள்ளிவிபரம் அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் வழங்கிப் பதிப்புப் பணிகளை முன்னெடுத்தனர் என்பதனை விளக்குவதாக அமைகிறது. இவற்றில் தமிழ் மொழியிலான பதிப்புச் செயற்பாடுகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது என்பது முக்கியமானது.

இந்த அச்சகத்தில் யாழ்ப்பாண சன்மார்க்க புத்தகச் .சங்கத்தினரின் பெருமளவு பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. அந்தச் சங்கத்துக்குக் காலத்துக்குக் காலம் இலண்டனில் இருந்தும் அமெரிக்காவில் இருந்து கிடைத்துவந்த நன்கொடைகள் இதற்காகப் பயன்பட்டன. இந்தச் சங்கத்தினர் 1823-1833 ஆண்டுகள் காலப்பகுதியில் 507,442 பிரசுரங்களையும், 1834-1855 ஆண்டுகள் காலப்பகுதியில் 2,929,220 பிரசுரங்களையும், 1856-1867 ஆண்டுகள் காலப்பகுதியில் 341,350 பிரசுரங்களையும் அச்சிட்டு விநியோகித்தனர்.

அமெரிக்க மிசனரிமாரின் அகராதிகள் போன்றவை யாழ்ப்பாண நூற் சங்க (Jaffna Book Society) வெளியீடுகளாகவும் பதிப்பிக்கப்பட்டன. 1841ஆம் ஆண்டில் உதயதாரகை இருமொழிப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 1,000 பிரதிகளும், பின்னர் 2,000 பிரதிகளும் என உதயதாரகை அச்சானது. யாழ்ப்பாண சன்மார்க்க பிரசுரச் சங்கம், யாழ்ப்பாண நூற் சங்கம், அமெரிக்க மிசன் அச்சகம், உதயதாரகை எனப் பல்வேறு அமைப்புக்களாக இயங்கினாலும், அடிப்படையில் இவை அனைத்தும் குறிப்பாக அமெரிக்க மிசனரியின் செயற்பாடுகளாகவே அமைந்தன. இவற்றில் பெரும்பாலான செயற்பாடுகள் கிறித்தவ சமயப் பரப்புரையையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

இந்தச் சமயப் பரப்புரைக்கு மாற்றான சைவ சமயச் செயற்பாடாக 1850ஆம் ஆண்டில் ஆறுமுகநாவலர், வித்தியாநுபாலன யந்திரசாலையை ஆரம்பித்தார். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அச்சியந்திரத்தை முதலில் நல்லூரில் இருந்த தனது வீட்டில் நிறுவிய நாவலர் 1851ஆம் ஆண்டில் அதனை வண்ணார்பண்ணைக்கு மாற்றினார். நாவலரது முயற்சியில் பெருமளவு சைவ சமய நூல்களும் பிரசுரங்களும் பாடநூல்களும் அதே போன்று கிறிஸ்தவ சமயப் பரப்புரைக்கு எதி ராக கண்டனங்களும் வெளிவரத் தொடங்கின.

“1820ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு முதன்முதலாக ஓர் அச்சகப் பணியாளர் வந்து சேர்ந்தார். அக்காலத்திலேயே முதலாவது அச்சு இயந்திரமும் எழுத்துக்களும் வந்து சேர்ந்தன. அந்த வகையில் இந்த மாதத்துடன் யாழ்ப்பாணத்தின் பதிப்புத்துறை தொடங்கி சரியாக 200 ஆண்டுகள் ஆகின்றன.

(இன்னும் பதிவோம்)

# சொற்சிலம்பம் போட்டி 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | 5 | 6 |
| 7 | | | 8 | 9 | | | |
| 10 | | 11 | | | | 12 | |
| | | 13 | | | 14 | | |
| | 15 | | | 16 | | | 17 |
| 18 | | | | | | 19 | |
| 20 | | | | 21 | 22 | | |
| | | | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..........................

..........................................................

கையொப்பம்:..................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. ஆபத்தைக் குறிக்கும் நிறம். 4. இது ஒரு மரம் 7. ஒன்றோடு ஒன்றைச் சேர் 8. தமிழன் இந்த இனத்தவன் 10. அழகான தன்மை 12. வாட்டு 13. பிடி. 14. மமதைக்கு காரணமான எண்ணம் 15. நல்ல 16. பன்னிரண்டு அங்குலம் 18. இறைவன். 19. மூன்றாம் எழுத்தாய் 'வு' சேர்ந்தால் பாம்பு என்றாகும். 20. சமுத்திரம் 21. பிரிபடும் உறுப்பு 23. ஒரு இனக் குழுமத்தினர்.

### மேலிருந்து கீழ்

1. மலை முடி 2. இடம் அல்ல 3. நவீனமானது 4. குரங்கு என்றும் பொருள்படும். 5. நொண்டி 6. சிகரம் 9. இது காந்தியின் வார்த்தை 11. அளவுக்கு அதிகமாகுதல் 14. இரத்தம் செல்வது இதன் வழியே. 15. அவித்த கடலை 16. அன்பு கொண்டவன். 17. ஒரு குலத்தவர் 18. சமய 19. தஞ்சமளிக்கின்ற 22. உடலை முன்புறம் வளை.

### சொற்சிலம்பம் போட்டி 08 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.தீவிரவாதி 5.வெகு 7.பாகு 8.கடலட்டை 9.வதிவிடம் 11.நாம் 12.பாம்பு 14.தூய 15.ஜோதி 16.பங்கஜம் 17.சாதி 18.தகர் 19.பசி 21.வில் 22.வல்லவன்

**மேலிருந்து கீழ்**

1.தீபாவளி 2.விகுதி 3.வாகடம் 4.திடம் 5.வெட்கம் 6.குடை 10.விநாயகர் 12.பாதி 13.புத்திரன் 14.தூங்கல் 15.சோம்பல் 16.பதவி 20.சில

**சொற்சிலம்பம் போட்டி இல.10**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**04.09.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 08இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**திருமதி ஸ்ரீ கிருஷாந்தி உமாபதிசிவம்**
18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்

**2 ஆம் பரிசு**
**அ. நிர்சாந்**
கலாநிதி வீதி, தும்பளை, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு**
**எம்.பி.றோச்**
அன்னை வேளாங்கன்னி வீதி, பள்ளிமுனை, மன்னார்.

**4 ஆம் பரிசு**
**லோஜிதன் திபியா**
கப்பங்கொடை துர்க்காபுரம், தெல்லிப்பழை.

**5 ஆம் பரிசு**
**திவ்ஜா ஈஸ்வரன்**
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

# சஞ்சீவி மாணவர் கழகம்

71



**பெயர்:** டி. டினிஸ்ரிகா
**முகவரி:** புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம், இருபாலை தெற்கு.
**பி. திகதி:** 2012.09.13
**பாடசாலை:** யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

72



**பெயர்:** ச.சாயீசன்
**முகவரி:** இல.23/4 புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2011.08.03
**பாடசாலை:** புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

73



**பெயர்:** ஞா. றெக்மன்
**முகவரி:** இல.345/8, பிரதான வீதி, கொழும்புத்துறை.
**பி. திகதி:** 2014.08.14
**பாடசாலை:** யா/ பரியோவான் கல்லூரி.

74



**பெயர்:** பு. கனிஷா
**முகவரி:** பெரியாட்டி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
**பி. திகதி:** 2010.06.03
**பாடசாலை:** யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

75



**பெயர்:** ப. அறிவழகன்
**முகவரி:** செட்டிவளவு ஒழுங்கை, இணுவில் மேற்கு, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2010.11.23
**பாடசாலை:** யா: இணுவில் மத்திய கல்லூரி.

76



**பெயர்:** தி.தனிஷ்
**முகவரி:** இல.106/1 கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2012.06.30
**பாடசாலை:** யா/சென்.பெனடிற் றோ.க.த.க. பாடசாலை.

- சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மாணவர்கள் தமது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.
- மாணவர் கழக அங்கத்தவர்களுக்கு எதிர்பாராத பரிசுகளும் சிறப்புச் சலுகை களும் வழங்கப் படவுள்ளன. (இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப் படும்)

77



**பெயர்:** ம.ஹரிஷ்
**முகவரி:** கந்த உடையார் லேன், புலோலி மத்தி, பருத்தித்துறை.
**பி. திகதி:** 2006.05.31
**பாடசாலை:** ஹாட்லிக் கல்லூரி

**சஞ்சீவி**

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..........................................
2. முகவரி: ..........................................

..........................................

3. பிறந்த திகதி: ..........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................
5. கற்கும் தரம்: ..........................................
6. தொலைபேசி இலக்கம்: ..........................................

.......................... ..........................

மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# வசீகரமான முகத்தோற்றத்துக்கு 'லெமன் ரீ'



'லெமன் ரீ' சருமத்தில் உள்ளே சென்று, அழுக்குகளை வெளியேற்றுகிறது. எலுமிச்சையிலுள்ள 'விற்றமின் சி' மற்றும் ஆன்டி ஆக்ஸிடென்ட் சருமத்தில் தங்கியிருக்கும் இறந்த செல்களை அகற்றுகிறது. சருமம் சுத்தமாக வும், சுருக்கங்கள் இல்லாமலும் பொலிவுடன் இருக்க லெமன் டீ உதவுகிறது.

**லெமன் டீ செய்யும் முறை:**
ஒரு கப் நீரில் ஒரு கரண்டி தேயிலையைப் போடுங்கள். நன்றாகக் கொதித்ததும், இறக்கி வடிகட்டுங்கள். அதனுள் எலுமிச்சை சாறைப் பிழிந்து விட்டால் 'லெமன் டீ' தயார். இந்த ரீயினால் முகத்தைக் காலை, மாலை என இரு வேளைகளிலும் கழுவ வேண்டும்.

**முகப்பருக்கள்:** இளம் வயதினருக்கு முகப்பரு இருந்தால், இந்த 'லெமன் ரீ', அதனை எதிர்த்துப் போராடும். முகத்தில் முகப்பருவால் வரும் தழும்பை மறையச் செய்யும்.

**கரும்புள்ளி:** முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகள் அற்றுப் போகச் செய்யும். முகத்தில் வெயிலால் ஏற்படும் கருமையையும் நீக்கிவிடும். முகம் சுத்தமாக மாசுமறுவின்றி இருக்க, இந்த லெமன் டீ அற்புதமாய் பலன் தரும்.

**எண்ணெய்ச் சருமம்:** காலை மாலை என இரு வேளைகளும் லெமன் டீயினால் முகம் கழுவினால், சருமத்தில் அதிகப்படியான எண்ணெய் சுரப்பதைத் தடுக்கலாம்.

**பற்கள் வெள்ளையாக:** உங்கள் பற்களில் விடாப்படியான மஞ்சள் கறை இருந்தால், லெமன் டீயை முயற்சித்துப் பாருங்கள். பல் விளக்கியதும், வாயில் சிறிது லெமன் ரீயை வைத்துக்கொண்டு, ஒரு நிமிடத்தின் பின்னர் கொப்பளியுங்கள். இப்படித் தொடர்ந்து செய்தால், எப்படிப்பட்ட மஞ்சள் கறையும் போய் விடும்.



# சொக்லெட் ஐஸ்கிறீம்

**பாவனையாளர் தொகை**
**10 முதல் 15 பேர் வரை**

**தேவையான பொருள்கள்**
ரின்பால் -1 ரின்
பால் மா 400 கிராம்
கொக்கோபவுடர் -
3 மேசைக் கரண்டி
சீனி 300 கிராம்,
தண்ணீர் - 4 ரீன் பால் குவளை அளவு,
வறுத்த,சிறு துண்டாக்கிய கஜூ - 100 கிராம்
சோடா - 4 கப்
ஜெலற்றின் -1 தேக் கரண்டி,
வனிலா - 2 மேசைக்கரண்டி,
கொதிநீர் -அரை கப்



**செய்முறை**

ஜெலற்றினை அரை கப் கொதி நீரில் போட்டு நன்றாகக் கரைக்கவும். உரிய பாத்திரத்தில் ரின்பால்,பால்மா கொக்கோ பவுடர்,சீனி ஆகியவற்றை போட்டு நன்றாக கலக்கிய பின்னர் தண்ணீர், சோடா பானம் என்பவற்றை பாத்திரத்தில் விட்டு நன்கு கரையும் வரை கரைக்கவும். பின்னர் இக் கலவையில் ஜெலனரின் கலவை,வனிலா என்பவற்றை விட்டு சேர்த்து நன்கு அடித்த பின் (Beater),குளிர்சாதனப் பெட்டியில் (Freezer இல்)சுமார் 3 மணித்தியாலயங்கள் வரை வைக்கவும்,பின்னர் எடுத்து மீண்டும் நன்றாக அடித்து மூடி .குளிர்சாதனப் பெட்டியில் வைத்தல் வேண்டும். இறுகிய பின்னர் ஐஸ்கிறீம் பரிமாறும் கிண்ணங்களில் நிரப்பி சொக்லெட் சோவை மேலே ஒரு கரண்டியளவு ஊற்றி வறுத்த கஜூ தூளைத் தூவிய பின்னர் விரும்பியவாறு பரிமாறலாம்.

**குறிப்பு:** திரவத் தன்மையான பால்,நீர் ஆகியவற்றை முதலில் நன்றாகக் கலக்க வேண்டும்,பின்னர் பாத்திரத்தை சிறிது சூடாக்க வேண்டும்.வெப்பநிலை 50.சி ஐ அடைந்ததும் திண்மத் தன்மையான மூலப் பொருள்களை இதனுள் இட்டு கலக்க வேண்டும். பின்னர் 60.சி வெப்பநிலையில் 30 நிமிடங்கள்வரை சூடாக்க வேண்டும். அதன் பின்னர் பதத்துக்கு வர வைத்தல் வேண்டும். இறுதியில் குளிர்சாதனப் பெட்டி யில் 3 மணித்தியாலங்கள் வரை வைத்தல் வேண்டும்.

**ஜெ.மனோ ரஞ்சிதம்,**
பழம்வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...
**எழுதி அனுப்புங்கள்**



# வித்துவான் பதில்கள்!



வித்து, என் காதலி அடிக்கடி "மிஸ் கோல்" கொடுக்கிறாள். எதற்காக?

**தி.ஆரூரன், பரந்தன்**

ஒன்று, மிஸ்ஸை மிஸின் ஆக்கும்படி தூண்டுகிறாள். அல்லது தனது தேவைக்கு உங்களைச் செலவளிக்க வைக்கத் தயார்ப்படுத்துகிறாள்.



## ஐயா, வித்துவான் என்பதன் பொருள் என்ன?

**யோ.வைஷாலினி, கோண்டாவில்**

வித்துவம் நிறைந்தவர் வித்துவான்.
சில பதில்கள் வான் நோக்கி இருந்ததால்தான், இப் பெயர் வைக்கப்பட்டதாக எவராவது சொன்னால் நீங்கள் நம்பாதீர்கள்.

**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077 316 5555



## வித்துவானே! வேட்பாளர் ஆவதற்குத் தகுதி என்ன?

**புலோலியூர் வேல்நந்தன்**

எந்தத் தகுதியுமே வேண்டாம். எந்தக் கட்சியையும் தனித்து இயக்கும், தனித்து முடிவெடுக்கும் ஒருவர் தன்னிகர் இல்லாத் தலைவராக, வலக்கையாக கட்சிக்குள் இருப்பார். அந்த வலக்கையைக் கண்டறிந்து அதன் அல்லக்கை ஆகிவிட்டீர்கள் என்றால் எல்லாத் தேர்தல்களிலும் நீங்கள் வேட்பாளர் ஆகலாம். மாநகரசபை உறுப்பினராகலாம், நாடாளுமன்ற உறுப்பினராகலாம், ஏன் மந்திரியாகக் கூட ஆகலாம். கல்வித்தகமை பற்றிக் கவலைப்பட வேண்டாம். அமைச்சராக ஆனதற்குப் பிறகு க.பொ.த சாதாரண தரத்தில் விடுபட்ட பாடங்களுக்கு மீண்டும் பரீட்சைக்குத் தோற்றலாம்.

**வித்தூ... ஆண்கள் பெண்களைத் திருமணம் செய்வதற்கு முன்பாக எத்தனையோ சோதனைகள் எல்லாம் வைக்கிறார்கள். ஆடச் சொல்கிறார்கள், பாடச் சொல்கிறார்கள், தேனீர் கொடுத்துவிட்டுச் செல்லும் போது நடையைப் பார்க்கிறார்கள். ஆண்களுக்கு எந்தப் பரிசோதனையும் இல்லையா?**

**யோ.எழிலரசி, சண்டிலிப்பாய்**

அந்தக் காலத்தில் திருமணம் நிச்சயிக்கப்படுபவரை மிக நுட்பமாகச் சோதிக்கும் வழக்கம் தமிழகத்தில் இருந்தது. கண்ணன் தன்னைப் பெண் பார்க்க வரும்போது கண்ணனின் சகோதரியே தனக்குச் சேலை கட்டிவிட்டதாக ஆண்டாள் கனவு கண்டு பாடினாள். ஆனால் இங்கே ஒரு பெண் இன்னொரு பெண் மூலம் முழுமையாகப் பரிசோதிக்கப்படுகிறாள். இது போலத் தமிழகத்தின் சில பகுதிகளில் ஆண்களைப் பரிசோதிக்கும் வழக்கம் இருந்தது. மணமகள் குடும்பத்துக்குரிய நாவிதர் திருமணத்தின் முன் மணமகனுக்கு முழுமையாகச் சவரம் செய்து விடுவார். சவரக்கத்தி படும்போது ஏற்படும் 'அசுமாத்தங்கள்' தொடர்பாக மணமகள் பகுதிக்கு உடனேயே தகவல் கிடைக்கும்.






# கடவுளும், சாத்தானும்!

ராஜ்சிவா

நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லட்டுமா? வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டின்படி, மனிதனுக்குக் கடவுள் அறிமுகமாகிய அடுத்த கணத்திலேயே சாத்தானும் அறிமுகமாகிறான். பைபிளின் முதல் அதிகாரத்தின் முதல் மூன்று அத்தியாயத்திலேயே இவை நடந்துவிடுகின்றன. மனிதனைப் பொறுத்தவரை, கடவுள் என்னும் நேராற்றல் அறிமுகமாகிய கணத்திலேயே, எதிராற்றலும் அறிமுகமாகிவிடுகின்றது. இப்படித்தான் பேரண்டத்தின் ஆரம்ப நிகழ்வும் நடந்ததாக அறிவியல் சொல்கின்றது. எப்படி? சொல்கிறேன். இதற்கு, 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததாகக் கருதப்படும் சம்பவத்தை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

இன்றிருக்கும் அறிவியலின்படி, உண்மையாகவே நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவம் அது. அந்தச் சம்பவத்தினுள் நுழையும் போது, சற்றுக் கவனமான உள்வாங்கல் தேவைப்படும். அதனால், மனைவிக்கு வெங்காயம் நறுக்கிக்கொடுக்க வேண்டிய கணவர்மார், வெட்டிக் கொடுத்துவிட்டு வாருங்கள். அடிக்கடி கோப்பி கேட்கும் கணவர்மாரது வாய் வெந்துபோகுமளவு சூட்டுடன் கோப்பியைக் கொடுத்துவிட்டு மனைவிகள் வரலாம். இனி நிதானமாகப் படிக்கத் தொடங்குங்கள். முடிவில்லா எடையும், முடிவிலி அழுத்தமும் கொண்ட நான்கு அடிப்படை விசைகள் ஒன்றுசேர்ந்து, நம்பவே முடியாத சிறுபுள்ளியாக ஒடுங்கியிருந்தன. காலமோ, நேரமோ அப்போது அங்கில்லை. இடம்கூட அங்கில்லை. அதுவொரு பூச்சியப் பரிமாண நிலை. பூச்சியக் கணமும் கூட. அந்தப் பூச்சியக் கணத்திலிருந்து தான் நமக்கான நேரமும், காலமும் ஆரம்பிக்கிறது. இனி வரப்போகும் ஒவ்வொரு நுண்ணிய கணத்திலும், எமது பேரண்டத்தின் வெளியும் இணைந்து விரியப் போகிறது. காலமும், வெளியும் சேர்ந்தே விரிவதால், அவற்றைத் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்காமல், 'காலவெளி' (Space time) என்னும் ஒரே பொருளாகக் கருதினார் ஐன்ஸ்டைன்.

அறிவியல் தொடர் 3




### காலமில்லாக் காலம்

அதையெல்லாம் பின்னர் பார்க்கலாம். இப்போது, நமக்குத் தேவை எந்த விரிவும் நடக்காத பூச்சியக்கணம் மட்டுமே. அந்தப் பூச்சியக் கணத்தை இன்றுள்ள காலக் கணக்கின்படி 10^36 நொடி என்று எடுத்துக் கொள்வோம். அதாவது, 1 உடன் 35 பூச்சியங்களை இணைத்து வரும் இலக்கத்தின் ஒரு பங்கு நொடியின் அளவுகாலம். அதுவே, எமது பூச்சியக் கணம் எனக் கொள்வோம். அதற்குமுன் எந்தக் காலமும் இல்லை. அந்தக் கணத்தில், நான்கு விசைகளின் ஆற்றல் அனைத்தும் பேரொளியாகத் திரண்டு காணப்பட்டது. அடுத்து வந்த 1/10000 நொடியில், அதாவது, 10^32 ஆவது நொடியில், அந்த ஆற்றலுடைய பேரொளி, ஒருவகைக் குழம்பாக மாறத்தொடங்கியது. அந்தக் குழம்பின் உருவாக்கத்துக்கு ஒருவகை நுண்துகள்களே காரணமாக இருந்தன. 'குவார்க்' (Quark) என்னும் நுண்துகள்களே அவை. குவார்க்குகளினால் உருவான அந்தக் குழம்பையே 'ஆதிக் கூழ்' (Primordial soup) என்கிறார்கள். 'குவார்க் கூழ்' (Quark soup) என்றும் சொல்வார்கள். உருவான குவார்க் கூழ் சாதாரணமாக உருவாகவில்லை. கடவுளும், சாத்தானும்போல, ஒன்றையொன்று எதிர்த்தன்மை கொண்ட இருவகைக் குவார்க்குகளாக உருவாகின. நேரேற்றம் கொண்ட குவார்க்குகளும் (up quark), எதிரேற்றம் கொண்ட குவார்க்குகளுமாக (anti up quark) உருவாகின. அதாவது, குவார்க் துகள்களும், எதிர்க் குவார்க் துகள்களும் தோன்றின. ஒருமைப் புள்ளியாக இருந்தது இப்போது கிட்டத்தட்ட 2 மீற்றர் அளவுள்ள நுண் அண்டக் கோளமாக மாறியது. ஒரு பேரண்டத்தையே நிரப்பக்கூடியளவு துகள்கள் அங்கே, அப்போதே உருவாகியிருந்தன.

அப்போது, துகள்களின் நெருக்கத்தால் ஏற்பட்ட மாபெரும் அழுத்தத்தால், பிரமாண்டமான வெடிப்பாக அண்டம் விரிவடைந்தது. 10^6 வது நொடியில் பேரண்டமாக அது விரிந்து காணப்பட்டது. இந்த நேரக் கணக்கெல்லாம் மனிதனால் உணர்ந்து கொள்ளவே முடியாத மீச்சிறு கணங்களாகும். கண் சிமிட்டும் நேரமென்பதெல்லாம் இங்கு மாபெரும் அளவீடு. விரிந்த அண்டமெங்கும் சிறு இடைவெளியில்லாமல் குவார்க் நுண்துகள்களால் நிரப்பப்பட்டிருந்தது. ஆண், பெண்ணாக உயிரினங்களைப் படைத்தது போல, இரவு பகலென இயற்கையைப் படைத்தது போல, அந்த நுண்துகள்களும் நேர்த்துகள், எதிர்த்துகள்கள் என்னும் இருவகைத் துகள்களாக உருவாகியிருந்தன. ஆனால், இரண்டுமே சொல்லிவைத்தது போலச் சம அளவில் உருவாகியிருந்தன. அப்போதுதான் அந்த ஆச்சரியம் நடந்தது.

### உலகம் பிறந்தது

பேரண்டத்தை உருவாக்கி, பூமியையும் அதில் வாழ்வதற்கு மனிதனையும் உருவாக்க வேண்டுமென்பதுதான் இயற்கையின் முடிவு என்றால், இப்படித் துகள்களும், எதிர்த்துகளுமாக நிரம்பியிருக்கும் நிலை சரியே வராதில்லையா? அதனால், அவற்றை அழித்து, மனிதனும், உயிரினங்களும் உருவாவதற்கான சாத்தியங்களைச் செய்ய ஆரம்பித்தது இயற்கை. அதனால், நம்பவே முடியாத அந்த நிகழ்வு அங்கு நடந்தேறியது. அறிவியலில் மிகுந்த பயன் தரக்கூடிய ஆச்சரிய நிகழ்வு அது. அளவில் சமமாக இருந்த துகள்களும், எதிர்த்துகள்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, பெரும் ஆற்றலை வெளியிட்டபடி ஒன்றையொன்று அழித்து, இல்லாமல் போயின. நேர்த்துகள்களும், எதிர்த்துகள்களும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து, தாமாகவே அழியத் தொடங்கின. பேரண்டம் முழுவதும் பரவியிருந்த அனைத்துத் துகள்களும் இல்லாமல் அழிந்து, வெறும் அண்டமாக மாறத் தொடங்கியது. இப்படியே இவையெல்லாம் அழிந்துபோனால், எதுவுமே இல்லாத வெற்றண்டமாகியிருக்கும். ஆனால், அப்படி நடக்கவில்லை. யார் வகுத்த வழியோ, யார் விதித்த விதியோ, 96 சதவீதமான (96%) துகள்கள் அழிந்துபோக, நான்கு சதவீதமான நேர்த்துகள்கள் அழியாமல் எஞ்சின. அந்த எஞ்சிய நான்கு சதவீதமான துகள்களாலேயே, இன்றுள்ள உடுக்கள் (நட்சத்திரங்கள்), உடுத்திரள்கள் (கலக்ஸிகள்), கருந்துளைகள், கோள்கள் என எல்லாம் தோன்றின. அந்த நான்கு சதவீதத் துகள்களிலேயே இவ்வளவு பிரமாண்டமான பொருட்களெல்லாம் தோன்றியிருந்தால், தொண்ணாற்றாறு சதவீதமும் அழியாமல் இருந்திருந்தால், அவற்றால் எவ்வளவு தோன்றியிருக்க முடியும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

### எங்கே .. எங்கே..?

ஒரு உடுவுக்குக் (நட்சத்திரத்துக்குக்) கைக்கெட்டும் தூரத்திலேயே அடுத்த உடு உட்கார்ந்து கொண்டிருக்கும். அண்டம் முழுவதும் உடுக்கள் மோதிமோதிச் சிதைந்தபடி நெருக்கமாக, அசைய முடியாமல் காணப்படும். அப்படியொரு நிலையில், பூமி எப்படித் தோன்றுவது? மனிதனும், உயிரினங்களும் எப்படி உருவாவது? எல்லாமே 'அம்போ'தான். ஆனால், இயற்கைக்கென ஒரு கணக்கு இருக்கிறது. அது கணிதத்தின் அடிப்படையில் இயங்குவது. அதன் கணக்கு ஒருபோதும் தப்பியதில்லை. அப்போதும் தப்பவில்லை. நான்கு சதவீத அண்டத்தை எங்கும் போகாமல் தன்வசமே பிடித்து வைத்துக் கொண்டது. அதுசரி, நான்கு சதவீத நேர்த்துகள்களால் இன்றுள்ள அண்டம் உருவாகியிருந்தால், அதற்குச் சமமான இன்னுமொரு நான்கு சதவீத எதிர்த்துகள்களும் இருந்திருக்க வேண்டுமல்லவா? அவை இருந் திருந்தால், இன்றிருக்கும் நான்கு சதவீத அண்டத்தையும் அழித்திருக்குமல்லவா? ஏன் அழிக்கவில்லை? இப்படி நான்கு சதவீதம்தான் எப்படி மிஞ்ச முடியும்? சமமான அளவுகளில் இரண்டுவகைத் துகள்களும் தோன்றியிருந்தால், அவை இரண்டுமே சமமாகவே அழிந்துதானே போயிருக்க வேண்டும்? இப்போதுள்ள அண்டம் உருவாவதற்கு அடிப்படையான நேர்த்துகள்கள் மட்டும் எஞ்சியிருப்பது ஆச்சரியமல்லவா? அந்த நான்கு சதவீத எதிர்த்துகள்களும் எங்கே போயின? இந்தக் கேள்விதான், பேரண்ட இரகசியத்தின் அடிப்படையாக இருந்துகொண்டு அறிவியலாளர்களை ஆட்டிப்படைக்கிறது. அவை எங்கு போயிருக்கலாம் என்பதற்கான காரணங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய கோட்பாடுகளாகச் சிலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

### இன்னும் விலகாத மர்மம்

இந்தக் கோட்பாடுகளின் முடிவுகளில் ஈர்ப்புவிசையின் அடிப்படையும் மாட்டிக் கொண்டிருக்கிறது. இன்றுவரை அறிவியலாளர்கள் ஈர்ப்புவிசை என்றால் என்னவென்று சொல்லவே முடியாமல் தவிக்கிறார்கள். இந்தக் கோட்பாடுகளின் உண்மைகள் ஒருநாள் அவிழ்க்கப்படும். அப்போது ஈர்ப்புவிசை என்றால் என்னவென்றும் தெளிவாகும்.

எதிர்த்துகள்கள் எங்கே என்று கேட்கப்படும் கேள்விக்குப் பதிலாக மூன்று முக்கியக் கோட்பாடுகள் சொல்லப்படுகின்றன. "துகள்களால் உருவாக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் அண்டமெங்கும் பரவிக் காணப்படுகின்றன. பெரும் இடைவெளிகளுடன், தொலை தூரங்களில் அவை அமைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நம்மால் அவதானிக்க முடிகிறது. எஞ்சிய நான்கு சதவீத எதிர்த்துகள்களாலும் பொருட்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். அப்படி உருவான எதிர்ப்பொருட்களும் அண்டவெளியெங்கும் பரவியிருக்கலாம்" என்று மூன்று கோட்பாடுகளில் ஒன்று சொல்கிறது. 96 சதவீத வெறுமையாக இருக்கும் அண்டத்தில் அந்த நான்கு சதவீத எதிர்ப்பொருட்களுக்கா இடமில்லாமல் போய்விடும்? எதிர்க் கோள், எதிர் உடு, எதிர் உடுத்திரள், எதிர்க் கருந்துளை, எதிர்க் குவேசார் என்று அவையும் அண்டத்தின் ஏதோவொரு மூலயில் இருக்கலாம் என்கிறது அந்தக் கோட்பாடு.

நாம் காணக்கூடிய அண்டமென்பதே பேரண்டத்தின் மிகமிகச் சிறிய பகுதிதானே! எஞ்சியிருக்கும் முடிவில்லாப் பேரண்டத்தில் அவை எங்கேயாவது இருக்கலாம் அல்லவா? ஆனால், அதற்கான சாத்தியம் மிகக் குறைவென்று சொல்கிறார்கள். எங்கேயாவது எதிர்க் கோள்கள், எதிர் உடுக்கள் இருக்கின்றனவா என்று தேடித் தேடிச் சலித்துவிட்டோம். இதுவரை அப்படியொன்றும் கண்ணில் படவில்லை. இருந்தால், நிச்சயம் கண்டுபிடித்திருப்போம் என்றே சொல்கிறார்கள். அதனால், இந்தக் கோட்பாட்டுக்கான சாத்தியம் சற்றுக் குறைவுதான். ஆனால், ஏனைய இரண்டு கோட்பாடுகளும் கிட்டத்தட்ட ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவே இருக்கின்றன. அதில் ஒரு கோட்பாட்டின் விளைவு, ஸ்டீபன் ஹக்கிங் அவர்களின், கருந்துளைகள் வெளிவிடும் 'ஹக்கிங் கதிர்வீச்சு' (Hawking radiation) கொள்கையுடன் ஒத்துப்போகிறது. அவை என்ன கோட்பாடுகள்?

(தொடரும்)

# குப்பைபுரமாக மாறிக்கொண்டிருக்கும் நல்லிணக்கபுரம்

○ றொசானி மனோரஞ்சன்
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





யாழ்ப்பாணம், கீரிமலைப் பகுதியில் அமைந்துள்ள நல்லிணக்கபுரம் என்ற கிராமம், யுத்த காலத்தின் பின்னர் முகாம்களில் இருந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு கிராமம். இருபது வருடங்களுக்கு மேலாக முகாம் வாழ்க்கையை வாழ்ந்த மக்களுக்கு புதிய திட்டத்தின் ஊடாக வீட்டுத் திட்டத்தை அரசாங்கம் வழங்கியிருந்தது. குறித்த பிரதேசத்திலுள்ள மக்களின் வாழிடங்களுக்கு நடுவே தான், வலி. வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்பட்ட குப்பைகளும் கொட்டப்படுகின்றன. இதனால் நல்லிணக்கபுரம் தற்போது குப்பைபுரமாக மாறி, நாறிக் கொண்டிருக்கிறது.

வலி. வடக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிப்பட்ட குப்பைகள் அனைத்தையும் இங்கு கொட்டுவதால் நினந்தோறும் குறித்த பிரதேச மக்கள் சுகாதாரப் பிரசசினைகளுககு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. இதைப் பற்றி பல அரசியல்வாதிகளிடமும், உரிய அதிகாரிகளிடமும் பலதடவைகள் முறையிட்டும் தமக்கு எந்த பலனும் கிடைக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனப்படுகின்றனர்.

> குப்பைகளை இங்கு கொட்டுவதனால் இங்குள்ள சிறுவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றார்கள், இவ்வாறு நோய்வாய்ப்படுகின்றபோது இன்றைய சூழ்நிலையில் கொரோனா தாக்கிவிடுமோ என்கின்ற பீதியுடனே வாழ வேண்டி இருக்கின்றது. நாங்களும் எங்களுடைய பிரச்சினையைச் சொல்லிச் சொல்லியே சலித்துப் போய்விட்டோம்.
>
> – தாயொருவரின் சலிப்பு

இங்கே குப்பைகள் கொட்டப்படுவது காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான காணியில் தான். அரசாங்கம் எம்மை இங்கு மீளக் குடியமர்த்திவிட்டு , குடியிருப்புகளுக்கு மத்தியில் குப்பைகளையும் இங்கே கொட்டுவது எவ்விதத்தில் நியாயமாகும் என குறித்த பகுதியிலுள்ள மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

“ஒரு நாளைக்கு சராசரியாக மூன்று டிராக்டருக்கும் குறையாத வகையில் குப்பைகளை வலி. வடக்கு பிரதேச சபையினர் கொட்டி வருகின்றனர். அவர்கள் மாத்திரமன்றி இராணுவத்தினரும் தினந்தோறும் உணவு மிகுதிகளையும் இங்கு கொட்டுகின்றனர். நாங்கள் வரமுன்னர் இங்கே எவரும் குப்பைகளைக் கொட்டியிருக்கவில்லை.எங்களை இவ்விடத்தில் குடியமர்த்தி மூன்று மாதங்களின் பின்னரே குப்பைகளைக் கொட்ட ஆரம்பித்தார்கள். இதனால் எங்களால் நிம்மதியாக இங்கு வாழ முடியவில்லை. குப்பைகளைக் கொட்ட வேண்டாம் என்று பலமுறை முறையிட்டும் எங்களின் குரல் அவர்கள் காதுகளில் விழவில்லை. இங்குள்ள அனைவரும் கையெழுத்திட்டு உரியவர்களிடம் பல மனுக்களைச் சமர்ப்பித்தோம். அதுமட்டுன்றி இதற்கு எதிராக பல முறை போராட்டம் கூட நடத்தியிருந்தோம். எங்களுக்கான நியாயம் இன்னும்கிடைக்கவில்லை.”என்று குற்றம் சாட்டுகிறார் இங்குள்ள குடும்பப் பெண் ஒருவர். அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இன்னும் ஆவேசத்துடன் “ மலக்கழிவுகளிலிருந்து விலங்குகளின் மீதிக் கழிவுகள் வரை இங்கு கொட்டுகினறனா. அதுமடடுமனறி தெல்லிப பழை மருத்துவமனைக் கழிவுககள் கூட இங்கேதான் தஞ்சமடைகின்றன. குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் இருந்து வெறும் நூறு மீற்றருக்குள்ளேயே எங்கள் குடியிருப்புகள். இதனால் குப்பைக் கழிவுகள் காற்றுடனே அடித்து வரப்பட்டு எங்கள் வீடுகளுக்குள் புகுந்து கொள்கின்றன. சாப்பிட உட்கார்ந்தால் அப்போதுதான் துர்நாற்றம் வீசும் கழிவுகளைக் கொண்டு வந்து கொட்டுவார்கள். பிறகு எப்படி நிம்மதியாகச் சாப்பிட முடியும்?” என்று கேட்கிறார்.

”மழைக் காலங்களில் எங்களுடைய நிலைமை இன்னும் மோசமாகி விடும். இலையான் மற்றும் நுளம்புகளின் தொல்லை அதிகமாகவே இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நுளம்பு வலைகளைக் கொண்டே உணவுகளை மூடுகின்றோம். உக்கிய பொருட்கள், உக்காத பொருட்கள் எல்லாவற்றையும் ஒன்றாகவே கொட்டுகின்றனர். நிறைய பிளாஸ்டிக் போத்தல்களையும் இங்கு கொட்டுகின்றார்கள். இதைப் பற்றி உரிய அதிகாரிகளிடம் கூறினால் “நீங்களே தரம் பிரித்து தாருங்கள். நாங்கள் வேறு இடத்தில் கொட்டுகின்றோம் ” என்று பொறுப்பற்ற வகையில் பதிலளிக்கின்றனர். அப்படி கூறுபவர்களால் இந்தக் குப்பை கொட்டும் இடத்தில் ஒரு நொடிகூட சாதாரணமாக நின்று பேச முடிவதில்லை. இங்கிருப்பவர்களும் மனிதர்கள்தான் என்கின்ற எண்ணம் ஒரு துளி கூட எந்த அதிகாரிக்கும் வருவதில்லை. எங்களுடைய கண்ணீருக்கும் மதிப்பில்லாமலேயே போய்விட்டது” இப்படிக் கண்ணீரோடு கூறுகிறார் குடும்பத்தலை வர் ஒருவர்.

“குப்பைகளை இங்கு கொட்டுவதனால் இங்குள்ள சிறுவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றார்கள். இவ்வாறு நோய்வாய்ப்படுகின்ற பொழுது இன்றைய சூழ்நிலையில் கொரோனா தாக்கிவிடுமோ என்கின்ற பீதியுடனே வாழ வேண்டி இருக்கின்றது. எங்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதாக கூறிக்கொண்டு நிறைய பேர் வருகின்றார்கள். நாங்களும் எங்களுடைய பிரச்சினையை சொல்லிச் சொல்லியே சலித்துப் போய்விட்டோம்.”தாயொருவரின் சலிப்பு இது.

“தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினையை வெளிப்படுத்தியும், தங்களுக்கான நீதி கிடைக்கவில்லை என்கின்ற ஆதங்கமும் வெறுப்பும் அவர்களிடம் இருந்ததை அந்தப் பகுதி மக்களுடனான உரையாடல்கள் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. இங்கு மீதமுள்ள உணவுக் கழிவுகளை கொட்டுவதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து விட்டது என்றும் அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். குப்பை கொட்டுவதற்கு எதிராக பல முறை முறையிட்டும் தமக்கான நீதி கிடைக்கவில்லை என்கின்ற ஆதங்கத்தில் குப்பை கொட்டும் இடத்திலுள்ள கதவின் பூட்டைக் கூட மக்கள் உடைத்துவிட்டனர். இதனால் இங்குள்ள சிறுவர்கள் குப்பைகளோடு வரும் பிளாஸ்டிக் போத்தல்களை எடுப்பதற்காக அதற்குள் நுழைவதையும், குப்பைகள் நடுவே விளையாடுவதையும் கண்டு அதிர்ச்சி அடைந்தோம். இப்படி குப்பைகளுடனான வாழ்வு இந்தப் பகுதி மக்களை விரைவில் நோய்ப்படுக்கையில் கூண்டோடு வீழ்த்தி விடக்கூடும். எனவே குப்பைபுரமாக மாறிக்கொண்டிருக்கும் நல்லிணக்கபுரத்து மக்களைப் பாதுகாக்க உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும். இவர்களின் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படாவிடின், எதிர்காலத்தில் இந்தக் குப்பைமேடுகள் பாரதூரமான பின்விளைவுகளை உண்டுபண்ணிவிடக்கூடும். ■



ராஜ்குமார்

# பிழைச்சுப் போன அமைச்சு கனவுகள்

நாட்டின் 9 ஆவது நாடாளுமன்றம் கூடி விட்டது. அதற்கான அமைச்சரவையும் அறிவிக்கப்பட்டு, முதலாவது அமைச்சரவை கூட்டமும் நடைபெற்று முடிந்து விட்டது. ஆனால் இந்த அமைச்சர் நியமனங்களில் ஏற்பட்ட குளறுபடிகள் பற்றி முணுமுணுப்புகளும், சலசலப்புக்களும் இப்போது கிளம்பியுள்ளன. தமக்கும் ஏதாவது ஒரு அமைச்சுப் பதவி கிடைக்கும் என்று ஆவலோடு காத்திருந்த பலர் கழற்றி விடப்பட்டிருக்கிறார்கள். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக கனவு கண்ட பலருக்கு இராஜாங்க அமைச்சர் பதவியே கிடைத்திருக்கிறது.

அதிலும் அமைச்சுப் பதவிகளில் தரமானவற்றையெல்லாம் ராஜபக் ஷக்கள் தங்களுக்குள் அள்ளி எடுத்துவிட்டு, மிஞ்சிய தம்பிடி பெறாத அமைச்சுக்களை ஏனையவர்களுக்கு கிள்ளித் தெளித்திருப்பதாக புகைச்சல்கள் கிளம்பியிருக்கின்றன. ஏற்கனவே ராஜபக் ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் அமைச்சரவையில் இருக்க, உதிரியாக பஸில் ராஜபக் ஷவும் அடுத்த சில வாரங்களில் அமைச்சுப் பொறுப்பை ஏற்பாரெனச் சொல்லப்படுகிறது. இதனால் அமைச்சர்கள் மத்தியில் இன்னும் கடுப்பேற்றம் உச்சத்துக்குப் போயிருக்கிறது.

## பதவி கிடைத்தும் பயனில்லையே

முஸ்லிம் தரப்பில் தேசியப் பட்டியல் மூலம் தெரிவான அலி சப்ரியை தவிர வேறு எவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. இது தவிர லங்கா சமசமாஜக் கட்சியினரும், தமது தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கு அமைச்சரவை அஸ்தஸ்துள்ள அமைச்சு ஒன்று கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஏமாற்றம்தான் அவர்களுக்கும் மிஞ்சியது.

மறுபக்கம் அமைச்சுப் பதவி கிடைத்தவர்களுக்கும் முழுமையான சந்தோஷம் கிடையாது. ராஜபக்சக்கள் மிச்சம் விட்ட அமைச்சுக்கள் தானே அவர்களுக்கு கிடைத்தன. அதிலும் தந்திருக்கின்ற அமைச்சு பதவிகள் எதிர்காலத்தின் கண்காணிக்கப்படுமாம். அரசாங்க வேலைத் திட்டங்களுக்கான நடைமுறை வகுத்தல்,அவற்றுக்காக வழங்கியுள்ள பங்களிப்பு ,அவற்றை பூர்த்தி செய்தமை ,அடைந்துள்ள முன்னேற்றங்கள் என்பவை குறித்து எதிர்வரும் ஆறு மாதங்களில் ஆராயப்படுமாம்.இதில் இலக்கை அடைந்தவர்கள் மட்டுமே அமைச்சுப் பதவிகளில் தொடர முடியும்.இலக்கை அடையாதவர்கள் பதவிகளிலிருந்து தூக்கப்படுவர் என்று கிடுக்கிப் பிடியும் போடப்பட்டுள்ளதாம். இதனால் பேதியாகிப் போயிருக்கிறார்கள் அமைச்சர்கள்.

அதிலும் தாங்கள் இலக்கை அடைய முடியாதபடி தமக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கும் திணைக்களத் தலைவர்களையும், இயக்குநர்களையும் மாற்ற முடியாத அளவுக்கு தமது கைகள் கட்டிப்போடப்பட்டுள்ளதாகப் புலம்புகிறார்கள் அமைச்சர்கள்.முன்பெல்லாம் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றவுடன் தமக்குக் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுக்கு தமது பிள்ளைகளையோ மாமன்மாரையோ தலைவராகவோ இயக்குநராகவோ நியமித்து விட்டு தானும் செழித்து தமது குடும்பத்தவர்களையும் செழிக்க வைத்த அமைச்சர்களெல்லாம் ,இப்போதோ 'இதற்குத் தானா ஆசைப்பட்டாய் பாலகுமாரா' போன்று விழி பிதுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.இது போதாததற்கு விரைவிலே மீண்டும் பஸில் ராஜபக் ஷ அமைச்சராகப் போகிறார் என்ற பீதி வேறு அமைச்சர்கள் பலரின் வயிற்றை கலக்கிக் கொண்டிருக்கிறது. பஸில் பதவிக்கு வந்தால் சகல அமைச்சுக்களையும் அவர் தமது கட்டுப்பட்டுக்குள் கொண்டுவந்து விடுவார். பின்னர் தங்களுக்கு எதுவுமே மிஞ்சாது என்று புலம்புகிறார்கள் அவர்கள்.



## பாவம் மைத்திரி

இந்தக் குழப்பங்களினால் குடி முழுகும் நிலைக்கு போயிருப்பவர்கள் சுதந்திரக் கட்சிக்காரர்கள்தான். நொந்து நூடில்ஸ் ஆகிப் போயிருக்கிறார் அந்தக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இந்த நாடாளுமன்றத்தில் தனக்கு சபாநாயகர் பதவி கிடைக்குமென மலையளவு எதிர்பார்ப்புடன் காத்திருந்தார் அவர். மகாவலி அமைச்சையாவது தாருங்கள் என்று தூது விட்டுப் பார்த்தார்.ஆனால் எந்தவொரு அமைச்சும் அவருக்குக் கிடைக்கவில்லை. புதிய பதவியொன்று உருவாக்கப்பட்டு, பதில் பிரதமர் பதவி அவருக்கு வழங்கப்படும் என்று 'தாஜா' பண்ணப்பட்டது. ஆனால் அதுவும் வேலைக்கு ஆகும் போல் தெரியவில்லை. ஏப்ரல் 21 தாக்குதலில் மைத்திரியார் தலை உருளப் போகும் நிலையில், அவ ருக்கு அமைச்சு பதவி கொடுத்து அவரைக் காப்பாற்ற ராஜபக் ஷக்கள் விரும்ப வில்லை என்றே செய்திகள் கசிகின்றன.

இது தவிர சுதந்திரக்கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர ஆகிய இருவருக்கு மட்டும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. அதே வேளை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை எதிர்பார்த்த சுதந்திரக்கட்சியின் பொது செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு ஐந்துசதம் கூட பெறுமதில்லாத 'பற்றிக்' இராஜங்க அமைச்சும், சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான துமிந்த திஸநாயக்கவுக்கு சூரியசக்தி, காற்று நீர் மின் கருத்திட்டமென்று உப்பு சப்பில்லாத இராஜாங்க அமைச்சும் வழங்கப்பட்டுள்ளன. தவிர எஸ்.பி.திஸநாயக்க, டிலான் பெரேரா போன்றோர் கடந்த மைத்திரி ஆட்சியில் உடலை, சுதந்திரக் கட்சியிலும் உள்ளத்தை மொட்டுக் கட்சியிலும் வைத்திருந்தனர். சுதந்திரக் கட்சியிலிருந்தபடி மைத்திரியின் மண்டையைக் கழுவி மொட்டின் பக்கம் சாய வைத்தவர்கள். ஒக்ரோபர் புரட்சி மூலம் மஹிந்தவை பிரதமராக்க வைத்து மைத்திரியின் பெயரை சந்தி சிரிக்க வைத்தவர்கள். ஆனால் இம்முறை அவர்களும் கைவிடப்பட்டு விட்டனர். மேலும் சுசில் பிரேமஜயந்த, அனுர பிரிய தர்ஷன யாப்பா, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, மஹிந்த சமர சிங்க, டி.எம்.செனவிரத்ன ,சந்திம வீரக்கொடி, அதாவுல்லா என்ற பல முன்னாள் அமைச்சர்களும் மூத்த உறுப்பினர்களும் இம்முறை சாதாரண எம்.பிக்களாக நாடாளுமன்றின் மூலையிலே முடங்கி இருக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.



## குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கும் சஜித்

ஆளும் கட்சியின் குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்க சஜித் முயல்கிறார். மொட்டுக்கட்சியில் வேண்டாப் பெண்டாட்டியாக கருதப்படும் சுதந்திரக் கட்சிகாரர்களையும் ஏனைய அதிருப்தியாளர்களையும் பிரித்தெடுத்து தம்மோடு இணைத்து அரசுக்குள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு ஆப்பு வைக்க ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறார்கள் ரெலிபோன் காரர்கள். எது எப்படியே ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டமோ இல்லையோ, ஊடகவியலாளர்களுக்கு கொண்டாட்டமோ கொண்டாட்டம்தான்.



## பாதித் தலைவர்

இது தவிர அங்கஜன் ராமநாதன் வடக்கில் வென்றபோது, ஏகப்பட்ட மாதிரி 'பில்டப்' கொடுத்த மொட்டுக்காரர்கள் தனக்கு ஒரு அமைச்சுப் பதவி நிச்சயம் தருவார்கள் என நினைத்திருந்தார். அதற்காக அவரது ஆதரவாளர்கள் வெடி எல்லாம் வாங்கி வைத்திருந்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால் அவருக்கு கிடைத்ததே மாகாண ஒருங்கி ணைப் புக் குழுத் தலைவர் பதவிதான். அதுவும் பின்னர் அவருக்குப் பாதி, ஆளுநருக்கு பாதி என்று பகிரப்பட்டுள்ளது.

இதனால் அப்பாடக்கராகி விட்டார் அங்கஜன். தற்போது அவருக்கு நாடாளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது தான். ஆனால் அந்தப் பதவியை வைத்துக்கொண்டு மக்கள் சேவை எதுவும் செய்ய முடியாது என்று ஆதங்கப்படுகின்றார். இவ்வாறாக ஏகத்துக்கும் பழிவாங்கப்பட்டுள்ள சுதந்திரக் கட்சிக்காரர்கள் வெறுத்துப் போய் நாடாளுமன்றில் தனித்து இயங்கத் திட்டமிட்டு வருகிறார்களாம். ஆனால் சுதந்திரக்கட்சி சார்பில் உள்ள 16 பேரில் பதவி கிடைக்காதவர்களே இவ்வாறு முனகிக் கொண்டு நிற்கிறார்களாம். ஆனால் பதவி கிடைத்தவர்களும்,இனிமேல் கிடைக்கலாம் என எதிர்பார்ப்பவர்களும் பம்மிக்கொண்டு போகவே பார்க்கிறார்களாம்.

## தூக்கி வீசிய விஜயதாஸ....

இவர்களில் விஜயதாஸ ராஜபக்சவின் நிலை வேறு. ரணில் -மைத்திரி ஆட்சியில் அமைச்சராக இருந்தாலும் 'நான் இங்கு நலமே. நீ அங்கு நலமா?' என்ற ரீதியில் மொட்டு கட்சியுடன் நெருக்கமாக இருந்தவர். இம்முறை 'வந்தால் ராஜாவாத்தான் வருவேன்' என்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு ஒன்றை எதிர்பார்த்து இருந்தார். ஆனால் அவருக்கு வழங்கப்பட்டதோ கல்வி இராஜங்க அமைச்சு. வெறுத்துபோன அவர் "விஜயதாஸ ராஜபக் ஷ ஒருபோதும் இராஜங்க அமைச்சராக இருக்க மாட்டான்" என 'பஞ்ச்' டயலாக் பேசிவிட்டு அமைச்சராகப் பதவி பிரமாணம் செய்யாது தூக்கி வீசி விட்டு சென்று விட்டார். தற்போது இவர்களுக்கு எல்லாம், மாகாண சபைத் தேர்தலில் மீண்டும் போட்டியிட வைத்து அவர்களை முதலமைச்சராக்க முயற்சி எடுக்கப்படும் என்று ஆசை வார்த்தை காட்டப்படுகிறது. ஆனால் அங்கே முதலமைச்சராகும் கனவோடு ஏகப்பட்ட பேர் கியூவில் நிற்பதாகச் சொல்லப்படுகிறது.






# இதென்னடா மைத்திரிக்கு வந்த சோதனை?

அரசியல் களத்தில் 2015 இல் நாயகனாகப் பார்க் கப்பட்ட மைத்திரிபால சிறிசேன 2017 க்கு பிறகு கோமாளி யாகவே மாறிவிட்டார். அதன்பிறகு வெள்ளிக்கிழமை வந்தாலே 'அதிரடி' காத்திருக்கின்றது என்பதுபோல எதிர்பாராத பல முடிவுகளை எடுத்து இலங்கை அரசியலையே அதிரவைத்த வெள்ளிக்கிழமை ராமசாமியாக உருவெடுத்தார். அதுமட்டுமல்ல பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லா தவகையில் தரமாகவும், சிறப்பாகவும் அரசியல் சம்பவங்களை அரங்கேற்றினார்.

இலங்கை அரசியலில் நாடாளுமன்ற உறுப்பினர், பிரதி அமைச்சர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர், ஜனாதிபதி எனப் பல பிரதான பதவிகளை வகித்துள்ள மைத்திரிபால சிறிசேன இன்னமும் பிரதமர், சபாநாயகர், பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூன்று பதவிகளை மட்டுமே வகிக்கவில்லை. இந்நிலையில் பொதுத்தேர்தலில் வெற்றிவாகைசூடி நாட்டில் மூன்றாவது பிரஜை என்ற அந்தஸ்துடன் சபாநாயகராக அதிஉயர்சபையில் அமர்வதற்கு ஆரம்பத்தில் மைத்திரி திட்டமிட்டார். ஆனாலும் அந்த முயற்சி கைகூடவில்லை.

இதனையடுத்து எப்படியாவது பிரதிப் பிரதமராகிவிடவேண்டும் என அவர் கனவு கண்டார். தனது சகாக்கள் ஊடாக அரச உயர்மட்டத்துக்கு தூதனுப்பினார். ஆரம்பத்தில் அதற்குப் பச்சைக்கொடி காட்டப்பட்டிருந்தாலும், தற்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளதாகவே அரசல் புரசலாக கதை அடிபடுகின்றது.

அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதைபோல பிரதி பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியைக்கூட மைத்திரி ஏற்கவில்லை. 20 ஆவது திருத்தச்சட்டமூலம் ஊடாக தனக்கு உயர் பதவி கிடைக்கும் என மைத்திரி உறுதியாக நம்புகிறார். அதனாலேயே ராஜபக்ச குடும்பத்துக்கு விசுவாசத்தைக்காட்டி வருகின்றார்.

ஆனால் தனிநபர்களுக்காக நாட்டின் அரசமைப்பை மாற்றக்கூடாது என விமல்வீரவன்ஸ உள்ளிட்ட பங்காளிக்கட்சித் தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளதால் மைத்திரியின் எண்ணம் நிறைவேறாது என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் ஏதேனும் ஒரு வழியில் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு மைத்திரிபால சிறிசேன படாதபாடுபட்டுவருகிறார். மகாநாயக்க தேரர்களை நாடி அவர்களின் ஆசியுடன் அந்தப்பதவியை பெறும் இறுதிக்கட்ட முயற்சியில் மைத்திரி இறங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. அப்படியும் கனவு பலிக்கா விட்டால், தனது மகளை ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக அரசியலில் களமிறக்குவதற்கு மைத்திரி உத்தேசித்துள்ளார். இது பற்றி சஜித்துடன் தனிப்பட்ட ரீதியில் அவர் கலந்துரை யாடியுள்ளார்.

## கிழக்குக் கனவுகள்



மாகாணசபைத்தேர்தலில் கிழக்கு மாகாணத்தையும் கைப்பற்றப்போவதாக சபதமெடுத்துள்ள பஸில் ராஜபக்ச அதற்கான வியூகங்களை தற்போதிருந்தே வகுக்க ஆரம்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கி குறுகிய காலப்பகுதிக்குள் மூன்று தேர்தல்களிலும் 'ஹட்ரிக்' சாதனை புரிந்த பஸிலிடமே மாகாண சபைகளுக்கான தேர்தலையும் வழிநடத்தும் பொறுப்பு கைய ளிக்கப்பட் டுள்ளது. வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய 7 மாகாணசபைகளையும் இலகுவில் வென்றுவிடலாம் என கணக்குபோட்டுள்ள பஸில் ராஜபக்ச, எப்படியாவது கிழக்கிலும் மொட்டு மலரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்.


இதற்காக மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை அவர் குறிவைத்துள்ளார். சிலவேளை முஸ்லிம்' காங்கிரஸ் உட்பட கிழக்கிலுள்ள சில கட்சிகளின் முக்கிய புள்ளிகளை அவர் வளைத்துபோடக்கூடும் என நம்பப்படுகின்றது. மத்தியில் ஆட்சி அதிகாரம் ராஜபக்சக்கள் வசம் இருப்பதால், பஸில் விரித்த வலையில் அவர்கள் இலகுவில் சிக்கக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

மறுபுறத்தில்கருணா, பிள்ளையான் அணிகள் தனித்து களமிறங்கினால்கூட மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சங்கமிக்ககூடும். அதாவுல்லாவின் தேசிய காங்கிரசும், ராஜபக்ச அணியுடனேயே அரசியல் பயணம் செய்கின்றது. கிழக்கில் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் சங்கமித்தால் ஆட்சியமைப்பதில் நெருக்கடி ஏற்படலாம் என்பதால் இரு அணிகளையும் கூறுபோடும் தந்திரோபாய அரசியல் நகர்வுகளும் இடம்பெற்றுவருகின்றன.

# அறிந்தும் அறியாமலும்



○ சனத்



## சுயசரிதை எழுதும் ரணில்

இலங்கை அரசியலில் 'குள்ளநரி' தந்திரம் படைத்தவராகப் பார்க்கப்படும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் தலைமைப் பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு போராடினாலும் அழுத்தங்கள் வலுப்பதால் 'அங்குசத்தை' கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அடுத்தக்கட்டம் என்னவென தீவிரமாக மந்திராலோசனை நடத்திவரும் ரணில் விக்கிரமசிங்க, செயற்பாட்டு அரசியலுக்கு 'குட்பை' கூறுவார் என சிறிகொத்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தாலும், அது பற்றி இன்னமும் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

ஆனாலும் 45 வருடங்களுக்கு மேற்பட்ட தனது அரசியல் வாழ்க்கை வரலாறு தொடர்பில் சுயசரிதையை எழுதும் பணியை ரணில் விரைவில் ஆரம்பிக்கவுள்ளார் என அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

1977 பொதுத்தேர்தல் முதல் 2020 பொதுத்தேர்தல் வரையான அத்தனை அரசியல் சம்பவங்களையும் தாங்கியே அந்தப்புத்தகம் வெளிவரவுள்ளதாகவும், போர்க்காலம், நல்லாட்சி என பல அனுபவங்களை அவர் பகிர்ந்துகொள்ளவுள்ளார் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

அரசியல்வாதியாக மட்டுமன்றி, சிறந்த சட்டத்தரணியாகவும் இலக்கியவாதியாகவும் ரணில் விக்கிரமசிங்க விளங்குவதால், எண்ணங்களுக்கு உயிர்கொடுக்கும் விதத்திலேயே எழுத்தோட்டம் அமையுமெனக் கூறப்படுகின்றது.

**யாழ்ப்பாணத்தில் அரியாலை தேவாலயத்துக்கு வந்த சுவிஸ் போதகரால் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் வலிக்கும் கணங்கள்.....**

உளவாளி

யாழ்ப்பாணத்துக்கு ஆராதனைகளுக்கு வந்த சுவிஸ் மதபோதகருடன் இணைந்து செயற்பட்டிருந்த உள்ளூர் மதகுரு மற்றும் அரியாலையைச் சேர்ந்த குடும்பப்பெண் ஆகியோர் கொரோனாவால் தாங்கள் பட்டபாடுகளை வேதனையோடு இங்கு பதிவு செய்கின்றனர். அவர்களின் கோரிக்கையின் படி பெயர் விவரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

# கொரோனா கொடுங்கனவு காலத்தில்.....!



## கொரோனாவிலிருந்து மீண்டுவந்த போதகரின் கண்ணீர்க்கதை

எங்களுடைய தேவாலயத்தில் அன்றைக்கு நான் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டிருந்தேன். அப்போது யாழ் .பொலிஸ் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த ஒருவர் தொலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டு "சுவிசில இருந்து வந்த உங்கட போதகருக்கு கொரோனாவாம். பேஸ்புக்ல போட்டிருக்கு தெரியுமா?" எனக் கேட்டதும், எனக்கு உலகமே சுற்றுவதைப் போலிருந்தது. பரபரப்போடு போனை எடுத்துப் பார்த்தேன். பேஸ்புக் ,வட்சப் என எல்லாவற்றிலும் சுவிஸ் போதகர் பற்றிய செய்திகளே நிறைந்திருந்தன. சிறிது நேரத்தில் சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் தொடர்புகொண்டு பணிமனைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். "பரிசோதனை செய்ய வேண்டி இருப்பதால் வேறு இடத்துக்கு செல்ல வேண்டும் " என அவர் கண்டிப்பான குரலில் கூறினார்.எனக்கு அதில் உடன்பாடு இருக்கவில்லை.

"எனக்கு உடலில் எந்த மாற்றமும் இல்லை,அதனால் பரிசோதனை தேவையில்லை" என நான் மறுத்தேன்.

பலாலியில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்து சென்றனர்.அங்கே கொண்டு செல்வதற்கு முன்னரும் சரி அங்கு தனியிருந்த போதும் சரி எந்தவிதமான உடல்நிலை மாற்றங்களும் எனக்கு ஏற்படவில்லை.இதனால் எனக்கு கொரோனா தொற்றியிருக்காது என்றே பெருமளவு நம்பினேன் .விரைவில் வீடு சென்றுவிடலாம் என் நாள்களை எண்ணிக்கொண்டிருந்தேன். இருப்பினும் என் நம்பிக்கை நீண்டநாள் நீடிக்கவில்லை. அங்கு நடத்தப்பட்ட சோதனைகளில் எனக்கு கொரோனா தொற்றியிருப்பதாகச் சொன்னார்கள்.என் வாழ்வே இருண்டுவிட்டது போல நிலைதடுமா

> **குழந்தைக்கு மருந்து தந்தாலும் கொரோனா தொற்றிவிடுமா?**

றினேன். உடனேயே என்னைப் பொலனறுவையில் உள்ள கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பொலனறுவையில் இருந்த போது நாளடைவில் உடல் நிலையில் மாற்றங்கள் தென்பட்டன. காய்ச்சல், தலையிடி, தொண்டை நோ என ஒவ்வொரு நாளும் உபாதைகள் பெருகின. அங்கும் கொரோனாச் சோதனையில் தொற்று இன்னும் உறுதியானது. எல்லாமே முடிந்துவிட்டதாகவே எண்ணினேன். மனதில் பெரும் பயம்... ஏதோ பாதாளத்துக்குள் வீழ்வது போன்ற அச்சம்.. "இனி எப்போது என் மனைவி பிள்ளைகளை காண்பேன்? அவர்களைக் காணாமலே எனக்கு ஏதாவது நடந்துவிடுமோ ?"என்ற அச்சம் வாட்டி வதைத்தது. ஆனால் மருத்துவர்களும், தாதியர்களும் பக்கபலமாக இருந்தனர்.

"நீங்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றினால் இதைச் சுகப்படுத்துவது சாதாரண விடயம். " என அவர்கள் ஆறுதல்படுத்தினர். அந்த ஆறுதலும், வீட்டுக்கு செல்லவேண்டும் என்ற உந்தலும் ஒரு மனோதைரியத்தை அளித்தன. சரி, கொரோனாவா? நானா? பார்த்துவிடுவோம் என்ற சவாலில் இறங்கினேன்.

ஒரு தடவையில் மாத்திரம் 14 குளிசைகள் உட்கொள்ள வேண்டும் . மருந்து குடித்து குடித்தே வயிறு வலிப்பது போலவும், கழுத்துப் பகுதியில் கடும் எரிவுத்தன்மையும் ஏற்பட்டன. என்றாலும் மனதைத் தேற்றிக்கொண்டு குளிசைகளைத் தவறாமல் போட்டு வந்தேன். ஆனால் என் மனவுறுதியைக் குலைக்கும் ஒரு சம்பவம் அங்கு நிகழ்ந்தது. அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் கொரோனாவால் திடீரென உயிரிழந்தார் . அவ்வளவுதான். சில நாட்களாக நான் கட்டியெழுப்பிய மனத்தைரியம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டது. நானும் கொரோனாவுக்கு இரையாகிவிடுவேனோ என ஒவ்வொரு கணமும் எண்ணி எனக்குள் குமைந்து கொண்டேன்.

### 1 தடயத்தை தேடி...

அந்த மன அழுத்தத்தில் இருந்து மீள்வதற்குள் அடுத்த அடி சமூக வலைத்தளங்கள் மூலம் விழுந்தது. சிகிச்சை யின் போது நான் தனிமைப்படுத்தப்பட்டதால், பொழுதைப் போக்காட்ட சமூக வலைத்தளங்களைப் பர்வையிடுவதுண்டு. இந்த நிலையில் என்னையும், நான் சார்ந்த மதப்பிரிவையும் தாக்கி பல மோசமான பதிவுகள் அதில் இருந்தன. அது எனக்கு இன்னும் மனவுளைச்சலைக் கொடுத்தது. அது போதாதென்று 'கொரோனாவால் நான் இறந்துவிட்டதாக' ஒருநாள் சமூக வலைத்தளங்களில் பலர் விழுந்தடித்துக் கொண்டு பதிவிட்டு, உயிரோடு எனக்குச் சமாதியே கட்டிவிட்டார்கள். மனதளவில் இந்தப் பதிவுகளால் நான் ஏறக்குறைய நடைப்பிணமாக மாறிவிட்டேன்.

படிப்படியாக எனது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதை என்னால் உணரமுடிந்தது. ஒரு மாத காலமாக வழங்கப்பட்ட சிகிச்சையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் உடலிருந்து கொரோனா ஒழிந்துவிட்டதை உறுதிப்படுத்தின. அதன் பின்னரே மறுபிறவி எடுத்தவனைப் போல வீடு வந்து சேர்ந்தேன்.

நான் கொரோனாவோடு அவதிப்பட்ட அதே நேரத்தில் வீட்டிலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட எனது குடும்பத்தவர்கள் எந்தவித உணவுபொருட்களையும் பெற்றுக்கொள்ள முடியாமல் பசியோடு போராடினர். பின்னரே கிராம சேவையாளர்,சுகாதார உத்தியோகத்தர்,மானிப்பாய் பொலிஸார் உணவுப்பொருட்களை கொடுத்து உதவியுள்ளனர். நான் வீடு வந்த பின்னரும், சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படவேண்டியிருந்தது. அப்போதும் என்னையும், என் குடும்ப உறுப்பினர்களையும் பலரும் தீண்டத்தகாதவர்கள் போலப் புறக்கணித்தனர்.

ஒருநாள் என்னுடைய குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை.


சுயதனிமைப்படுத்தலில் இருந்ததால், மருந்து வாங்க நான் வெளியில் செல்லமுடியாது. அதனால் அயல் வீட்டில் வசிக்கும் பார்மசி உரிமையாளரான . உறவினருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

" என் பிள்ளைக்குச் சுகமில்லை, நானும் வெளியில் செல்லமுடியாது. அதனால் நான் உங்களுக்கு , என்னென்ன மருந்துகள் தேவை என்பதைப் பட்டியலிட்டு குறுஞ்செய்தியூடாக அனுப்புகிறேன். நீங்கள் அந்த ,மருந்துகளையும், பற்றுச்சீட்டையும் எங்கள் வீட்டு மதிலில் வைத்தால் நான் எடுத்துக் கொள்வேன். அதற்குரிய பணத்தை என் நண்பனூடாக அனுப்பிவைக்கிறேன்" என்று சொன்னேன். ஆனால் மறுமுனையில் எந்தப் பதிலுமில்லை. உடனேயே அழைப்பை அவர் துண்டித்து விட்டார். குழந்தையின் வருத்தத்துக்கு மருந்து கேட்டதுகூட ஒரு குற்றமா என எண்ணி அழுதேன்.

பின்னர் சுகாதார உத்தியோகத்தர் மருந்துப் பொருட்களை வாங்கிவந்து தந்தாலேயே, என் பிள்ளை உயிர் பிழைத்தது.

எங்கள் வீட்டுக்கு அருகில் இருந்தால் தங்களுக்கும் கொரோனா வந்துவிடுமென்ற அச்சத்தில் சிலர் தங்கள் வீட்டை விட்டே வேறு இடங்களுக்கும் சென்றுவிட்டனர்.

இப்போதும் கடைகளுக்குச் சென்றால் சிலர் முகத்துக்கு நேரேயே" இங்கே நீங்கள் இனிமேல் வர வேண்டாம்' என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் என்னைக் கண்டதும், ஏதோ பேயைக் கண்டது போல அவசரமாக முகக்கவசங்களை அணிந்து கொண்டு அங்கிருந்து தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடுகிறார்கள். அவ்வளவு ஏன், நீண்டநாள்களாக தலைமுடி வெட்டததால், அதை வெட்டுவதற்காக பல சலூன்களுக்குச் சென்றேன். ஆனால் பல சலூன்களில் எனக்கு முடி வெட்டமுடியாது என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள். கடைசியில் ஒருவர் "வாருங்கள்.. என்னுடைய சகோதரனுக்கு கொரோனா வந்தால், இப்படி ஒதுக்கி வைக்கமாட்டேன் " என்று கூறி எனக்கு முடி வெட்டி விட்டார். ஒருவர் கொரோனாவல் குணமடைந்த பின்னரும் அவரைத் தீண்டத்தகாதவராக எண்ணி, தொடர்ந்தும் புறக்க ணிப்பது, நோயின் தாக்கத்தால் பட்ட வேதனையை விட அதிக வலியைத் தருகிறது.



# “குடும்பத்தோடு சுட்டுக் கொல்லப்போகிறார்களோ?”

2

## ஒரு குடும்பப்பெண்ணின் திக்...திக்...அனுபவம்

எனக்கு நான்கு பிள்ளைகள். நாங்கள் அரியாலையில் பில தெனியா தேவாலயத்துக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடு படுவது வழக்கம். வெளிநாட்டிலிருந்து வந்து நின்ற போதக ருக்கு உதவிகள் செய்ய என்னுடைய மகன் ஒருவர் அங்கு சென்று வந்தார். பின்னர் குறித்த போதகருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாக அறிந்தபோது நாங்கள் கடும் பயத்துடனேயே இருந்தோம் . இந்தநேரம் போதகருக்கு உத விக்காக சென்றுவந்த என்னுடைய மகனுக்கு காய்ச்சல் .. இருமல் எனத் திடீரென நோய்க்குறிகள் தோன்றின. எங்க ளுக்கு பயம் மேலும் அதிகரித்தது. நோயால் அவதிப்பட்ட மகன் வைத்தியசாலைக்குச் சென்றார்.

அங்கு பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்றியி ருப்பது தெரியவந்தது. தொலைபேசியில் தொடர்புகொண்ட சுகாதார ஊழியர் ஒருவர் “குடும்பத்தில் உள்ள அனைவரும் தயாராக இருங்கள். தனிமைப்படுத்தல் முகாமுக்கு செல்ல வேண்டும்” எனத் தெரிவித்தார். எங்களுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. அன்று இரவு முழுவதும் நித்திரை வர மறுத்தது. காலை இராணுவத்தினர், பொலிஸார் எங்கள் வீட்டுக்கு வர அம்புலன்ஸ் வண்டியும் வந்து சேர்ந்தது. பய மும் சோகமும் அழுகையாகப் பீறிட்டன.

அழுதபடியே நானும் நான்கு பிள்ளைகளும் அம்புலன்ஸ் வண்டியில் ஏறினோம். எங்கள் அனைவரையும் குடும்பத் தோடு சுட்டுக் கொல்லப்போகிறார்கள் என்பதே எங்கள் அழு கைக்கும் பயத்துக்கும் முக்கிய காரணம். ஏனெனில் “வெளி நாடுகளில் கொரோனா தொற்றியவர்களை கடலுக்குள் தள்ளி கொன்று விடுகிறார்கள்.. சுட்டும், உயிருடனும் புதைத்து விடுகிறார்கள் ”என சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட செய்திகளைப் பார்த்திருந்தோம். அதனால் அப்படி எங்க ளையும் எங்கோ ஒரு இடத்துக்கு அழைத்துச் சென்று, குடும் பத்தோடு கொன்றுவிடுவார்களோ என்ற பயத்தில் உடல் நடுங்கத் தொடங்கியது. ஆனால் நாங்கள் பயந்தது போல அப்படி எதுவும் நடக்காமல் எங்களைப் பலாலி தனிமைப் படுத்தல் முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு போய் இறங்கிய பின்னர்தான் கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தோம். பின்னர் அங்கே வைத்தியர்கள் மற்றும் தாதி யர்களது கவனிப்பினால் நாம் நிச்சயம் குணமடைந்து வீடு செல்வோம் எனும் நம்பிக்கை பிறந்தது.

பின்னர் பரிசோதனைகளில் எங்களுக்கு கொரோனா இருப் பது உறுதியானது.

தொற்று உறுதியானதை அடுத்து பொலனறுவை வெலிக்கந்த கொரோனா தொற்று வைத்தியசாலைக்கு அனுப்பப்பட் டோம். ஒவ்வொரு நாளும் பயத்துடன் கழிந்தது. விரைவாகக் குணமடைய வேண்டும் என்று இறைவனை வேண்டியபடி இருந்தேன். 20 நாள்கள் சிகிச்சையின் பின்னர் பூரண குணம டைந்ததை அடுத்து வீட்டுக்கு அழைத்துவரப்பட்டோம். வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்தவேளை மேற் கொண்ட பரிசோதனையில் மீண்டும் எமக்கு கொரோனா தொற்று இருப்பதாக கூறியபோது வானமே தலையில் இடிந்து வீழ்ந்தது போல் இருந்தது. பின்னர் மேற்கொண்ட பரிசோதனையில் அது இறந்த கொரோனா செல்கள் என்று கண்டுபிடித்தனர். அப்போதுதான் போன உயிர் திரும்ப வந் தது போல் இருந்தது.

இப்போது வெளியில் நடமாட அனுமதிக்கப்பட்டிருக்கின் றோம் . இரண்டு பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கின்றனர். அங்கு எந்தவித பாகுபாடுகளும் இல்லாமல் படிக்கின்றனர். கடைகளுக்கு செல்லும்போதுதான், எங்களைக் கண்டதும் சிலர் முகக்கவசம் அணிவதும் தள்ளி நில்லுங்கள் என சொல் வதும் மனதுக்குக் கவலையளிக்கிறது.. ஆனால் பெரும்பா லானவர்கள் அன்புடனும் அக்கறையுடனும் நடந்துகொள் கின்றனர். கொரோனா தொற்றால் நாம் வருந்திய வேளையில் எமக்கு கருணையுடன் சிகிச்சையளித்த வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் நாங்கள் எப்போதும் நன்றி சொல்லக் கட மைப்பட்டிருக்கின்றோம்.

குறித்த போதகருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாக அறிந்தபோது நாங்கள் கடும் பயத்து டனேயே இருந்தோம் . இந்தநேரம் போதகருக்கு உதவிக்காக சென்றுவந்த என்னுடைய மகனுக்கு காய்ச்சல்... இருமல்...

◯ மின்னல்



## தர்மத்துக்கு மரியாதை


ஒருமாதிரி யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் சிறிசற்குண ராஜா பதவியேற்றுவிட்டார். அவர் இம்முறை யும் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்படு 'வாரா என்ற சந்தேகம் பரவலாக இருந்தது. ஏனெனில், கடந்த காலங்களிலும் அவர் இப் படி துணைவேந்தர் தெரிவில் முன்னணியில் இருந்த போதிலும், சிலபல உள்ளக அரசியல் தகிடுதத்தங்களால் அவருக்குப் பின்னால் நின்றவர்களே தெரிவு செய்யப்பட் டிருந்தார்கள். என்றாலும் மனம் தளராத விக்கிரமாதித்தனாக தொடர்ந்தும் அவர் போராடியதன் விளைவாக இப்போது அவருக்கு அந்தப் பதவி கிடைத்துள்ளது.

அவர் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட செய்தி கேட்ட தும் மாணவர்கள் பட்டாசு கொளுத்தி, கேக் வெட்டிக் கொண்டாடுமளவுக்கு அவர் மாணவர்களின் மனதையும் வென்ற ஒரு நிர்வாகி என்பது நிரூபணமாகியுள்ளது. கடந் தகாலங்களில் மாணவர்கள் மீது இராணுவ எதேச்சாதிகாரம் பிரயோகிக்கப்பட்ட சமயங்களில் மாணவர்களுக்காக துணிந்து குரல் கொடுத்தவர்களில் பேராசிரியர் சிறி சற்கு ணராஜாவும் ஒருவர்.

அதனாலேயே அவர் துணைவேந்தராக வரக்கூடாது என்று பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. தர்மத்தின் வாழ்வு தனைச் சூது கவ்வினாலும் கடைசியில் மீண்டும் தர்மமே வென்றுள்ளது. வாழ்த்துக்கள் புதிய துணைவேந்தருக்கு!



## திரடி அரங்கு



## அழகாக்குவது அழகல்ல

தென்மராட்சியில் ஒரு பிரபலமான ஆரம்பப்பாடசாலையில் நடந்த விடயம் இது. அங்குள்ள தரம் 1,2 ஆகிய வகுப்பறைகளுக்கு தற்போது புதிதாக வர்ணம் பூசப்பட் டுள்ளது. நல்ல விடயம் தான். ஆனால் அந்த வர்ணம் பூசலுக்காக அந்த வகுப்புகளில் கற்கும் தரம் 1 மற்றும் 2 மாணவர்களிடம் ஆளுக்கு தலா 250 ரூபா வீதம் வசூலிக் கப்பட்டுள்ளது. அந்தப்பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் செயற்படுகின்ற போதிலும், மாணவர்களிடம் தவணைக்கான வசதிக் கட்டணத்தை தவிர வேறு கட்டணங்கள் அறவிடக்கூடாது என்று அறிவுறுத்தப்பட் டுள்ள நிலையில், இப்படி மாணவர்களிடம் வர்ணப்பூச்சுக்காக 250 ரூபா அறிவி டப்பட்டமை எந்தவகையில் நியாயம் என்று கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அத்தியாவசியமான நடவடிக்கை ஒன்றுக்காக , குறிப்பாக கைகழு வும் கருவி போன்றவற்றுக்காக இப்படி பணத்தைச் சேகரித்தாலும் பரவாயில்லை. ஆனால் வெறும் அழகுபடுத்தலுக்காக இப்படி மாணவர்களின் பணத்தை ‘பெயின்ற்’ ஆக்குவது பாடசாலைக்கு அழகல்ல.



# கும்மி, கோலாட்டம்

கும்மி, கோலட்டம் ஆகியவை கிராமியப் பெண்கள் விரும்பி விளையாடும் விளையாட்டுக்களாகும். இவை ஆடல் கலைமரபுடனும் இறைவணக்கத்துடனும் தொடர்புபட்டவை. கும்மியடித்தல் பெண்களுக்கே உரிய விளையாட்டாகும். பண்டிகை நாள்களிலும் திருவிழாக் காலங்களிலும், கிராமங்களில் பெண்கள் கும்மியடித்துப் பாடுவது வழக்கம். குத்துவிளக்கு, கண்ணன் சிலை, பூக்கூடை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை நடுவில் வைத்து சுற்றி நின்று வட்டமாகக் குனிந்தும் நிமிர்ந்தும் கைகொட்டிப் பாடுவர். இதேபோல கோலாட்டத்திலும் கைகொட்டிப் பாடுவதற்குப் பதிலாக இரண்டு கோல்களால் தட்டிப் பாடுவர். ஆடலும் பாடலும் இணைந்த விளையாட்டுக்களாக இவை அமைந்துள்ளன. இந்த இரு விளையாட்டுக்களும் இன்றைய காலத்தில் அருகி, கலை நிகழ்வுகளில் மட்டும் நிகழ்த்தப்படும் ஆடற்கலைகளாக மாறியுள்ளன.






நீங்களும் எழுதலாம்

- சிறுகதை
- கவிதை
- கட்டுரை
- பத்தி எழுத்து
- ஓவியம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

தொடர்புகளுக்கு
0773165555

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.